
யுனெஸ்கோ

உலகைக் காட்டும் ஜன்னல்

# கூரியர்

ஜூலை 1967 ஆண்டுச் சந்தா ரூ. 10-50 தனிப் பிரதி ரூ. 1

# இன ஒதுக்கல் கொள்கை



2240



# உலகக்கலைக் கருவூலங்கள்

(14)

## பேசும் கரங்கள்

இவ்வாண்டு அகஸ்டி ரோடின் (1840-1917) மறைந்து ஐம்பதாண்டுகள் கடந்து போனதைக் குறிக்கிறது. இந்த ஃபிரெஞ்சு நாட்டுச் சிற்பியின் புகழ் கடந்த அரை நூற்றாண்டுகளில் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது. ஆயினும் அவருடைய வாழ்நாளில் இப்போது பொதுவாக அங்கீகரிக்கப்படும் அவரது படைப்பின் பொருத்தம் தீவிரமாக எதிர்க்கப் பட்டது. பொது மக்கள் இன்னமும் கூட சில அம்சங்களை அறிந்திராத அளவுக்கு அவரது படைப்புகள் பலதரப்பட்டவையாக உள்ளன. இந்த 'அறியாத ரோடின்'னுடைய படைப்பில் இரு வலது கரங்கள் நளினமாகச் சேர்ந்துள்ளது போன்ற எளிய சிற்பங்களும் உள்ளன. (64 × 34 × 32 சென்டிமீட்டர் அளவில் கல்லில் செதுக்கியது) முகங்களைவிடக் கரங்கள் அதிக அளவில் பாவத்தைப் பிரதிபலிப்பதாக ரோடின் கருதினார். இந்த சிற்பத்துக்கு அவர் "கதீட்ரல்" எனப் பெயரிட்டார். ஆன்மிக உயர்வுடன் தம்பதியை இணைத்துக் காட்டுவது அவரது கருத்து. கோதிக் கட்டிட வளைவில் இதன் உன்னதமான சின்னம் புலப்படுத்தப்பட்டுள்ளது என்பது அவர் கருத்து.

போட்டோ © ஸ்பாடெம், பாரிஸ் முஸ்ஸி ரோடின்.

CONNEMARA PUBLIC LIBRARY
19 AUG 1967
MADRAS



# அறிவுத் துறைப் பணிக்கு ஆன்றோர்கள் வரவேற்பு

**கலாசார, விஞ்ஞானத் துறையில் அரும்பணியாற்றி வரும் யுனெஸ்கோ கூரியர் தமிழில் முதன் முறையாக வெளிவருவதைப் பாராட்டி வந்துள்ள வாழ்த்துச் செய்திகள்.**

**திரிகுண சென்,**
***கல்வி அமைச்சர், இந்தியா.***

புது டில்லி,
*4-7-1967.*

யுனெஸ்கோ 'கூரியர்' தமிழில் வெளியிடப்படுவதை வரவேற்கிறேன். 'கூரியர்' ஏற்கனவே ஆறு முக்கிய ஐரோப்பிய மொழிகளிலும் ஜப்பான், அரபு மொழிகளிலும் வெளியிடப்படுகிறது. இப்போது ஹிந்தி, தமிழ்ப் பதிப்புகள் சேர்ந்துள்ளன. அறிவு வளர்ச்சிக்குரிய உலகின் பிரதான பத்திரிகைகளில் 'கூரியர்' ஒன்று. அது உண்மையான சர்வதேச வெளியீடு. யுனெஸ்கோவின் மனிதாபிமான உணர்வைப் புலப்படுத்தி எல்லா மக்களுடையவும் கலாசாரங்களின் சிறந்த அம்சங்களைப் பரப்பவும் பரிமாறிக்கொள்ளவும் பாடுபடுகிறது. மனித உரிமைகளை மதிக்கவும் தனி நபருடைய கௌரவத்தை உயர்த்தவும் சர்வதேசக் கலாசார ஒத்துழைப்புக்கும் உதவுகிறது. இந்தியாவின் தேசிய மொழிகளில் ஒன்று என்பதுடன், அதன் வழியில் ஒரு சர்வ தேச மொழியாகவும் உள்ள தமிழ் மொழியில் 'கூரியர்' இப்போது வெளி வருவது எல்லாவிதத்திலும் பொருத்தமானதாகும்.

சர்வதேசக் கூட்டுறவு, உலக சமாதானம் ஆகிய யுனெஸ்கோவின் லட்சியங்களைப் பரப்பும் பணியில் தமிழ் 'கூரியர்' வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**திரிகுண சென்**

**சி. என். அண்ணாதுரை,**
***முதல் அமைச்சர், தமிழ் நாடு.***

சென்னை,
*20-7-1967.*

யுனெஸ்கோவின் பத்திரிகையான 'கூரிய'ரின் தமிழ்ப் பதிப்பு பல்வேறு நாடுகளையும் அவற்றினுடைய சமூக, கலாசார, அரசியல் பிரச்னைகளையும் காண்பதற்கு ஒரு வாய்ப்பை நல்கும். இதன் மூலம் 'கூரியர்' இப்பிரச்னைகளை விரிவான கண்ணோட்டத்தில் பார்த்து, நன்கு புரிந்து கொள்ள தமிழக மக்களுக்கு உதவும். தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் இப்பதிப்பை வெளியிட முன்வந்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். எல்லா வெற்றியும் கிட்ட வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**சி. என். அண்ணாதுரை**

**மால்கோம் எஸ். ஆதிசேஷய்யா,**
***ஆக்டிங் டைரக்டர் ஜெனரல், யுனெஸ்கோ.***

பாரிஸ்,
*10-7-1967.*

ஒருவர் மற்றவருடைய வழிகளையும் வாழ்க்கையையும் அறிந்து கொள்ளாதது வரலாறு முழுவதும் துவேஷம், சந்தேகம், நம்பிக்கையின்மை ஆகியவைகளாகப் புலப்பட்டுள்ளன. போருக்கு வழி வகுத்த கருத்து வேறுபாடுகளுக்கு அடிப்படையாகப் பெரும்பாலும் இவைதான் இருந்து வந்துள்ளன. இன்று அத்தகைய அறியாமையும், தவருகப் புரிந்துகொள்வதும் முன்னெப்போதையும்விட அமைதிக்குப் பேரபாயங்களாகும். மோதல் ஏற்படுத்தும் அம்சங்களைப் புரிந்து கொள்ளுதலும் அவற்றை அகற்றுவதற்கான முயற்சியும் உலக மக்களிடையே மேலும் சுமுகமான உறவு நிலவ உதவ முடியும். சர்வதேச உணர்வாகிய இந்தக் குறிக்கோளுக்கும் மனிதர்களிடையே உறவில் ஓர் புதிய உணர்வை யூட்டுவதற்கும் யுனெஸ்கோ 1946ல் ஏற்பட்டது முதல் பாடுபட்டு வருகிறது.

மக்கள் பரஸ்பரம் அறிந்து கொள்வதற்கான இந்தப் புதிய உணர்வை வளர்க்க ஏற்பட்டது யுனெஸ்கோ 'கூரியர்'. இருபதாண்டுகளாக வெளிவரும் அது ஒவ்வொரு மாதமும் 120 நாடுகளிலுள்ள 15 லட்சம் பேர்களுக்கு மேல் படிக்கப் படுகிறது. பத்திரிகைகள் உலகில் தனக்கென ஒரு விசேஷ இடத்தை அது தேடிக் கொண்டுள்ளது.

இப்போது பத்து மொழிகளில் வெளிவரும் இந்த சர்வதேசப் பத்திரிகையின் ஹிந்தி, தமிழ்ப் பதிப்புகளின் ஆரம்ப இதழ்களைப் பெருமையுடன் வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியுள்ளது.

இந்த இரு புதிய பதிப்புகள் இந்தியாவுக்கு உலகை அறிந்துகொள்ள மற்றொரு வாய்ப்பை அளித்துள்ளது. பல்வேறு பண்பாடுகளையும் நாகரிகங்களையும் காணவும் இந்தியாவின் கலாசார, சமூக அம்சங்களை இந்த வெளியீட்டில் இணைக்க யுனெஸ்கோவுக்கு ஒரு வாய்ப்பளிக்கவும் முடிகிறது.

இந்திய மக்களிடையே தமிழ், ஹிந்தி பதிப்புகள் நல்ல வரவேற்பைப் பெறும் என நம்புகிறேன். இந்தியர்களுடைய சர்வதேச உணர்வும் ஒத்துழைப்பும் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒன்று.

**மால்கோம் எஸ். ஆதிசேஷய்யா**

**பிரேம் கிர்பால்,**
***செக்ரடரி ஜெனரல்***
***யுனெஸ்கோவுக்கான இந்திய தேசியக் கமிஷன்***

புது டில்லி,
*4-7-1967.*

யுனெஸ்கோ 'கூரியர்' தமிழ்ப் பதிப்பை வெளியிடும் தென்மொழிகள் புத்தக டிரஸ்டை பாராட்டுகிறேன். உலகின் சிறந்த கலாசார வெளியீடுகளில் 'கூரியர்' ஒன்று. சர்வதேசக் கூட்டுறவு, நாடுகள், மக்களிடையே அறிவுப் பரிமாற்றம் ஆகிய யுனெஸ்கோவின் லட்சியங்களைத் தெளிவாக அது வலியுறுத்தி வந்துள்ளது. பொருளாதார, சமூக வளர்ச்சியில் கல்வி மற்றும் விஞ்ஞானத்தின் பங்கு, இளைஞர்க்குரிய நடவடிக்கைகளை வளர்ப்பது, எல்லா மனித கலாசாரங்களுடையவும் ஐக்கியம் ஆகிய அம்சங்கள் 'கூரியர்' இதழ்களில் பிரதானமாக இடம் பெற்று வருகின்றன. யுனெஸ்கோவின் அடிப்படை நோக்கத்தை 'கூரியர்' புலப்படுத்துகிறது. சமாதானத்துக்கான உறுதியை மக்களுடைய உள்ளத்தில்தான் ஏற்படுத்த வேண்டும் என்பதை அதன் ஸ்தாபகர்கள் வலியுறுத்தியுள்ளனர். 'கூரியர்' ஏற்கனவே ஆறு ஐரோப்பிய மொழிகளிலும் இரண்டு ஆசிய மொழிகளிலும் வெளியிடப்படுகிறது. 1966ம் ஆண்டு அக்டோபர் நவம்பரில் நடைபெற்ற யுனெஸ்கோவின் 14வது பொது மாநாட்டுக்குச் சென்ற இந்திய தூதுகோஷ்டியின் முயற்சியின் விளைவாகவே 'கூரியர்' பத்திரிகையை ஹிந்தி, தமிழ் ஆகிய மொழிகளிலும் வெளியிட இப்போது யுனெஸ்கோ ஒப்புக்கொண்டுள்ளது.

'கூரியர்' வெளிநாட்டுப் பதிப்புகள் ஏற்படுத்தியுள்ள உயர்ந்த தரத்தை தமிழ்ப் பதிப்பும் நிலைநாட்டும் என்பதிலும் இந்தியாவுக்கும் யுனெஸ்கோவின் லட்சியங்களுக்கும் அது உதவும் என்பதிலும் எனக்கு ஐயமில்லை.

**பிரேம் கிர்பால்**

யுனெஸ்கோ

உலகைக் காட்டும் ஜன்னல்

# கூரியர்

ஜூலை 1967

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

**யுனெஸ்கோவினால் பதினோரு பதிப்புகளாக வெளியிடப்படுகிறது**

ஆங்கிலம்
ஃபிரெஞ்சு
ஸ்பானிஷ்
ரஷ்யன்
ஜெர்மன்
அராபிக்
அமெரிக்க ஐக்கிய நாடு
ஜப்பானிஸ்
இத்தாலியன்
ஹிந்தி
தமிழ்

*விற்பனை, வினியோக அலுவலகம் :*
441, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-10.

*ஆண்டுச் சந்தா ரூ. 10.50*

யுனெஸ்கோ கூரியர், ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. ஆகஸ்ட்-செப்டம்பரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) காப்பிரைட் அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு பிரசுரித்துக் கொள்ளலாம். அவ்வாறு பிரசுரித்த இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும் போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். காப்பிரைட் அல்லாத போட்டோக்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

*ஆசிரியர் அலுவலகம் :*
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினாய்
பாரிஸ்-7, ஃபிரான்ஸ்.
*பிரதம ஆசிரியர் :*
ஸாண்டி காஃப்ளர்
*உதவிப் பிரதம ஆசிரியர் :*
ரெனி காலோஸ்
*பிரதம ஆசிரியருக்கு உதவியாளர் :*
லூஸியோ அட்டினெல்லி
*நிர்வாக ஆசிரியர்கள் :*
ஆங்கிலப் பதிப்பு: ரொனால்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு: ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு: அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு: விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு: ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு: அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு: ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்யோ)
இதாலியப் பதிப்பு: மரியா ரெமிட்டி (ரோம்)
இந்திப் பதிப்பு: ஏ. சந்திரஹாஸ்
தமிழ் பதிப்பு: எஸ். கோவிந்தராஜுலு (மதராஸ்)
*ஆராய்ச்சி:* ஓல்கா ரோடல்
*அமைப்பு, சித்திரம்:* ராபர்ட் ஜாகுமின்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்படவேண்டும்.

பக்கம்

4 **தென்னாப்பிரிக்காவில் இன ஒதுக்கல்**

7 **பிளவுபட்ட நாடு**
இன ஒதுக்கல் கொள்கை குறித்து யுனெஸ்கோ யாதாஸ்து

**பண்பாட்டின் மீது இன ஒதுக்கல் கொள்கையின் விளைவு**

14 **இன ஒதுக்கல் கொள்கையின் விலை**
—ஆலன் பேடன்

20 **தடை செய்யப்பட்ட உரையாடல்**
—லூயி என்கோஸி

23 **உள்ளக்கொதிப்பின் வித்துகள்**
—டெனிஸ் புருடஸ்

24 **சிதையும் உள்ளங்கள்**
—ரொனால்ட் சேகல்

27 **தளைப்பட்ட ஆன்மா**
—பிரேய்டன் பிரேய்டன்பாக்

30 **தென்னாப்பிரிக்காவில் வீணாக்கப்பட்ட மனித சக்தி**
சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஆய்வு

32 **இன ஒதுக்கல் பற்றிய யுனெஸ்கோ யாதாஸ்திலிருந்து**

33 **இன ஒதுக்கல் கொள்கையும் திருச்சபையும்**

2 **உலகக் கலைக் கருவூலங்கள்**
கரங்கள் (அகஸ்டி ரோடின்)



Photo © Holmes - Lebel - Ernest Cole

**அட்டைப் படம்**

''மனித ஆளுமையின் முழு வளர்ச்சிக்கு உதவுவதாக கல்வி இருக்க வேண்டும்.''

மனித உரிமைகள் பிரகடனத்தின் 26 வது பிரிவு.

''சுதேசிகளுக்கு நாம் ஏட்டுக் கல்வியை அளிக்கக் கூடாது......அந்தப் பள்ளிகளில் படிக்கும் சுதேசிகள் பெருமளவுக்கு நாட்டில் தொழிலாளியாக இருக்க வேண்டும் என்று உணரும் விதத்தில் நாம் நமது பள்ளிக்கூடங்களை நடத்த வேண்டும்.''

திரு. ஜே. என். லீ ருக்ஸ், தென்னாப்பிரிக்க குடியரசின் தற்போதைய விவசாய அமைச்சர் பிரதிநிதிகள் சபையில் பேசியது (ஏப்ரல் 2, 1945).

# தென்னுப்பிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கை

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை மார்ச் மாதம் 21ம் தேதியை "இனப் பாகுபாட்டை அகற்றுவதற்கான சர்வதேச தின"மாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. இந்த சர்வதேச தினத்தைப் பிரகடனப் படுத்திய அதே தீர்மானத்தில் - தென்னுப்பிரிக்காவிலுள்ள ஷார்ப்வில்லியில் நடைபெற்ற படுகொலை நிகழ்ச்சியின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் நாள் இது—ஐ. நா. பொதுச் சபை, இன வேற்றுமை அல்லது இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப் பிடிக்கும் நாடுகளை எல்லாவிதமான இன வேறுபாட்டையும் அகற்றுவதற்கான ஐ. நா. பிரகடனத்தை ஏற்று நடக்குமாறும் மனித உரிமைகள் பிரகடனத்தை மதித்து ஏற்குமாறும் மீண்டும் கேட்டுக் கொண்டுள்ளது.

இவ்வாண்டுத் தொடக்கத்தில், ஜனவரி 18ந் தேதி தென்னுப்பிரிக்காவில் கல்வி, விஞ்ஞானம், பண்பாடு, செய்தி ஆகிய துறைகளில் இன ஒதுக்கல் கொள்கையின் விளைவு பற்றி ஒரு முக்கியமான யுனெஸ்கோ யாதாஸ்து நியூ யார்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையினுல் பிரசுரிக்கப்பட்டது. இந்த யாதாஸ்து அதன் இறுதி வடிவில் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் சில மாதங்களில் வெளியிடப்படும். இந்த இதழில் இந்த யாதாஸ்திலிருந்து பகுதிகளும் தென்னுப்பிரிக்காவின் கலாசார வாழ்வில் இன ஒதுக்கல் கொள்கையின் விளைவுகள் பற்றிய பல கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன. புகழ் பெற்ற தென்னுப்பிரிக்க எழுத்தாளர்களான ஆலன் பேடன், லூயி என்கோஸி, டெனிஸ் புரூடஸ், ரொனுல்ட் சேகல், பிரேய்டன் பிரேய்டன்பாக் ஆகியவர்களால் இக் கட்டுரைகள் யுனெஸ்கோ கூரியருக்கெனப் பிரத்தியேகமாக எழுதப் பட்டவையாகும்.



இன ஒதுக்கல் கொள்கையின் விளைவுகள் தென்னாப்பிரிக்காவில் கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், செய்தித் துறைகளை எவ்வாறு பாதித்துள்ளது என்பதைப்பற்றி 'யுனெஸ்கோ' (ஐ. நா. கல்வி; விஞ்ஞான, கலாசார ஸ்தாபனம்) ஒரு யாதாஸ்தைத் தயாரித்துள்ளது. இன, கோஷ்டி அடிப்படைகளில் நிகழ்கின்ற தகராறுகளுக்குப் பரிகாரமாக ஒதுக்கல் கொள்கை இருக்க முடியும் என்ற தென்னாப்பிரிக்கக் கோட்பாடு ஏற்கக் கூடியது அல்ல என்பதுடன், அங்கே பெருமளவில் இன, கோஷ்டி போராட்டம் இருந்து வருவதற்கான முக்கிய காரணமே இன ஒதுக்கல் கொள்கைதான் என்று அது கூறுகிறது.

தென் ஆப்பிரிக்க சர்க்காரின் இன ஒதுக்கல் கொள்கைகளைப்பற்றிய இந்த யாதாஸ்து இறுதி வடிவில் இவ்வாண்டு பின்னர் வெளிவரும். ஐ. நா. அசெம்பிளியின் விசேஷக் கமிட்டி பரிசீலிப்பதற்காக இதை யுனெஸ்கோ தயாரித்துள்ளது.

தென் ஆப்பிரிக்காவிலுள்ள நிலைமை பீதியை விளைவிப்பதாக இருக்கிறதென்று 'யுனெஸ்கோ' யாதாஸ்து கூறுகிறது. ஆராயப் பெற்ற பகுதிகளில் எவ்வாறு பாகுபாடுகள் அமுலாகின்றன என்பதை விவரமாக அது எடுத்துரைக்கிறது. இது இன்றைய உலகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கை அல்ல.

பல பேரைக் கலந்தாலோசித்து, அரசாங்க வெளியீடுகளின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, விஞ்ஞான ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் தென் ஆப்பிரிக்காவிலும் வெளியிலும் பிரசுரித்துள்ள அறிக்கைகளை வைத்துக்கொண்டு யாதாஸ்து உருவாக்கப்பட்டுள்ளது. அதில் 259 பக்கங்கள் இருக்கின்றன.

பாகுபாட்டுத் தன்மையுள்ள நடைமுறைகள் கல்வித் துறையில் எல்லாக் கட்டங்களிலும் காணப்படுகின்றன. சமூகத்தில் மிக இழிவான நிலையில் ஆப்பிரிக்கர் வைக்கப்பட்டுள்ளனர். சட்டங்களையும், விதிமுறைகளையும் ஆதாரமாகக் காட்டி, ஆப்பிரிக்கர் பெரும்பாலும் தமது கல்வி ஸ்தாபனங்களுக்கு வேண்டிய நிதி உதவியைத் தாமே திரட்ட வேண்டும், பெரும்பாலும் விசேஷ வரிகளின் மூலமாக அவற்றைப் பெற வேண்டும் என்ற நிலை இருந்து வருகிறது. இதனால் பள்ளிக்கூடத்தில் அவர்கள் படிக்கக்கூடிய விஷயங்களும் மிகக் குறுகிய அளவிலேயே இருக்கும். தென் ஆப்பிரிக்கக் குழந்தைகள் இன அடிப்படையில் ஒருவருடன் ஒருவர் தொடர்பின்றித் தனித்தனியாக இருப்பர். அந்தப் பள்ளிக்கூடங்களில் நெரிசல் அதிகம். ஆசிரியர்களின் எண்ணிக்கை போதாது. அவர்களுக்குத் தரப்பட்டுள்ள பயிற்சியும் சொற்பம். சமுதாயத்தில் முழு அளவில் பணியாற்றுவதற்கு வேண்டிய வாய்ப்புக்கள் ஆப்பிரிக்கருக்கும், கலப்பு நிறத்தவருக்கும், ஆசிய வமிசாவழியினருக்கும் கிடைக்க முடியாதபடி அவை தடை செய்கின்றன.

பள்ளி செல்லும் ஆப்பிரிக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் அதற்காகும் செலவு கூடுதலாகவில்லை. ஆப்பிரிக்கப் பள்ளிக்கூடங்களுக்குத் தேசிய வருமானத்தில் நிகரமாகச் செலவு செய்யும் வீதாசாரப் பங்கு குறைந்து கொண்டே வருகிறது.

பள்ளிப் படிப்பின் முதல் இரண்டு ஆண்டுகளில் 'ஷிப்ட்' முறையைக் கையாண்டு, படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை சற்று அதிகரித்துள்ளனர். குறைந்த சம்பளத்தில் மாதரை ஆசிரியப் பணிக்கு அமர்த்தும் கொள்கை கையாளப்படுகிறது. பள்ளி உணவுக்காக ஒதுக்கும் பணம் கல்வி விஸ்தரிப்புக்குப் பயன்படுத்தப்படுகிறது.

> "வெள்ளையர்" என்ற சொல் ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த மக்களைக் குறிக்க உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆப்பிரிக்க இனத்தைச் சேர்ந்த மக்களைக் குறிப்பிட தற்போது தென்னாப்பிரிக்க சர்க்கார் பயன் படுத்தும் "பன்டு" என்ற சொல்லுக்குப் பதிலாக "ஆப்பிரிக்கர்" என்ற சொல் இடம் பெற்றுள்ளது. மேற்கோள் காட்டப்படும் பகுதியில் "பன்டு" என்ற சொல் இடம் பெற்றிருந்தால் மட்டும் அது அப்படியே எடுத்தாளப் பெற்றுள்ளது. "ஆசியர்" என்ற சொல் சீனர் அல்லது இந்திய வம்சாவளியினருக்கும் "நிறத்தவர்" என்ற சொல் ஐரோப்பிய, ஆப்பிரிக்க அல்லது ஆசியப் பின்னணியுள்ள கலப்பு இனத்தவருக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த இதழில் வெள்ளையர், ஆப்பிரிக்கர், ஆசியர் போன்ற சொற்களைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாததாகிறது. இன ஒதுக்கல் கொள்கையின் இயல்புதான் இதற்குக் காரணம்.

1954ம் ஆண்டில் பள்ளி உணவுக்காக ஒதுக்கிய தொகை 17,58,960 டாலர். இது 1966ல் 98,000 டாலராகக் குறைந்து விட்டது. 1960ல் குழந்தைகளின் நிலைமையைப்பற்றி பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. ஊட்டக் குறைவினால் 60 முதல் 70 சதவீதக் குழந்தைகள் பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்பது அவற்றிலிருந்து தெரிந்தது. 50 சதவீதத்தினருக்கு வைத்திய வசதியும், விசேஷக் கவனிப்பும் தேவை. 10 சதவிகிதத்தினர் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியதாக இருந்தது. இவை எல்லாமே நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஊட்டக் குறைவின் விளைவாக எழுந்த தேக நிலைகளாகும்.

ஆரம்பக் கல்வி விரிவடைந்துள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால் அதற்கான நிதியை ஆப்பிரிக்கரே திரட்டிக் கொள்ள வேண்டும். செகண்டரி, சர்வகலாசாலைப் படிப்பில் தேக்க நிலை இருந்து வருகிறது. ஆப்பிரிக்கர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பயிற்சி பெற்ற ஆப்பிரிக்கர் ஆசிரியப் பொறுப் பேற்கின்றனர் என்பதற்கு ஆதாரம் இல்லை. நிர்வாகப் பொறுப்பும் கணிசமாக அவர்கள் கைக்கு மாறவில்லை. தம் நாட்டு சமுதாய வாழ்வில் பங்கு பெறுவதற்கான பயிற்சி ஆப்பிரிக்கருக்குத் தரப்படுவது இல்லையென்பதை தென் ஆப்பிரிக்க சர்க்காரே தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். யாதாஸ்தில் கல்வியைப் பற்றிய பகுதி முடிவாகக் கூறுகிறது: ''தகவல்களும் புள்ளி விவரங்களும் வெளிப்படையாக மெய்ப்பிக்கும் நிலைமையைவிட இனப் பாகுபாட்டின் விளைவாக ஏற்படும் தீமைகள் மிகமிக அதிகம். எந்த நிறத்தைச் சேர்ந்த குழந்தையாயினும், இந்தப் பாகுபாடு எல்லா தென் ஆப்பிரிக்க குழந்தைகளையும் பாதிக்கவே செய்கிறது. இன்றைய உலகம் ஏற்கக்கூடிய கல்வித் தத்துவம் அல்ல இது.''

ஆராய்ச்சியின் விளைவாக வெளிப்போந்த வேறு சில உண்மைகளும் யாதாஸ்தில் இடம் பெற்றுள்ளன. பொறியியல், விவசாயம் போன்ற துறைகளில் வெள்ளையர் அல்லாத நிபுணர்கள் நீக்ரோ ஒதுக்குப் பகுதிகளுக்கு மிகமிகத் தேவை. ஆனால் அத்தகைய பயிற்சிக்கான வசதி கிடையாது.

1960ம் ஆண்டில் வெள்ளையர் அல்லாத டாக்டர்கள் 130 பேரே இருந்தனர். 1800 பேருக்கு ஒரு டாக்டர் வீதம் இது தேறியது. பிரிட்டனில் இந்த வீதாசாரம் 1:1100; அமெரிக்காவில் 1:750. வெள்ளையரல்லாதாரை விஞ்ஞானச் சங்கங்கள் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று அரசாங்கம் நிர்ப்பந்தித்து வருகிறது. அவற்றில் பல இதை எதிர்த்து வந்துள்ளன.

பயிற்சி பெற்ற வெள்ளையரல்லாதார்க்குக் கூட வேலைகள் கிடைப்பது சிரமமாக இருந்து வருகிறது. விஞ்ஞானிகளாக மலரக்கூடிய வெள்ளையரல்லாதாரின் உற்சாகம் இதனால் குன்றி விடுகிறது. விஞ்ஞானப் பயிற்சியில் போதிய அக்கறையும், சாதனையும் இல்லாதபடி இது செய்துவிடுமென்று யாதாஸ்து கூறுகிறது.

வெள்ளையர், வெள்ளையரல்லாதாரிடையே உள்ள அறிவாளிகளை இன ஒதுக்கல் கொள்கை எவ்வாறு பாதிக்கிறது என்பதை யாதாஸ்து ஆராய்கிறது. பல்வேறு பண்பினரை அரசாங்கம் பிரித்து வாழ வைக்கின்ற கொள்கையால் கலாசாரத் துறையில் வெள்ளையரல்லாத தென் ஆப்பிரிக்கருக்கு எவ்வளவு சிரமங்கள் ஏற்படுகின்றன என்பதையும் விவரித்துள்ளது.

1964ல் நிறைவேறிய பன்டு சட்டத் திருத்தச் சட்டம், ஆப்பிரிக்க நீக்ரோத் தொழிலாளர் படைகள் தற்காலிகமாக நகரங்களில் வசிப்பதற்கு அனுமதி அளித்தது. ஆனால் நிரந்தரமான வாச உரிமைகளை அவர்களுக்கு அது வழங்கவில்லை. இந்தச் சட்டத்தினால் ஆப்பிரிக்கக் குடும்ப வாழ்வு பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. பெரு நகரங்களின் சுற்றுப்புறங்களில் ஆப்பிரிக்க ஆண்களின் எண்ணிக்கை இதனால் அதிகரித்துள்ளது. கணவர்களும் மனைவிகளும் இப் பகுதிகளில் சேர்ந்து வாழ்வதற்கு அரசாங்கம் அனுமதி அளிப்பதில்லை—யாதலால் குடும்ப வாழ்க்கையே தகர்ந்து போய்விடுகிறது.

டச்சு சீர்திருத்தத் திருச்சபைகளின் மகாநாடு 1950ல் கூடி, ஆப்பிரிக்கர்கள் விஷயமாகத் திருச்சபையின் கொள்கையை விளக்க முயன்றது. அப்போது நீக்ரோக்களுக்கென்று தனி குடியிருப்புப் பகுதிகளை அமைத்துக் கொடுத்துத் தீர்வு காணுகின்ற முறையை அது ஆதரித்தது. அந்நாட்டுத் தொழில் அமைப்பு முறையில் ஆப்பிரிக்கர்களின் இடத்தில் ஐரோப்பியர்கள் அமர வேண்டுமென்றும் அது சிபாரிசு செய்திருந்தது. எனினும் இன ஒதுக்கல் கோட்பாடு கிறிஸ்தவ சமயத்திற்கு உடன்பாடு உடையது அல்லவென்று அந்த மதத்தைச் சேர்ந்த பல பிரிவினர் கூறியிருக்கிறார்கள்.

தென்னாப்பிரிக்காவிலுள்ள ஆப்பிரிக்க எழுத்தாளர்களின் பிரதான நூல்கள் கண்ணியமற்றவை, ஆட்சேபகரமானவை, ஆபாசமானவையென்று கூறி தடை செய்யப்பட்டுள்ளன. அவை ஆங்கிலமொழி நூல்கள். உலகிற்கு நன்கு அறிமுகமான ஆப்பிரிக்க எழுத்தாளர்கள் இப்போது தென்னாப்பிரிக்காவிற்கு வெளியே வாழ்கின்றனர். சொந்த நாட்டில் இருப்போர் வீட்டிலே காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தென்னாப்பிரிக்காவின் நூல்நிலைய மரபு தொன்மையானது. ஆனால் இன அடிப்படையில் நூல் நிலையங்களைத் தனித்தனியாக வைத்திருக்கின்ற கொள்கையின் காரணமாக மிகப் பெரும்பாலான நூல் நிலையங்களை வெள்ளையரல்லாத தென்னாப்பிரிக்கர் அணுக முடியாமல் இருக்கின்றது.

விளையாட்டு உலகையும் இன ஒதுக்கல் கோட்பாடு பாதித்துள்ளது. ஒன்றுடன் ஒன்று சம்பந்தமுள்ள ஐந்து வெவ்வேறு துறைகளில் இன ஒதுக்கல் இருந்து வருகிறது. கலப்பினக் கோஷ்டிகள், வெவ்வேறு இனத்தவரிடையே போட்டி, வெளியே வசிக்கும் ஜில்லாக்களிலுள்ள மைதானங்களில் நடைபெறும் ஆட்டங்களில் வெள்ளையரல்லாதார் கலந்துகொள்வது, அந்நிய விளையாட்டுக் கோஷ்டிகளின் அமைப்பு, வந்து பார்ப்போர் வெவ்வேறு இனத்தவராக இருக்கின்ற நிலை ஆகிய அனைத்திலுமே பிரிவினைக்கோட்பாடு பரந்து காணப்படுகிறது.

தென்னாப்பிரிக்கக் குடியரசின் அரசியல் சாசனத்தில் பத்திரிகைச் சுதந்திரம் ஒரு அங்கமாக அமைந்திருக்கிறது. ஆனால் 1950ல் நிறைவேறிய கம்யூனிச அடக்குமுறைச் சட்டத்தின்கீழ், கம்யூனிசத்திற்குத் துணை புரிவதாகக் கருதப்படும் எதுவும் பிரசுரமாகக் கூடாது என்று சர்க்கார் தடை விதிக்கலாம். இந்தச் சட்டமானது செய்திப் பரிவர்த்தனைச் சுதந்திரத்திற்கு ஆபத்தாக அமைந்துள்ளது என்று யுனெஸ்கோ யாதாஸ்து கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட கூட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட நபர் போகக் கூடாது என்று நீதி பரிபாலன மந்திரி இச்சட்டத்தின்கீழ் உத்தரவிடலாம். சில ஸ்தாபனங்களில் எவ்வித மான பங்கும் கொள்ளலாகாதென தடை செய்யலாம். ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலம் வசிக்கலாகாது என்று எவருக்கும் தடை உத்தரவு பிறப்பிக்கலாம். ஒரு குறிப்பிட்ட வீட்டில்தான் வசிக்க வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தலாம்.

கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், செய்தித் துறைகளில் அமுலாகின்ற இன ஒதுக்கல் கோட்பாடானது, கொள்கையிலும் நடைமுறையிலும், ஐ.நா. சாசனத்திற்கு முரண்பட்டது; யுனெஸ்கோ அமைப்பு விதிமுறைகளுக்குப் புறம்பானது. மனித உரிமை சாசனப் பிரகடனத்திற்கு இசைவு இல்லாதது. ஐ.நா. கட்டுக்கோப்புக்கு உட்பட்டு, உருவாகிய சம்பிரதாயங்கள், சிபாரிசுகள், பிரகடனங்கள் ஆகியவற்றின் நியதிகளுக்கு இது மாறுபட்டது.




Photo © Ian Berry - Magnum

ஷார்ப் வில்லி நினைவாக

## தென்னாப்பிரிக்காவின் கட்டுக் கதைகள்

இரு கட்டுக் கதைகள் தென்னாப்பிரிக்காவில் பரவலாக நம்பப்படுகின்றன. யாரும் இல்லாத பிரதேசத்தில் டச்சுக்காரர்கள் வந்து குடியேறினார்கள் என்பது ஒன்று. வெள்ளையர் குடியேற்றத்தின் ஆரம்ப கால வரலாறு அப்பாவிகளான வெள்ளையர்கள் ஆப்பிரிக்கர்களால் படுகொலை செய்யப்பட்டதைக் குறிப்பிடுவது மற்றொன்று. ஆரம்ப கால யாத்ரிகர்கள் பலவிதமான கதைகளைக் கூறுகிறார்கள். "1497ம் ஆண்டு நவம்பர் 26ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கப்பற்படை துறையை அடைந்தது...பல ஆதிவாசிகள் தோன்றினார்கள்... அவர்கள் மிகவும் நட்புறவுடன் இருந்தார்கள்; அல்லது முழு நட்புறவுடன் அவர்கள் எங்களுடன் வியாபாரம் செய்ய முன்வந்தனர்...நம்முடையவர்கள் கொல்லப்பட்டது ஆப்பிரிக்கர்களுடைய கால் நடைகள் பறிமுதல் செய்யப்பட்டதற்கு பழிக்குப் பழி வாங்கியதாகும் என்பதில் ஐயம் இல்லை..."

"வகுப்பறையில் துவேஷம்" (ஜோஹன்னஸ்பர்க் 1966) என்ற நூலில் எலியனார் ஹாவர்டன் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "வெள்ளையரான விவசாயிகளை ஆப்பிரிக்க மக்கள் காரணமின்றித் தாக்குவதாக பள்ளிக் குழந்தைகளுக்கு எடுத்துச் சொன்னால்—தனிப்பட்ட தாக்குதல் பற்றிய உண்மை சரியாக இருந்தபோதிலும் மாணவர்களிடம் அது ஏற்படுத்தும் முழு விளைவும், கடந்தகால நிகழ்ச்சிகள் பற்றி அவர்கள் மனதில் படியும் வடிவமும் உண்மைக்கு மாறானதாகும். ஐரோப்பியர்களுடைய தாக்குதல் குறித்து அது கூறாமல் விட்டுவிடுகிறது; அதற்கு ஆப்பிரிக்கர்களைத் தூண்டிவிட்டதையும், அவர்கள் நாட்டை இழந்ததையும், படையெடுப்பாளர்களிடமிருந்து தமது நாட்டைப் பாதுகாக்க வீரத்துடன் அவர்கள் போராடியதையும் மறைக்கிறது."

இதுபோலவே நில உரிமையும் எல்லைச் சண்டையுடன் அதற்குள்ள உறவும் ஆரம்பகாலத் தென்னாப்பிரிக்க வரலாற்றின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். அப்படியிருந்தும் எஃப். ஈ. ஆர்பாக் ("தென்னாப்பிரிக்காவின் கல்வியில் துவேஷத்தின் சக்தி" கேப்டவுன் ஆம்ஸ்டர்டாம் 1965) டிரான்ஸ்வாலில் இளைஞர்களுக்கான எந்தப் புத்தகமும் அதை விவரிக்கவில்லை, பெரியவர்களுக்கான ஒரே ஒரு புத்தகம் மட்டும் அதுபற்றிக் கூறுகிறது என்கிறார்.

(இன ஒதுக்கல் கொள்கை பற்றிய யுனெஸ்கோ யாதாஸ்திலிருந்து.)



1960 மார்ச் 12ந் தேதி ஷார்ப் வில்லியில் துப்பாக்கிப் பிரயோகம் தொடங்கியதும் கூட்டம் சிதறுகிறது. இந்த போட்டோ எடுக்கப்பட்டு சில விநாடிகளுக்குப் பிறகு சுமார் நூறு ஆப்பிரிக்கர்கள் கொல்லப்பட்டனர். 200 பேருக்கு மேல் காயமடைந்தனர். வெள்ளையரல்லாதார் எப்போதும் 'பாஸ்'களை எடுத்துச் செல்ல வேண்டும் என விதிக்கும் சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களைக் கலைக்க போலீஸ் சுட்டது. ஐ. நா. பொதுச் சபை நிறைவேற்றிய தீர்மானம் மார்ச் 21ந் தேதியை "இன வேறுபாட்டை அகற்றுவதற்கான சர்வதேச தின"மாகப் பிரகடனப் படுத்தியது.

# பிளவுபட்ட நாடு

**கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், செய்தித் துறைகளை இன ஒதுக்கல் கொள்கை எவ்வாறு பாதித்துள்ளது என்பதைப் பற்றி யுனெஸ்கோ யாதாஸ்தி லிருந்து பின்வரும் பகுதிகள் தரப்படுகின்றன.**

தென் ஆப்பிரிக்காவில் ஆப்பிரிக்கர் ஆசியாக்காரர், ஐரோப்பியர் ஆகியோர் ஒரே பிரதேசத்தில் சேர்ந்து வாழும் சமுதாயத்தினர். இது நெடுநாளைய வரலாற்றின் விளைவு. 1652ல் நன்னம்பிக்கை முனைப் பகுதியில் ஐரோப்பியர்களின் முதல் குடியேற்றம் தோன்றிய காலத்திலிருந்து இது நீண்டதோர் வரலாற்றின் விளைவு. இந்த மூன்று பகுதியினரான மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்புடன்கூட நெடுநாள் வாழ்ந்த வரலாறு அது.

தென் ஆப்பிரிக்காவில் முதலில் குடியேறிய டச்சு நாட்டவரது வமிசாவழியினரான போயர்களுக்கும் ஆங்கிலம் பேசுகின்ற வெள்ளையருக்குமிடையே தகராறுகள் தோன்றியது உண்டு. அவற்றின் விளைவாக எழுந்ததே 'போயர் யுத்தம்'. அதில் டச்சு மொழி பேசுகின்ற ஆப்பிரிக்கானர்களை ஆங்கிலக் குடியேற்றக்காரர்கள் தோற்கடித்தனர்.

வெள்ளைக்கார சமுதாயத்தை இரண்டு பிரதான பிரிவுகளாகப் பிளவு படுத்திய அந்தப் போட்டா போட்டியிலே, இப்போது 20வது நூற்றுண்டின் மையப் பகுதியில் நாம் காண்கின்ற பயங்கரமான நிலைமையின் மூல வித்துக்கள் இருப்பதைக் காணலாம். ஆப்பிரிக்கர்கள் எண்ணிக்கையில் அதிகமானவர்கள். அவர்களுக்கு எதிராக வெள்ளையர் பல போராட்டங்களை நடத்தியது உண்டு. மலிவான உழைப்பைத் தரும் மனித சாதனம் என்று அவர்களை மதிக்கும் மனப்பான்மை இருந்துவந்தது எனவே, அவர்கள்பால், சந்தேகமும் அச்சமும் வெள்ளையரிடம் தோன்றின

வெள்ளையர், கறுப்பு நிறத்தவர் ஆகியோரும், மலாய் இனத்தவரும் சேர்ந்த ஒரு கலப்பினத் தொகுதியும் தோன்றியது. 19வது நூற்றுண்டில் நேட்டால் கரும்புத் தோட்டங்களில் உழைப்பதற்காக என்று கொண்டுவரப் பட்ட ஆசியப் பிரிவுகளும் தோன்றின.

# தனி வளர்ச்சி என்ற கட்டுக்கதை

இரண்டாவது உலக யுத்தத்தின் இறுதியில் தென்ஆப்பிரிக்காவில் மற்றோர் நிலவரம் தோன்றியது. வெள்ளையர் குடியேறி 300 வருஷமாகச் செலுத்தி வந்த ஆதிக்கத்திற்கு அவ்வப்போது அச்சுறுத்தல் தலைதூக்கியது. ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் சுதந்திர நாடுகள் தோன்றலாயின.

ஒரு மனிதனுக்கு ஒரு வோட் என்ற ஏற்பாட்டிற்கான போராட்டமே விடுதலைப் போராட்டத்தில் எடுப்பாக எழுந்த அரசியல் அம்சம். இது தென் ஆப்ரிக்க வெள்ளையரை நேரடியாகப் பாதிக்கும் தன்மையுடையதாக இருந்தது. 1910ம் ஆண்டில் தேசத்தின் அரசியல் சாசனத்தைத் தயாரித்தபோது அரசியல் வளர்ச்சியில் வெள்ளையரல்லாதார் பயனுள்ள வகையில் பங்கு பெறுகின்ற முயற்சியை வெள்ளையர் எதிர்க்கலாயினர்.

மற்றோர் அறைகூவலும் தலைதூக்கியது. மனித உரிமைகளை அமுலாக்க வேண்டுமென்ற குரல் எல்லா தேசங்களிலும் ஒலித்தது. 1948ம் ஆண்டில் 'மனித உரிமைகளின் பிரகடனம்' என்பதை ஐ.நா. வெளியிட்டதன் மூலம் இந்தக் கோரிக்கை மேலும் ஊக்கம் பெற்றது. சமூக, பொருளாதாரத் துறைகளில் சம வாய்ப்புப் பெற வேண்டுமென்ற கோரிக்கையாகவே மக்கள் இதற்குப் பொருள் கொண்டனர்.

வெள்ளையரின் ஆதிக்கத்தைப் பாதுகாப்பதாகவும், அவசியமாயின் பலப்படுத்துவதாகவும் வாக்களித்து, அந்த அடிப்படையின் பேரில், 1948ம் ஆண்டில், தேசியக் கட்சி பதவிப் பொறுப்புக்கு வந்தது. அரசாங்கம் பிரசுரித்த அறிக்கைகளில் இந்த அரசியல், பொருளாதார, சமுதாயக் கொள்கையும், இன ஒதுக்கல் தத்துவமும் ஒன்றே என்று வெளிப்படையாகக் கூறலாயினர். இன ஒதுக்கல் கோட்பாட்டை 1947 தேர்தல் அறிக்கையில் தேசியக் கட்சி பின்வருமாறு விளக்கியது:— ''மிக முக்கியமான இனப் பிரிவுகளையும், உட்பிரிவுகளையும் அவற்றிற்கென்ற தனித்தனிப் பிரதேசங்களில் ஒதுக்கி வைப்பது; ஒவ்வொரு ஒதுக்கப் பகுதியும் தன்னிறைவு காண்கின்ற உறுப்பாக வளர்ச்சி பெறுவதற்கு துணைபுரிவது; வெள்ளைக்காரர்களையும், நீக்ரோக்களையும் பிராந்திய வாரியாகப் பிரித்து வைக்கின்ற கொள்கையை நாங்கள் ஆதரிக்கிறோம்... நகர்ப்புறங்களில் இடம் பெறுகின்ற நீக்ரோக்கள் அங்கு 'வந்து தங்கும்' பிரஜைகளாகவே கருதப்பட வேண்டும். அரசியல் சமூக உரிமைகளை வெள்ளையர்களுடன் கூட சம அடிப்படையில் பகிர்ந்துகொள்வதற்கு உரிமையுள்ளவர்கள் என்று அவர்கள் மதிக்கப்பட மாட்டார்கள். பகுதி பகுதியாகச் சேர்ந்து வாழ்கின்ற முறை சிதைந்து போகாமல் தடுக்கப்படும்.''

ஆரம்பத்திலிருந்தே இன ஒதுக்கல் கொள்கை பற்றிய கருத்தில் இரண்டு அம்சங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து நடமாடுவதுபோலவே தோன்றின. இனங்கள் அடியோடு தன்னிறைவு காணும் பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்பது ஒன்று. அதே சமயத்தில், இன ஒதுக்கல் என்றால் அடியோடு பிரதேச அடிப்படையில் ஒதுக்கி வைப்பது அல்ல; சமூக, பொருளாதார அரசியல் வகைகளில் வெள்ளையரல்லாதார் மட்டமானவர்கள் என்ற நிலையைக் கண்டிப்புடன்கூட அமுல் நடத்துவதுதான் இந்த மற்றொரு அம்சமாக விளங்கியது.

தென்னாப்பிரிக்க நிலைமையில் முதலில் தலைதூக்கிய இந்த முரண்பாட்டை இன ஒதுக்கல் கோட்பாடு தீர்த்துவிடும் என்று லட்சியவாதிகளான தென்னாப்பிரிக்க வெள்ளையர் நம்பினர் என்று தெரிகிறது. பெரும்பான்மையினரான ஆப்பிரிக்கரின் அரசியல் பொருளாதார ஆசைகளும், கோரிக்கைகளும், கலப்பு நிறத்தவர், ஆசிய மைனரிட்டிகள் ஆகியோரின் நலன்களும், தனித்தனி வளர்ச்சியின் மூலம் உறுதி செய்யப்படும் காலையில், தென்னாப்பிரிக்க வெள்ளையரின் உரிமைகள் உத்தரவாதம் பெறும் என்று பலர் நம்பினர்.

சுதந்திர பண்டுஸ்தான் (நீக்ரோக்களின் தேசம்) என்பதன் சாதகங்களைப் பற்றிச் சர்க்கார் கூறியதை இங்கு கவனிக்க வேண்டிய அவசியமில்லை. 1963 செப்டம்பர் 13ம் தேதி ஐ.நா விசேஷக் கமிட்டி சமர்ப்பித்துள்ள யாதாஸ்தில் கூறியிருப்பதைப் பார்த்தாலே போதும். அதிலுள்ள சில பகுதிகள் பின்வருமாறு:— ''இந்த நடவடிக்கைகளை உருவாக்கி அமுல் செய்யும் சர்க்காரைத் தேர்ந்தெடுப்பதில் ஆப்பிரிக்க மக்களுக்கு உரிமை எதுவும் இல்லை. இன அடிப்படையில் சமுதாயத்தைப் பிரிவினை செய்வதே இவற்றின் நோக்கம். தென்னாப்பிரிக்கக் குடியரசின் நிலப்பரப்பில் 7ல் 6 பங்கு பிரதேசத்தில் ஆப்பிரிக்க மக்களுக்கு உரிமை இல்லாமல் தடை செய்வது. இதற்குப் பிரதியாக சிதறுண்டு கிடக்கின்ற ஒதுக்குப்புறக் குடியேற்றங்களில், அதாவது 7ல் 1 பங்கு நிலப்பரப்பில் ஆப்பிரிக்கர்களுக்கு சுயாட்சி தருவதாக வாக்களித்தனர். இந்த ஒதுக்குப்புறங்களில் மொத்த ஆப்பிரிக்க மக்களில் ஐந்தில் இரண்டு பங்கினருக்கும் குறைவாகவே இருக்கின்றனர். நாட்டின் பிற பகுதிகளில் வாழ்கின்ற பெரும்பாலான ஆப்பிரிக்கர் மரபுக்குரிய ஒதுக்க நிலைகளிலிருந்து விடுபட்டவர்கள். ஒதுக்கப் பகுதிகள் விஷயத்தில் அவர்களுக்குச் சிறிதும் பிரியம் கிடையாது. எனவே பண்டுஸ்தானின் அமைப்பு வெள்ளையரின் ஆதிக்கத்தைப் பலப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டது. அந்தந்த மரபுவழித் தலைவர்களின் அந்தஸ்துகளைப் பலப்படுத்துவது. ஒரு சில ஆப்பிரிக்கருக்கு நல் வாய்ப்பு தருவதாக ஆசைகாட்டி பொது மக்களை ஏமாற்றி, ஆப்பிரிக்க மக்களைப் பிரித்து வைப்பது என்பவைதாம் நடந்தேறின.

சுகமாக வாழ்ந்து வந்த பல்வேறு இனத்தவரைப் பிரித்து வைப்பதற்கான முயற்சிகளில் முக்கியமான ஒன்று இது தான்: 1950ம் ஆண்டில் ஜனத்தொகைப் பதிவுச் சட்டம் நிறைவேறியது. தென்னாப்பிரிக்க மக்களை மூன்று பிரதான பிரிவுகளாகத் தொகுப்பதற்கு வேண்டிய திருத்தங்கள் அதில் பின்னர் இடம் பெற்றன. வெள்ளையர், கலப்பு நிறத்தவர், ஆப்பிரிக்கர் என்பதே இந்தப் பிரிவினை. ஆசிய வமிசா வழியினர், கலப்பினப் பிரிவின் உட்பகுதியாக மதிக்கப் பெற்றனர். ஒவ்வொரு இனமும் தனித்தனியாகப் பிரிந்து வாழ வேண்டுமென்ற அரசாங்கக் கொள்கைக்கு இந்தப் பிரிவினை அடிப்படையானது.

''பாஸ் (அனுமதி) சட்டங்கள்'' என்பதன் மூலம் ஆப்பிரிக்கரின் சுதந்திர இயக்கத்தை அடக்கிவைக்கும் நோக்கம் கைகூடியது. தேசீயக் கட்சி பதவிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னமேயே பாஸ் சட்டங்கள் அமுலில் இருந்து வந்தன. இவற்றில் மாகாணத்திற்கு மாகாணம் வேறுபாடுகள் உண்டு. சில பிரிவுகளைச் சேர்ந்த ஆப்பிரிக்கர்கள் பாஸ் சீட்டை எடுத்துச் செல்ல வேண்டியதில்லையென்று விலக்கு அளிக்கப்பட்டது.

1952ம் ஆண்டில் பாஸ் முறையை நீக்கி, தஸ்தாவேஜி முறையை புகுத்தும் நோக்கத்துடன் 1952ல் சுதேசிகள் சட்டம் நிறைவேறியது. அது முந்தைய சட்டங்கள் அனைத்தையும் ரத்து செய்து விட்டது. ஆப்பிரிக்கர் எல்லோரும் ஒரு விவரணைப் புத்தகத்தைத் தம்மிடம் வைத்திருக்க வேண்டுமென்று புதுச்சட்டம் கோரியது. பாஸில் அதை வைத்திருப்பவரைப் பற்றிய எல்லா தகவல்களும் குறிக்கப்பட்டுள்ளன. வருவது, போவது பற்றிய கண்ட்ரோல் விதிமுறைகளின் குறிப்புகளுக்கும் அதில் இடம் இருந்தது. கேட்கும்போது இந்தத் தகவல் புத்தகத்தைக் காட்ட முடியாமற் போனால், அது கிரிமினல் குற்றமாகக் கருதப் படுகிறது.

1963 ஜூலை 1ம் தேதிக்கும் 1964 ஜூன் 30ம் தேதிக்கும் இடையே தங்களைப் பதிவு செய்துகொள்ளாததற்காக அல்லது இந்த தஸ்தாவேஜுகளை ஆஜர் படுத்தாததற்காக 1,62,182 ஆப்பிரிக்கர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப் பட்டது.

ஒரு நகர்ப் பிரதேச எல்லைக்குள் குறிப்பிட்ட ஹாஸ்டல்களில், சொந்த கிராமங்களில், அல்லது அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ஸ்தலங்களில் பதிவு செய்துகொண்டவர்கள் கட்டாயமாக வசிக்க வேண்டுமென்று சட்டங்கள் வலியுறுத்தின. தம் குடியேற்றப் பகுதிகளில் அல்லது வாசஸ்தலங்களில் ஆப்பிரிக்கர் பிரவேசிப்பதற்கு ஒழுங்கு முறைகள் அமுலாயின. 72 மணி நேரத்திற்கு மேல் குறிப்பிட்ட பகுதிகளில் ஆப்பிரிக்கர் தங்கியிருப்பதற்குக் கடுமையான நிர்ப்பந்தங்கள் உண்டு. வேலையில் அமர்வதற்குத் 'தொழிலாளர் பீரோவிடம்' அனுமதி பெற வேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் செல்லும் அனுமதியைத் தொழிலாளர் அதிகாரியிடம் பெற வேண்டும்.

சில ஆப்பிரிக்கர்களுக்கு இந்த விதியிலிருந்து விலக்கு உண்டு. பிறவி முதல் தொடர்ந்து ஒரே இடத்தில் வசித்து வந்தவர்கள் அதை ருசுப்பித்தால் விலக்குப் பெறலாம். ஆனால் அம்மாதிரி குறிப்பிட்ட பகுதியில் வசிப்பதற்கான தகுதியுள்ளவர்கள் என்று கருதப்படும் ஆப்பிரிக்கர்கூட ''சோம்பேறிகள்'' என்றோ, ''விரும்பத்தகாதவர்கள்'' என்றோ அறிவிக்கப்படலாம். அதன் பேரில் அங்கிருந்து வெளியேறுமாறு அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்படும். அப்பகுதியில் வசிப்பதற்கான உரிமைகளும் பறிமுதலாகிவிடும்.

1959ம் வருடத்திய சர்வகலாசாலை சட்டத்தை விஸ்தரித்தது அதுவரை எல்லா இனத்தவருக்கும் இடமளித்த ஸ்தாபனங்களில் வெள்ளையரல்லாதாருக்கு அனுமதியின்றி செய்து ஆப்பிரிக்கர், ஆசியர், கலப்பு இனத்தவருக்கென தனித்தனி ஸ்தாபனங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டதாகும். ஆப்பிரிக்கர்களை பிராந்தியக்குழுக்களாக மேலும் பிரித்தார்கள். இவ்வாறு செய்தது வெள்ளையரல்லாதாருக்கு அதிக அளவு வசதியைச் செய்திருப்பதாகக் கூறுவது சரியல்ல என்று யுனெஸ்கோ யாதாஸ்து கண்டறிந்துள்ளது. 1956ல் 144 ஆப்பிரிக்கர்களும் 1961ல் 182 பேரும் பட்டம் பெற்றனர். ஆனல் 1962லோ 105 பேர்தான் பட்டம் பெற்றனர்.

டர்பன் சர்வகலாசாலைக்கு வெளியே (வலதுபுறப் படம்) வெள்ளையர், ஆப்பிரிக்க மாணவர்கள் இனப் பாகுபாட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இது பத்து ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது. இன்று அவ்வாறு செய்ய முடியாது. புதிய சட்டங்கள் அவ்வளவு கடுமையானவை. கலந்து கொள்பவர்களைக் கைது செய்து விசாரிக்காமல் ஆறு மாதம்வரை காவலில் வைக்க முடியும்.



Photo © Ian Berry — Camera Press — Holmes-Lebel

தனி இனப் பகுதிச் சட்டம் நிறைவேறியதை அடுத்து, சில பகுதிகளைச் சுட்டிச் சொல்லி அவற்றில் குறிப்பிட்ட இனத்தவர்தாம் தனியாக வசிக்க வேண்டுமென்று விதி செய்திருக்கிறார்கள். ஐ.நா. பொதுச் சபை ஆட்சேபித்து பல தீர்மானங்களை நிறைவேற்றியிருந்த போதிலும் இச்சட்டம் அமுலாகி வருகின்றது.

1963 அக்டோபரில் செய்த பிரகடனத்தை அடுத்து, டர்பன் நகரில் மட்டும் 10 ஆயிரம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. அவற்றில் மிகப் பெரும்பாலானவை இந்தியக் குடும்பங்கள். 1964ல் செய்த பிரகடனங்களின் நோக்கம் 38 ஆயிரம் இந்தியர்களையும் ‘ராண்டு’ பகுதிகளில் குடியேற வைப்பதுதான்.

வெவ்வேறு இனத்தவர் கலந்து வசிக்கின்ற சிறிய பேட்டைகள் விஷயத்தில் மட்டும் வெளியேற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன என்பது இல்லை. நகர்ப்புறங்களிலிருந்து வெள்ளையரல்லாதாரை வெளியேற்றி சுற்றுப்புறப் பகுதிகளில் குடியேற வைக்கும் நோக்கத்துடன் அவை உருவாக்கப்பட்டன. 1966 பிப்ரவரியில் மந்திரிகள் வெளியிட்ட கூட்டறிக்கையின்படி கேப்டவுனில் 6வது மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெரிய பேட்டை ‘வெள்ளையர் பகுதி’ என்று பிரகடனமாயிற்று. அது 300 வருஷங்களுக்கு மேலாகக் கலப்பு இனத்தவர் வசித்து வந்த பேட்டை. 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட கலப்பு இனத்தவர் அங்கிருந்து வெளியேறும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இன ஒதுக்கல் தத்துவம் செயல்படுவதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நிலை பெயர்ந்துங்கூட, வெவ்வேறு பிரிவுகள் அல்லது இனங்களாக தென் ஆப்பிரிக்க மக்களை முழு அளவில் பிரித்து வாழ வைப்பது சாத்தியம் இல்லாது போயிற்று. நாட்டின் பொருளாதார அமைப்பு நெருங்கிய ஒருமைப்பாடு உடையது. பிரதான தொழில்கள் எல்லாம், கனிவளச் செல்வங்கள் எல்லாம், துறைமுக வசதிகள் எல்லாம் மிகச் சிறந்த சாகுபடி நிலங்கள் எல்லாம் வெள்ளைக்காரர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பகுதிகளிலேயே இருக்கின்றன. ஆப்பிரிக்கர்களும், கலப்பு இனத்தவரும், ஆசியாக்காரரும் தமது பிழைப்புக்கு வெள்ளைக்காரர் வசமுள்ள தென் ஆப்பிரிக்கப் பகுதியையே நம்பியுள்ளனர். டிரான்ஸ்கி

1961ல் டாக்டர் துரைசாமி செட்டி என்ற இந்தியர் — விட்வாட்டர்ஸ் ராண்ட் (தென்னாப்பிரிக்கா) சர்வ கலாசாலைப் பட்டதாரி, லண்டன் சுகாதாரப் பள்ளியில் தேறியவர், தூரக் கிழக்கு நாடுகளில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் மலேரியா ஒழிப்பு திட்டத்தில் பல ஆண்டு அனுபவம் பெற்றவர் — தென்னாப்பிரிக்காவில் வேலை தேடிப் பெற முடியவில்லை. 1962ல் "அரசாங்கக் கொள்கையின் காரணமாக உயர்ந்த அளவு யோக்ய தாம்சம் உள்ள ஒரு ஆப்பிரிக்க டாக்டருக்கு லிவிங்ஸ்டன் ஆஸ்பத்திரியில் வேலை கொடுக்க மறுக்கப்பட்டது. ஏனெனில் அந்தப் பதவி அவருக்குத் தரப்பட்டால் பல வெள்ளையர்கள் அவர்கீழ் வேலை செய்ய வேண்டியிருக்கும்." (இன உறவுகள் பற்றிய ஆராய்ச்சி, ஜோஹன்னஸ்பர்க் 1963)

*(இன ஒதுக்கல் கொள்கை பற்றிய யுனெஸ்கோ யாதாஸ்திலிருந்து.)*



Photo © Holmes-Lebel

*அதிகார பூர்வமாக ஆசிய இனத்தவர் என்று பாகுபடுத்தப்பட்டுள்ள இந்த இந்தியப் பெண்கள் (வலது பக்கப் படம்) குடும்பத்துடன் நகரத்தை விட்டு வெளியேறி அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் குடியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். வலது கோடியிலுள்ள படம்: ஜோஹன்னஸ்பர்க் (மக்கள் தொகை 1,1,00,000) தென்னாப்பிரிக்காவிலேயே பெரிய நகரமும் முக்கியமான தொழில், வர்த்தக கேந்திரமும் ஆகும்.*

பகுதியில் ஆப்பிரிக்கருக்குச் சொந்தமான சிறு தொழில்கள் தோன்றுவதற்கு அரசாங்கம் ஊக்கமளிக்க முயன்றது. ஆனால் அப்பகுதியின் வறுமை இதை அனுமதிக்கவில்லை. அங்கு இயற்கை வசதிகள் இல்லை. மூலதனம் திரளாகக் கிடைக்கவும் இல்லை.

வெள்ளையர் வசிக்கும் பகுதியும், வெள்ளையரல்லாதார் வசிக்கும் பகுதியும் ஒன்றையொன்று பொருளாதார வகையில் நம்பியே இருந்து வருகின்றன. வெள்ளைக்காரத் தென் ஆப்பிரிக்கருக்குள்ள வேலை வாய்ப்புக்கள் தமக்கும் தேவை என வெள்ளையரல்லாதார் விரும்புகின்றனர். அவற்றை அவர்கள் பெற்றால்தான் தென் ஆப்பிரிக்காவின் தொழில், விவசாய உற்பத்தி இப்போதைய உயர்நிலையில் தொடர்ந்து நீடிக்க இயலும். இல்லாவிடில் இப்போதைய உயர்ந்த வாழ்க்கை நிலை நீடிக்காது.

ஜோஹன்னஸ்பர்கின் ஜனத்தொகை 1962ல் 6,09,100 ஆக இருந்தது 1964ல் 7;06,389 ஆக உயர்ந்தது. டர்பனில் 1964ல் வேலையிலிருந்த ஆப்பிரிக்கர் 74,500 பேர். 1965ல் அவர்களது எண்ணிக்கை 1,36,000 ஆக உயர்ந்தது. கேப் மாகாணத்தின் மேல் பகுதியில் ஸ்தல ஸ்தாபனங்கள், மாகாண சர்க்கார் பொதுநலப் பணி இலாகாக்கள் விவசாய, தொழில் துறைகள் ஆகியவற்றில் பணியாற்றியவர்கள் 1963ல் இருந்ததைவிட 1964ல் 7½ சதவீதம் அதிகம். (77,000லிருந்து 83,000 ஆக உயர்வு). டிரான்ஸ்கியிலுள்ள லேபர் போர்டு மூலம் வரவர அதிகமான பேர் பணியாளர்களாகத் திரட்டப்படுகின்றனர்.

எதிர்பார்த்தபடியே இன ஒதுக்கல் கோட்பாட்டிற்கு எதிர்ப்பு திரண்டு பெரிதாகக் கிளம்பியுள்ளது. ஆட்சேபங்கள், ஆர்ப்பாட்டங்கள், கலகங்கள் முதலியவற்றில் வெள்ளையரல்லாதார் ஈடுபட்டது உண்டு. வெள்ளையர்களிடையே அரசாங்கக் கொள்கையை எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள். சிலர் அதைக் குறை கூறுகிறார்கள். வேறு சிலர் அரசியல் ரீதியில் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள்.

பலாத்காரப் பிரயோகம் இல்லாமல் எல்லாத் துறைகளிலும் ஒரு சிறுபான்மைக் கோஷ்டியானது தனது உயர் நிலையைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. எனவே இன மண்டலக் கோட்பாட்டை அமுல் நடத்தும் வகையில் அதிகாரத் துஷ்பிரயோகம் நடந்திருக்கிறது. தனிநபரின் மதிப்பு புறக்கணிக்

**1964லும் 1965ல் முதல் மூன்று மாதங்களிலும் முக்கிய நகர்ப் புறங்களில் அனுமதிக்கப்பட்ட, வெளியேற்றப்பட்ட ஆப்பிரிக்கர்களின் எண்ணிக்கை.**

| | அனுமதிக்கப்பட்டவர் | | வெளியேற்றப்பட்டவர் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1964.................................. | 156,352 | 18,747 | 84,258 | 13,983 |
| 1965 முதல் 3 மாதங்கள்...... | 44,409 | 5,133 | 19,159 | 3,855 |



Photo © Paul Almasy, Paris

கப் பட்டுள்ளது. பத்திரிகைகள் தணிக்கைக்கு உள்ளாக்கப்பட்டன. பலாத்காரத்திற்கு எதிராக பலாத்காரம் தலைதூக்கும் என்ற பயம் உண்மையாகவோ அல்லது கற்பனையாகவோ இருக்கலாம். எனவே அதிகாரத்தில் உள்ளவர்கள் எதிர்ப்பையே அழித்து அதன்மூலம் இன ஒதுக்கல் கொள்கையைப் பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் பல்வேறு நடைமுறைகளைக் கையாண்டு வருகின்றனர்.

யுத்த பிற்காலத்தில் மீண்டும் தென் ஆப்பிரிக்காவில் பிரஜா உரிமைகள் விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டி ஏற்பட்டது. 1963ல் பொதுச் சட்டத்திற்குச் செய்த திருத்தப்படி 90 நாட்களுக்குள் வெளியேறினாலன்றி, காவலில் வைக்க அதிகாரம் அளிக்கப்பட்டது. அது வாபஸானபோது கிரிமினல் நடைமுறைச் சட்டத்திற்கு எதிராகச் சாட்சியம் சொல்லக்கூடிய எந்த நபரையும் அட்டர்னி ஜெனரல் கைது செய்து ஆறு மாத காலம் காவலில் வைக்கலாம் என்று இது கூறுகிறது. அந்த நபரின் நன்மைக்கு அல்லது நீதிபரிபாலனத்திற்குத் தேவையென்று கருதப்பட்டால் இம்மாதிரி காவலில் வைக்கலாம்.

நீதி நிபுணர்களின் கமிஷன் கூறுகிறது: ''அவசர கால நிலைமை இல்லாத போது விசேஷ அதிகாரங்கள் சர்க்காருக்குத் தரப்படுவதில்லை. எந்தவிதக் குற்றச்சாட்டையும் செய்யாமல் எவ்வித சந்தேகமும் இல்லாத நிரபராதிகளான நபர்களைக் காவலில் வைப்பதற்கு அது அதிகாரம் தருகிறது. அட்டர்னி ஜெனரல் முற்றிலும் தமது உசிதப்படி காவல் உத்தரவைப் பிறப்பிக்கலாம். காவலில் வைக்கப்பட்டவர் விசேஷ அனுமதி பெறாமல் வழக்கறிஞரைக் காண முடியாது. காவலில் வைத்த உத்தரவு செல்லத்தக்கதுதானா என்பதைப் பரிசீலிப்பதற்குக் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் இல்லையென்று சட்டம் கூறுகிறது.

''காவலில் வைக்கப்படும் சாட்சிகளை 6 மாத காலத்திற்கு தனிக் கொட்டடியில் வைக்கவும் அதிகாரம் உண்டு. கலைப்பதற்கு அல்லது அச்சுறுத்துவதற்கு வாய்ப்பு இல்லாத நிலைமையில் சாட்சியை வைக்க வேண்டுமென்பதே இப்படிச் செய்வதன் நோக்கம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. காவலில் வைக்கப்பட்டுள்ள சாட்சி வரம்பற்ற அதிகாரமுள்ள போலீஸில் காவலில் இருக்கும்போதே இந்த நிலவரம். தவிர அத்தகைய சாட்சி, சொல்லப் போவது என்னவென்பதில் போலீசாருக்கு அக்கறையும் உண்டு.''

ஆப்பிரிக்கரை எந்த இடத்திலிருந்தும் வெளியேற்றிவிட முடியும். சுதேசிகளின் நிர்வாகத்தைப் பற்றிய சட்டம் அதிபருக்கு இந்த அதிகாரத்தைத் தருகிறது. பொதுநலனுக்கு அவசியமெனக் கருதினால் நோட்டீஸ் இல்லாமலேயே எந்தப் பிரிவு அல்லது பகுதியிலிருந்து எந்த குடியை சேர்ந்தவர்களோ அல்லது தனி நபரோ வெளியேறிவிட வேண்டுமெனக் கட்டளை பிறப்பிக்கலாம். ஆங்காங்குள்ள குடிகளின் தலைவர்களையும் அல்லது சர்க்காரின் சில நடவடிக்கைகளை எதிர்ப்பவர்களையும் இதேமாதிரி வெளியேற்றி விடலாம்.

எந்தச் சட்டத்தின் கீழாவது ஒரு குற்றம் செய்ததாக, அல்லது செய்ய உத்தேசிப்பதாக, அல்லது அந்தக் குற்றத்தைப்பற்றிய தகவல் வைத்திருப்பதாக எந்த நபர் விஷயத்திலாவது சந்தேகம் ஏற்பட்டால், டிரான்ஸ்கி பகுதியின் அவசர விதிகளின்படி வாரண்டு இன்றி கைது செய்யலாம். அந்த நபர் விசாரணையின்போது முழுத் தகவலையும்

# ஆப்பிரிக்கர் ஊதியம் வெள்ளையர் ஊதியத்தில் ஏழில் ஒரு பங்கு

சரிவர தெரிவித்துள்ளார் என்ற திருப்தி ஏற்படும்வரை போலீசார் தம்மிடமோ அல்லது சிறையிலோ அந்த நபரை வைத்திருக்கலாம். விசேஷ அனுமதியில் லாமல் 10 ஆப்பிரிக்கருக்குமேல் கூட்டம் கூடுவது கூட இம்மாதிரி நடவடிக்கைக்குரிய குற்றமாகிறது. திருச்சபைக் கூட்டங்களும் சவ அடக்கங்களுமே இதற்கு விலக்கானவை. அரசாங்கமோ அல்லது அதன் அதிகாரிகள் எவரோ அல்லது எந்தப் பிரிவின் தலைவரோ செலுத்துகின்ற அதிகாரத்தில் குறுக்கிடும் தன்மையுடைய எந்த அறிக்கையை விடுத்தாலும், அல்லது செயலில் இறங்கினுலும், அல்லது அரசாங்கக் கூட்டத்தைப் பகிஷ்கரித்தாலும் இம்மாதிரி நடவடிக்கை எடுக்கப்படும்.

1966 ஜனவரிக்கும் ஏப்ரலுக்கும் இடையே, டிரான்ஸ்கி பகுதியில் இம்மாதிரி 62 பேரைக் காவலில் வைத்திருக்கிருர்கள்.

1950ல் நிறைவேறிய கம்யூனிஸ அடக்குமுறைச் சட்டம் 1962ல் திருத்தப்பட்டது. தென்ஆப்பிரிக்காவில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. 1950 ஆம் வருஷத்தில். ஆப்பிரிக்கர் தேசியக் காங்கிரஸ், அனைத்து ஆப்பிரிக்க காங்கிரஸ், ஆப்பிரிக்க எதிர்ப்பணி இயக்கம் ஆகியவை 1962 ல் தடை செய்யப்பட்டன. 437 பேரைப் பிறருடன் சேர்ந்து வாழ லாயக்கற்றவர்கள் என்ற ஜாபிதாவில் சேர்த்தார்கள், அவர்களில் 129 பேர் வெள்ளையர். 308 பேர் வெள்ளையரல்லாதார். தடை செய்யப்பட்ட இந்த ஸ்தாபனங்களை அல்லது விரும்பத்தகாதவர்கள் என்று அறிவிக்கப்பட்ட நபர்களை ஆதரிக்கின்றவர் எல்லோருமே கம்யூனிஸ்டுகள் என்று கருதப்படுகிருர்கள்.

ஆனல் இம்மாதிரி ஜாபிதாவில் இடம் பெறுகின்ற நபர்கள் விஷயத்தில் சில அதிகாரங்களை நீதிபரிபாலன மந்திரி எடுத்துக்கொள்ளலாம். கம்யூனிசத்தின் நோக்கங்களுக்கு ஆக்கம் தேடும் வகையில் நடந்து கொள்கிறவர்கள் என்று கருதி இந்த நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்று சட்டம் கூறுகிறது.

சமூக உறவு முறைக் கூட்டங்கள் உட்பட எந்தக் கூட்டத்திலும் ஆஜராய் இருக்கக்கூடாதென்றும் தடை செய்யலாம். இத்தகைய தடை உத்தரவுகள் அடிக்கடி பிறப்பிக்கப்படுகின்றன. அப்படி தடுக்கப்பட்டவர் எங்கு பேசினுலும் அதைக் குறிப்பெடுத்துக் கொள்வது, பதிவுசெய்வது, வெளியிடுவது, பிரசுரம் செய்வது ஆகியவையும் குற்றமாகும்.

எந்தக் குறிப்பிட்ட இடம் அல்லது பகுதியிலிருந்து யாரும் வெளியேருமல் இருக்க வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கலாம். விடுமுறை நாளில் நகரில் அல்லது அதன் புறநகரில் மட்டுமே வசிக்க வேண்டும், அல்லது வீட்டில் குறிப்பிட்ட காலத்தில் காவலில் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் 24 மணி நேரமும் வீட்டிலே இருக்க வேண்டுமென்றுகூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது உண்டு.

நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்ட தேதியும் அது காலாவதியாகும் தேதியும் கெஜட்டில் பிரசுரமாகின்றன. தடைகளும் ஓராண்டு முதல் இரண்டு ஆண்டுகள் வரை இருக்கலாம். சிலசமயம் 5 ஆண்டுகளாக இருப்பதும் உண்டு.

1964ம் ஆண்டின் துவக்கத்தில் கம்யூனிஸ அடக்குமுறைச் சட்டத்தின். கீழ் நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் 257 பேர். தடை உத்தரவுக்கு உள்ளானவர்கள் 1966ல் மட்டும் 600 பேர் இருக்குமென்று இன ஒதுக்கல் கோட்பாட்டைப் பற்றிய யாதாஸ்து கூறுகிறது.

தென் ஆப்பிரிக்கக் குடியரசில் இன ஒதுக்கல் கோட்பாடானது அரசியல், பொருளாதார வகைகளில் எவ்வாறு செயல்படுகிறது என்பதில் யுனெஸ்கோவுக்கு நேரடியான சிரத்தை இல்லை. ஆனல் இந்தக் கோட்பாடு கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், செய்திப் பரிமாற்றம் ஆகியவை விஷயத்தில் விசேஷ விளைவுகளைக் கொண்டதாக இருப்பதுடன், மனிதனது மாண்பினையும் இழிவுபடுத்துவதாக இருக்கிறது. இதன் விளைவாக பொருளாதார சமவாய்ப்பின்மை ஏற்பட்டு வலுவடைகிறது. எல்லா தென் ஆப்பிரிக்கரின் சுதந்திரமும் அரசியல் வகையில் இதனல் பாதிக்கப்படுகிறது.

தனித்தனி வளர்ச்சி என்ற லட்சியத்திற்கேற்ப ஆப்பிரிக்கர், ஆசியாக்காரர், கலப்பு இனத்தவர், வெள்ளையர் ஆகியோர் வெவ்வேறுகக் கல்வி பயிலுகின்றனர். நிதி ஒதுக்குவது, பாடத் திட்ட அமைப்பு, மாணவர்களின் சாதனை, வேலைவாய்ப்புக்கான தகுதி ஆகிய அனைத்திலும் வேறுபாடுகள் விளையக்கூடிய வகையில் இது அமைந்துள்ளது. எதிர்காலத்தில் தொழில் நுட்பத் திறன் இல்லாத உழைப்பாளிகளாகத்தான் ஆப்பிரிக்கர் பணியாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் அதற்கு இசைவாகவே கல்வி முறை உருவாகிச் செயல்பட்டு வருகிறது.

கல்வித் துறையில், வேலைவாய்ப்பில், இனப்பாகுபாடு இருந்து வருவதன் விளைவுகளை விஞ்ஞானத் துறையிலும் காணலாம். விஞ்ஞானத் தொழில் நுட்பத் துறைகளிலும், நிர்வாகத்துறையிலும் மிக உயர்ந்த தரமுள்ளவர்கள் தென் ஆப்பிரிக்காவில் மிகமிகக் குறைவாகவே உள்ளனர். வெள்ளையரை மட்டும் நம்பி இந்தக் குறையை நிறைசெய்துவிட முடியாது. தவிர அங்குள்ள சூழ்நிலையே அடக்குமுறைத் தன்மையுள்ளதாக இருப்பதால், சுதந்திரமாக ஆராய்ச்சி செய்கின்ற உணர்ச்சி இல்லாமல் இருந்து வருகிறது. எனவே சமுதாய விஞ்ஞானத் துறையிலும் பிற விஞ்ஞானத் துறைகளிலும் சில உயர்ந்த விஞ்ஞானிகளின் சேவை கிடைக்க முடியாமல் போய்விட்டது. சிப்பந்திகளை வேலைக்கு அமர்த்துவது, முக்கியமாக பிரிட்டிஷ் சர்வ கலாசாலைகளிலிருந்து ஆட்களை வேலைக்கு எடுத்துக்கொள்வது இந்த அரசியல் சூழ்நிலையில் சிரமமாகி விட்டது.

கலாசாரத் துறையில் தனி வளர்ச்சி என்ற போக்கானது வெள்ளையருக்கும் வெள்ளையரல்லாதாருக்குமிடையே உள்ள தொடர்பை மிகமிகக் குறைத்து விட்டது. பொருளாதாரத் தன்மையுள்ள தொடர்புகள் மட்டுமே இருக்கின்றன. தனி வளர்ச்சி என்பது பிற துறைகளிற்போலவே, ''சமவாய்ப்பு இன்மை'' என்றுதான் பொருள்படுகிறது. தவிர, கலாசாரத் துறையில் தனிமை இருப்பது கலாசார ஒருமைப்பாட்டுக்கு எதிரிடையானது. அத்தகைய ஒருமைப்பாட்டை வளர்த்துப் போதிப்பதற்குத்தான் யுனெஸ்கோவே அதற்கு மாறுபட்டிருக்கிறது. இப்போதைய போக்கின் காரணமாக தென் ஆப்பிரிக்கரின் ஆக்கத் திறன் சுருங்கி விட்டது.

| | ஆப்பிரிக்கர் | கலப்பு இனத்தவர் | ஆசியர் | வெள்ளையர் |
|---|---|---|---|---|
| இன வாரியாக தென்னுப்பிரிக்க மக்கள் தொகை ... | 12,162,000 | 1,742,000 | 533,000 | 3,395,000 |
| சராசரி வருமானம் 1960. ... | 87 ராண்ட் (1) | 109 ராண்ட் | 147 ராண்ட் | 952 ராண்ட் |
| சுரங்கங்களில் சராசரி சம்பளம் 1963 ... | 152 ,, | 458 ,, | 458 ,, | 2,562 ,, |
| உற்பத்தி ஸ்தாபனங்களில் சராசரி சம்பளம் 1963 ... | 422 ,, | 660 ,, | 660 ,, | 2,058 ,, |
| சர்க்கார் உத்தியோகம் 1963 ... | 346 ,, | 603 ,, | 884 ,, | 1,694 ,, |
| உயர்ந்தபட்ச வயோதிக பென்ஷன் விகிதம் (ஆண்டுக்கு) ... | 44.40 ,, | நகரில் 168 ,, வெளியில் 138 ,, | நகரில் 168 ,, வெளியில் 138 ,, | 360 ,, |
| சிசு மரண விகிதம் உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் ஒரு வயதுக்குட்பட்டவர்கள் 1963 ... | விவரம் இல்லை. | 126.9 | 44.7 | 29.0 |
| 1962ம் ஆண்டைவிட 1963ல் க்ஷயரோக விகிதம் அதிகரிப்பு அல்லது குறைவு—5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ... | +20.3 | + 7.5 | — 16.6 | — 7.0 |

1) தென்னுப்பிரிக்க ராண்ட் = $.1.40

கொள்கையைக் கோட்பாட்டினின்று தனியாகப் பிரிக்க முடியாது. செய்திச் சுதந்திரத்திற்கான உரிமை உண்டு என்று தென் ஆப்பிரிக்க சர்க்கார் கூறி வந்த போதிலும் ஒதுக்கல்கொள்கையை அமுலாக்கும் சட்டம் இய்ற்றப்படுவதும் அது பிரயோகப்படும் விதமும் செய்திச் சுதந்திரக் கோட்பாட்டை மறுப்ப தாகவே அமைந்துவிட்டன.

இன, கோஷ்டித் தகராறுகளுக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் நிச்சயமாக இன ஒதுக்கல் முறை அதற்குத் தக்க பரிகாரமாகாது. இந்தப் போராட்டம் வலுப்பதற்கு அதுவே பிரதான காரண மாகி விடுகிறது. வெள்ளையருக்கும், வெள்ளையரல்லாதாருக்குமிடையே உறவுமுறைமோசமாவது அதனுல்தான்.

மனிதன் எந்த இனத்தைச் சேர்ந்த வனுக இருந்தபோதிலும் அவனது மாண்பு மதிப்புக்குரியது. இதை தர்ம நியாயப்படியும், சட்டப்படியும் வரை யறுத்து எல்லோரும் ஏற்கச் செய்வதற் காக ஐ. நா. தன்னைப் பணித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு நேர் விரோதமான நிலவரத்தையே தென் ஆப்பிரிக்க இன ஒதுக்கல் கொள்கை தோற்றுவித்துள்ளது.

இன ஒதுக்கல் கொள்கையின் கெடுதல்கள் அந்தத் தேசத்தை மட்டும் பாதித்துள்ளன என்பதில்லை. இன ஒதுக்கலும், பிரிவினையும், இனப் பாகுபாடுகளும் சர்வதேச சமாதானத்திற்கும் பந்தோபஸ்துக்கும் அச்சுறுத்தலாக இருந்து வருவதுடன் மனித சமூகத்திற்கு எதிரிடையான குற்றமும் ஆகிறதென்று யுனெஸ்கோவின் கடமைகளைப்பற்றிய ஒரு தீர்மானம் கூறுகிறது. இத் தீர்மானம் ஐ.நா. அசெம்பிளியில் அதன் 20வது கூட்டத்தில் காலனி ஆதிக்கத்தையும் இனக் கோட்பாட்டையும் ஒழிப்பது பற்றிய பிரச்சினைகள் விஷயமாக நிறைவேற்றப்பட்டது. (14வது பொது மகாநாட்டிலும், 1966 நவம்பரில் இது ஏற்றுக்கொள்ளப் பட்டது.)

1964 பிப்ரவரி 3ம் தேதி ஐ.நா. வின் பொதுக் காரியதரிசி கூறினுர்:— ''இன அடிப்படையில் போராட்டம் நடப்பதை அடக்கி அகற்றிவிட நம்மால் முடியாது போனுல் அது பேரழிவை விளைவிக்கக்கூடிய ஒரு அசுரனுக வளர்ந்துவிடும். பழங்காலத்து மதச் சார்புள்ள அல்லது பொருளாதாரத், தத்துவ சார்புள்ள சண்டைகள் எல்லாம் இதன் முன் சிறு குடும்ப விவகாரங்களாகத் தோன்றும். இனமும் நிறமும் வேருக இருந்தபோதிலும் நமது குழந்தைகள் எல்லோரின் நலனை முன்னிட்டு இப்படி நடக்கும்படி நாம் விடலாகாது.''

1963 டிசம்பர் 4ம்தேதி பந்தோபஸ்து கவுன்சில் ஒரு தீர்மானத்தின் மூலம் நிபுணர் குழு ஒன்றை நியமித்தது. அக் குழுவினர் பின்வருமாறு எச்சரிக்கை விடுத்தனர்: ''தென் ஆப்பிரிக்காவில் இன அடிப்படையில் போராட்டம் துவங்குமானுல் உலகின் பிற பகுதிகளிலும் இன உறவு முறைகளை அது பாதிக்கத்தான் செய்யும். அது பிரமாதமான சர்வதேச விளைவுகளைக் கொண்டதாக இருக்கும். முதல்தரமான உலக அபாய நிலையை அது தோற்றுவித்துவிடக் கூடும்.''



Photo © Ernest Cole - Camera Press - Holmes-Lebel

புலனுகாத சுவர்: சேர்ந்து வாழும் எந்த மக்களுடைய அன்ருட வாழ்விலும் ஒருவர்க்கொருவர் தொடர்பும், உபசரித்தலும் முக்கியமானவை என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனுல் தென்னுப்பிரிக்காவில் இதுவும் சட்டங்கள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வீட்டுக்கு வெளியில் சேர்ந்து சாப்பிடுவது, குறிப்பிட்ட இடங்களில் இரவில் தங்குவது, அல்லது சில இடங்களுக்குப் போக அனுமதி பெறுவது ஆகியவற்றுக்கெல்லாம் கட்டுப்பாடு உண்டு. தென்னுப்பிரிக்கக் கலப்பு இனத்தவர் குடியரசிலுள்ள எந்தப் பொது இடத்திலும் சேர்ந்து காப்பியோ தேனீரோ அருந்த முடியாது. இது தவிர மக்களிடையே நம்பிக்கையின்மை நிலவும் சூழ்நிலையும், இனப் பிரிவுகளிடையே உயர்வு தாழ்வு என்ற கற்பனையும், கடினமான அரசியல் பிரச்னைகளும், சர்க்கார் ஊதியம் பெறும் உளவாளிகள் இருப்பார்கள் என்ற சந்தேகமும் மனித உறவு நிலவுவதை கடினமானதாகச் செய்து விடுகிறது. இப்போதுள்ள நிலை நீடிக்கும் வரை ஒரு விஷயம் நிச்சயம்—தென்னுப்பிரிக்கப் பண்பாடு (வெள்ளையர்—அல்லாதவர் இருவருக்கும்) வர வர ஆக்கத் தன்மை அற்றதாகப் போய் விடும்.

இன ஒதுக்கல் கொள்கை பற்றிய யுனெஸ்கோ யாதாஸ்திலிருந்து.

வெள்ளையர் மாவட்டம் ஒன்றில் ஒரு ஆப்பிரிக்கர் 72 மணி நேரத்துக்கு மேல் இருப்பது 1964லிருந்து கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டங்களில் வேலை செய்யும் ஆப்பிரிக்கர்களுடைய மனைவியரும் குழந்தைகளும், அதே மாவட்டத்தில் முன்னர் தொடர்ந்து வசித்திருந்தாலன்றி தம் கணவருடனே, தந்தையருடனே சேர்ந்து வாழ முடியாது. வெவ்வேறு மாவட்டங்களில் வசிக்கும் கணவர்-மனைவியரிடையே ஒருவரையொருவர் காண வருவது வேறு விதமாக அனுமதிக்கப் பட்டிருந்தாலன்றி உயர்ந்த பட்சமாக 72 மணி நேரம்தான் இருக்கலாம்.

இன ஒதுக்கல் கொள்கை பற்றிய
யுனெஸ்கோ யாதாஸ்திலிருந்து.

## இன ஒதுக்கல் கொள்கையால் கலாசாரத்துக்கு ஆபத்து

# இன ஒதுக்கல் கொள்கையின் விலை

—ஆலன் பேடன்




Photo © Ian Berry - Magnum



ஆலன் பேடன்: தென்னப்பிரிக்காவிலுள்ள நேட்டால் மாகாணத்தில் 1903ம் ஆண்டில் பிறந்தவர். "அருமை நாடே அழு" என்ற புகழ் பெற்ற நவீனம் (1948) பதினெட்டு மொழிகளில் 22 நாடுகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அது அவருக்கு உலகப் புகழ் தேடித் தந்தது. இனப்பாகுபாட்டினால் ஏற்படும் மோதல்களையும் நெருக்கடிகளையும் இந் நவீனம் உணர்ச்சி பொங்க விவரிக்கிறது. எல்லா நூல்களும் தென்னப்பிரிக்காவுக்கு வெளியே இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் வெளியிடப்பட்டவை. அவற்றுள் சில. "தென்னப்பிரிக்காவும் அதன் மக்களும்" (1957) "நவீன உலகில் இன பிரச்னைகளுக்கு கிறிஸ்தவர் அணுகு முறை" (1959) "தென்னப்பிரிக்காவுக்கு நம்பிக்கை" (1959) "துயரம் நிரம்பிய ஒரு நாட்டின் கதைகள்" (1961) "தென்னப்பிரிக்க சோக நிகழ்ச்சி—ஜான் ஹாப் மேயரின் வாழ்வும் காலமும்" (1965) தென்னப்பிரிக்காவின் லிபரல் சங்கத்தை தோற்றுவித்தவர்களில் ஆலன் பேடன் ஒருவர். வெள்ளையர் உயர்வுக்கு நியாயம் கற்பிக்கும் இனக் கொள்கைகளை லிபரல் கட்சி நிராகரிக்கிறது. இனப்பாகுபாடின்றி எல்லா தென்னப்பிரிக்கர்களுக்கும் சம உரிமை இருக்கவேண்டுமென்பது அதன் குறிக்கோள்.

Photo © Jonathan Cape Ltd., London

இனங்களின் தனிப்பட்ட வளர்ச்சிக்கான வழியே இன ஒதுக்கல் திட்டம் எனக் கூறப்படுகிறது. தென் ஆப்பிரிக்காவில் வாழும் பல இனங்களைச் சார்ந்த குழுவினரின் கலாசாரத் தூய்மையைப் பாதுகாக்கவும், மற்ற இனங்களின் சேர்க்கையால் மாசுபடாமல், அவரவர்களுடைய வழியில் அந்த இனத்தாரின் கலாசாரம் வளர்ச்சி அடைவதற்கும் வழி செய்வதே இத்திட்டத்தின் நோக்கம் என்று கூறுகின்றனர். ஆப்பிரிக்கர்கள், மலாய்காரர்கள், பழங்குடிகள், ஐரோப்பியர்கள் இவர்களது சேர்க்கையால் தோன்றிய மக்கள், ஆங்கிலேயர்கள்,



ஹிந்துக்கள், முகமதியர்கள், யூதர்கள் போன்ற மக்களின் கலாசாரத்தின் சிறந்த அம்சங்களின் சேர்க்கையால் ஏற்படக் கூடிய ஒரு புதிய வளமுள்ள கலாசாரத்தை உருவாக்கும் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டதாக இன ஒதுக்கல் திட்டம் இருக்கவில்லை..

பலவகையான இனத்தாரின் கலாசாரம் ஒன்றை ஒன்று தழுவி, அல்லது சிறந்த அம்சங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு அவைகளின் வளமுள்ள வளர்ச்சிக்கு வழி வகுக்கும் நோக்கமும் இத்திட்டத்திற்கு இல்லை. உண்மையில் இத்தகைய வளர்ச்சியைத் தடை செய்வதே இந்த சட்டத்தின் குறிக்கோள்.

வெள்ளை நிறத்தவர்களும், கறுப்பு நிறத்தவர்களும் கொண்ட கலப்படமான பார்வையாளர்கள் உட்காருவதற்கு இடம் ஒதுக்கப் பட்டிருப்பினும், கூட்டங்களிலும், கலா நிகழ்ச்சி, இசைநாட்டிய நிகழ்ச்சிகளிலும், கலைக் கூடங்களிலும் பிரத்தியேகமாக அரசாங்கத்தினிடமிருந்து அனுமதிச் சீட்டை பெருமல் உட்காருவதை சட்டம் அனுமதிப்பதில்லை.

(1) 'கலப்பு' என்ற அடைமொழியை, விளையாட்டு கோஷ்டியினருக்கும், கூட்டம் நிகழ்ச்சி இவைகளைக் காண வரும் பார்வையாளர்களுக்கும் அவர் இரு இனத்தைச் சேர்ந்தவராக இருப்பின் இவ்வாறு குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற இனங்களின் கலாசாரத்தையும் பண்பாட்டினையும் பாதுகாக்க எடுக்கும் நடவடிக்கைகள் முற்றிலும் மடத்தனமானதாகவும், அறிவிற்குப் பொருந்தாததாகவும், கேலிக் கூத்தாகவும், அதே நேரத்தில் கொடுமை நிறைந்ததாகவும் இருக்கின்றன.

விளையாட்டுகளைப் பொறுத்த வரையில் அரசாங்கத்தின் போக்கு மிகவும் முட்டாள்தனமானது. நாட்டில் நடக்கக் கூடிய கிரிக்கெட், கால்பந்து, டென்னிஸ் போன்ற விளையாட்டுகள் நடைபெறும் நேரத்தில், பார்வை

# கண்ணை மூடிக் கொண்டு காட்டு வழி செல்லுதல்


யாளர்கள் இன அடிப்படையில் தனியே ஒதுக்கப்பட்ட இடங்களிலிருந்து விளையாட்டுகளைப் பார்ப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதி வேண்டும். இரண்டு இனத்தவரும் கலந்த விளையாட்டு கோஷ்டிகள் ஒரு சில தனியார் மைதானங்கள் தவிர, நாட்டில் உள்ள பொது மைதானங்களில் அரசாங்க அனுமதியின்றி விளையாட முடியாது—மேலும் இரு இனத்தவரும் கலந்த விளையாட்டு கோஷ்டிகள் வெளிநாடுகளிலிருந்து வந்தால், அவை விளையாட தென்னுப்பிரிக்காவில் அனுமதிப்பதில்லை.

இதற்கெல்லாம் நிறவேற்றுமைதான் முக்கிய காரணம் என்பதை உணர வேண்டும். இன ஒதுக்கல் அல்லது இனங்களின் பிரத்தியேக வளர்ச்சிக் கொள்கை என்பது உண்மையில் வேருன இனங்களுக்கு இடையே உள்ள வேற்றுமையை நிரந்தரமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டி நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு வழிமுறை எனலாம். சுருங்கக் கூறின் மூன்று நூற்ருண்டுகளுக்கு பிறகு தென் ஆப்பிரிக்க வெள்ளையர்களின் இனத்தூய்மையைப் பாதுகாக்கவே இந்த திட்டம் உள்ளது. விளையாட்டுகளைப் பொறுத்தவரையில் இன ஒதுக்கல் திட்டம் மிகக் கடுமையான முறையில் அமலில் உள்ளது என்று கூற முடியும். தென் ஆப்பிரிக்காவின் மிகச் சிறந்த கால்பந்து விளையாட்டு வீரர் பிறப்பால் ஒரு இந்தியர். அவர் பெயர் திரு பாப்வா சுவிகோலம் என்பதாகும். ஆனல் கால்பந்து விளையாட்டுப்போட்டிகளில் அவர் விளையாடக் கூடாது. ஆகவே அவர் பரிசுகளும் பெற முடியாது. வெளிநாடுகளுக்குச் சென்று விளையாட வேண்டுமென்ருல், அவர் பிறர் தயவினுல்தான் செல்ல முடியும்.

திரு பாஸில் டி. ஒலிவிரா என்பவர் தென் ஆப்பிரிக்கர். இங்கிலாந்தில் வசிக்கும் இவர் சிறந்த கிரிக்கெட் வீரர். தென் ஆப்பிரிக்காவில் 1968ல் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் பந்தயத்தில் இவரை இங்கிலாந்தின் சார்பில் தேர்ந்தெடுத்து அனுப்பினுல் தென் ஆப்பிரிக்க அரசு அந்தக் கோஷ்டியையே அனுமதிக்க முடியாது என்று ஏற்கனவே அறிவித்து விட்டது.

இந்தக் கட்டுரை எழுதுகின்ற நேரத்தில் மற்ருெரு அறிவிப்பு வெளிவந்துள்ளது. தென் ஆப்பிரிக்காவின் தலைசிறந்த மல்யுத்த வீரர் திரு. ரோனி வான் தெர்வால்ட் பன்னிரண்டு ஆண்டு காலமாக வெள்ளைக்காரர்களுடன் போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிருர். இன்ருே அவரைக் கருநிறத்தவர் என்று ஒதுக்கி விட்டார்கள். பத்திரிகை நிருபர்கள் இவரைச் சந்தித்த பொழுது, இவர் துக்கத்தோடு அழுதார். ஆனல் அவருடைய கண்ணீர் அவர் விரும்பும் விடுதலையை அவருக்கு அளிக்கப் போவதில்லை.

இத்தகைய கட்டுப்பாட்டினுல் அதிகக் கஷ்டத்திற்கு ஆளாகின்றவர்கள், தென் ஆப்பிரிக்கர்களும், இந்தியர்களும், மற்ற நிறத்தவர்களும்தான். ஏனெனில் இவர்கள்தான் ஐரோப்பிய, கலை, நடனம், இசை, நாட்டியம், நாடகம் இவற்றை விரும்பிக் கற்றுக் கொள்ளவும் ரசிக்கவும் ஆவலாக உள்ளனர். அத்தகைய மக்கள் மிக அடக்கமான நடத்தை உடையவர்கள். அவர்கள் ஐரோப்பிய இசை நிகழ்ச்சிகளுக்கும், நாடகத்திற்கும் செல்லுவது, மற்றவர்கள் அறியும் வகையில் வெளிப்படையாகத் தெரியாது. அவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. தங்களுக்கென்று பிரத்தியேகமான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து கொள்ளும் திறன் படைத்தவர்களும் அல்லர். இவர்களில் ஒருசிலர்தான் மேலைநாட்டின் கலை நுட்பங்களை சுயமாக அறிந்து அனுபவிக்கும் சக்தி வாய்ந்தவர். இவர்களில் மற்றவர்கள் ஐரோப்பியக் கலையில் ஈடுபாடுடையவர்களிடம் தொடர்பு




**கேப்டவுனிலுள்ள செயின்ட் ஜார்ஜ் ஆங்க்ளிகன் கதீட்ரல் வாயிலில் உள்ள இந்த அறிவிப்புப் பலகை 1957ல் மாட்டப்பட்டது. அப்போது சில தெருக்களுக்கப்பால் கூடியிருந்த தென்னுப்பிரிக்கப் பார்லிமெண்ட் சுதேசி சட்டத் திருத்தத்தை நிறைவேற்றியது. அதன் ஒரு பிரிவு பல்வேறு இன மக்கள் சேர்ந்து வழிபாடு செய்வதைத் தடுக்கிறது. அதிலிருந்து இந்த அறிவிப்புப் பலகை மேலும் பெரிதாக்கப்பட்டுள்ளது. இதே வாசகம் ஆங்கிலம் ஆப்பிரிக்கன், ஹாஸர் மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. இன ஒதுக்கல் கொள்கையும் சர்ச்சும் பற்றிய கட்டுரையை 33ம் பக்கத்தில் காண்க.**



பெற்றோருடைய விருப்பத்துக் கெதிராக ஆரம்பக் கல்வி தாய் மொழியில் தரப்படுகிறது. ஆனால் பெற்றோர் அது ஆங்கிலத்தில் இருக்க வேண்டுமென விரும்புகின்றனர். இன ஒதுக்கல் கொள்கை பற்றிய யுனெஸ்கோ யாதாஸ்து கூறுவது போல இது "ஆப்பிரிக்க மக்கள் தமது நாட்டுக்குள்ளேயும், உலகிலிருந்தும் மொழி, சமூகம், பண்பாட்டு ரீதியில் தனிமைப் படுத்தப் படுவதை உறுதிப்படுத்துகிறது" இடது பக்கம் கேப்டவுனிலுள்ள ஒரு பள்ளிக்கூடம்.

Photo © Francos - Holmes - Lebel

கொண்டாலன்றி அந்தக் கலையின் நுட்பங்களை அறிந்து கொள்ள முடியாது.

இன அடிப்படையில் ஒதுக்கப்பட்ட பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குப் பிற இனத்தாரின் கலையைப் புரிந்து கொண்டு பாராட்டும் அளவிற்கு அவற்றைப் போதிக்க வேண்டுமென்ற பொருத்த மற்ற யோசனையைக் கூறுகின்றனர். விளையாடும் பொழுதும், உண்ணும் பொழுதும், அவசியமான தொடர்பு கொள்ள வேண்டிய நேரத்திலும், கூடாது என்று ஒதுக்கப்பட்ட நிலையில், இந்தப் பிள்ளைகள் பிற இனத்தைச் சார்ந்தவரிடம் அன்பு செலுத்த வேண்டுமென்று கூறுகின்றனர்.

இன ஒதுக்கல் திட்டம் எழுத்து ஆற்றலை ஒடுக்கி விட்டது எனலாம். இனப் பிரச்னையைப் பற்றி, அல்லது இன வேறுபாட்டின் காரணமாக இழைக்கப் பட்ட அநீதியைப் பற்றி கற்பனைக் கதையென்றாலும் அரசினர் விரும்புவதில்லை. இவ்விதமான புத்தகங்களும் கட்டுரைகளும் தணிக்கை செய்யும் குழுவினரின் சம்மதத்தைப் பெற முடியாது. இந்தக் குழுவினரின் சம்மதத்தைப் பெறாமல் புத்தகங்கள் வெளிவந்தாலும், அத்தகைய பிரசுரங்களைத் தடை செய்வார்கள்.

இன ஒதுக்கல் திட்டமும், சிந்திக்கும் திறனையும் கல்வியையும் கட்டுப்பாடு செய்கிற சர்வாதிகார ஆட்சியும் வெவ்வேறு என்று எண்ணிவிடக் கூடாது—இவை இரண்டும் ஒன்றேயாகும். இன ஒதுக்கல் திட்டமே எதேச்சாதிகார முறைதான். இவை இரண்டும் கலாசாரத்தை மிகவும் பாதிக்கும்.

பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக குழந்தைகளுக்கு ஆரம்பக்கல்வி ஆங்கிலத்தில் இல்லாமல் தாய் மொழியில் தரப்படுகிறது—இவ்வாறு தாய்மொழி அல்லது வட்டார மொழியில் கல்வி போதிக்கப்படுவதால் அவர்களது வளர்ச்சி தடைப்படுகிறது என்று பெற்றோர்களும் எண்ணுகின்றனர். சர்வகலாசாலையைச் சேர்ந்தவர்களும் இதை உறுதிப் படுத்துகின்றனர். தங்களது குழந்தைகள் இன்றைய நவீன நாகரீகத்தை யொட்டி வாழ்வதைப் பெற்றோர்கள் பெரிதும் விரும்புகின்றனர். வெளிப்படையாகக் கூறாவிடினும் மற்றவர்கள் தங்களது கலாசாரத்தை பாதுகாப்பதைப் பற்றி ஏளனம் செய்கின்றனர். மேலும் தங்கள் கலாசாரத்தைப் பிறர் தலையீடின்றிப் பாதுகாத்துக் கொள்ளத் தங்களுக்குத் திறன் உண்டு எனக் கூறுகின்றனர்.

வெள்ளை இனத்தவரின் குழந்தைகளின் கல்வி மீதும் அதிக கட்டுப்பாட்டினைச் செலுத்தப் போவதாக அறிகுறிகள் தெரிகிறது—தற்சமயம் அந்த கல்வியை மாநில அரசினர் நிர்வகித்து வருகின்றனர்.

உள்நாட்டிலும், வெளியிலும் ஏற்படும் ஆபத்தினைச் சமாளிக்கத் தென் ஆப்பிரிக்க வெள்ளையர்கள் ஐக்கியம் அவசியம் எனினும், ஆப்பிரிக்க மொழி பேசும் குழந்தைகளும், ஆங்கிலம் பேசும் குழந்தைகளும், வெவ்வேறு பள்ளிகளில் கல்வி பயிலுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளனர். பிற்காலத்தில் வாணிபத்திலும், வியாபாரத்திலும், மற்ற துறைகளிலும் ஒத்துழைக்கும் அவசியம் ஏற்படும்—ஆனால் இளம் வயதில் அவர்கள் பிரித்து வைக்கப்படுகின்றனர். சர்வகலாசாலை விஷயங்களிலும் அரசாங்கம் தலையிட்டு அதிகக் கட்டுப்பாட்டினை அமுல் செய்யப்போவதாகத் தெரிகிறது.

இறுதியில், இன ஒதுக்கல் திட்டம் கலாசாரத்திற்குப் பாதகம் விளைப்பதாக இருக்கிறது. குறிப்பாக, தார்மீக சிந்தனைக்குச் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது—இவ்விடத்தில் வெள்ளை இனத்தாரின் ஒழுக்க அடிப்படையைப் பற்றியே குறிப்பிடுகிறேன். இன ஒதுக்கல் திட்டத்தை மிகச் சிறந்த பண்பாகக் கருதி, அதற்கு உயர்ந்த நிலையை அளித்திருப்பதால், மற்ற பண்புகளுக்கு அழிவு ஏற்பட்டுவிட்டது. சட்டத்தின் ஆட்சி விபத்துக்குள்ளாகி விட்டது எனலாம். மக்களுக்குத் தடைஉத்தரவு பிறப்பிக்கின்றனர். நாடு கடத்தப் படுகின்றனர். தனியாக சிறைக் கூடத்தில் 180 நாட்கள் வரையிலும் கூட சட்டத்தின் உதவியின்றி, நீதிமன்றத்தின் துணையின்றி மக்கள் வைக்கப்படுகின்றனர்—தென் ஆப்பிரிக்காவின் வெள்ளைக்கார சமுதாயம் ஏதோ ஒன்றிரண்டு விஷயங்களில் விதிவிலக்களித்தாலும், மற்றபடி மேற்குறிப்பிட்ட வழியைத்தான் சிறந்தது என்று ஏற்கின்றனர். இவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற மனப்பான்மை யுடையவர்கள்.

குறிப்பிட்ட உயர்ந்த லட்சியத்தை அடைய எந்த வழிமுறையையும் பின்பற்றலாம் என்ற பொருள்பற்றி இப்பொழுதெல்லாம் அதிகமாக விவாதிப்பதில்லை. சட்டத்தின் ஆட்சியும், சர்வகலாசாலையின் சுதந்திரமும் தங்களது குழந்தைகளுக்கு விரும்பிய மொழியில் கல்வி போதிக்கும் பெற்றோரின் உரிமை, வழிபாட்டு உரிமை இவைகள் சிறிது சிறிதாகத் தேய்ந்து கொண்டு வருகின்றன. எந்த செயல் திட்டத்தையும் சிந்தனையையும் தங்களது இன ஒதுக்கல் திட்டத்திற்கு இடர் விளைவிக்குமோ என்று சோதனை செய்து பார்த்தே மதிப்பிடுகின்றனர்.

ஆங்கில மொழிப் பத்திரிகைகளுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நேரடியாக அதை அடக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. பத்திரிகை நடத்துவது (ஒரு புகழ் பெற்ற பத்திரிகை ஆசிரியரின் கூற்றிற்கு ஏற்ப) கண்ணை மூடிக் கொண்டு காட்டு வழியில் நடப்பதற்கு ஒப்பாகும்.

வெவ்வேறான கலாசாரத்தைப் பிரித்துத் தனித்து வளரச் செய்து, புதிய கருத்துகளை நுழைய விடாமல் கடினமாக்கி, வளர்ச்சி கெடச் செய்வதுதான் இன ஒதுக்கல் திட்டத்தின் முக்கிய நோக்கம். அரசாங்கம் கலைவளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் இறுதியில் வெற்றியடையுமா அல்லது கலைக்கு தானாகவே உயிரோட்டத்தோடு இயங்கக் கூடிய இயல்பு இருக்குமா என்பது.பிறகே தெரியும்.

தென் ஆப்பிரிக்காவிலுள்ள எல்லா இனத்தையும் சார்ந்தவர்கள், இந்த இன ஒதுக்கல் திட்டம் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதாகும் என்று நிராகரிக்கின்றனர்.

பழைய வழிமுறைகளை அறவே வெறுக்கின்றனர். துணிச்சலாகவும், வெளிப்படையாகவும் பேசுகின்றனர். தங்களது கருத்துக்களை ஆராய்விற்கும், விமர்சனத்திற்கும் உட்படுத்துகின்றனர். இவ்வாறு செய்வது ஆபத்து நிறைந்ததாகக் கூட இருக்கலாம்.

வெவ்வேறு இனங்களின் தனி வளர்ச்சிக்காக, பிரத்தியேகமான சட்டங்களும் வழக்காறுகளும், முயற்சியும் இருப்பினும், இந்த கலாசாரங்கள் ஒன்றுபட்டு இவைகளிடையே முழு இணைப்பு ஏற்பட வாய்ப்புகள் இல்லாமலில்லை. இந்த இணைப்பைத் தடுப்பதற்கு பல முயற்சிகள் நடை பெற்றாலும் அவை வெற்றி பெறாது என்பதற்கான அறிகுறியும் இருக்கின்றன.


இன ஒதுக்கலுக்கு ஆதரவான சக்திகளும், இனங்கள் ஐக்கியப்பட்டு இணைந்து வாழ்வதற்கான சக்திகளும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்கின்றன. இந்தப் போராட்டத்தின் வரலாறு தென் ஆப்பிரிக்காவின் வரலாற்றைப் போன்றே பழமையானது.


# நிறம் வேலையை நிர்ணயிக்கிறது

கடந்த ஐந்தாண்டுகளில் தென்னுப்பிரிக்க சர்வகலாசாலைகளிலிருந்து மூன்று வெள்ளையரல்லாத பொறியியல் பட்டதாரிகள்தான் தேறியுள்ளனர்.

ஒரு இனத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்குப் பதிலாக இன்னெரு இனத்தவரை அமர்த்துவதை அரசாங்கம் தடை செய்யலாம். குறிப்பிட்ட ஒரு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் சில வகை வேலைகளை ஒதுக்கலாம். அரசாங்கம் இந்த சட்டத்தை அமுலாக்கியதில் அது வெள்ளையரைப் பாதுகாக்க ஏற்பட்டது என்பதைப் புலப்படுத்தியுள்ளது. வெள்ளையரல்லாதார் தேர்ந்த தொழிலாளராகி விடாமல் தடுப்பதே இதன் நோக்கம். வேலையை ஒதுக்கும் கொள்கையையும் சமூக, பொருளாதார துறைகளில் ''வெள்ளையர் உயர்வை''யும் தீவிரமாக ஆதரிப்பவைகளாகத் தொழிற் சங்கங்கள் ஆகி விட்டன.

இன ஒதுக்கல் கொள்கை பற்றிய யுனெஸ்கோ யாதாஸ்திலிருந்து.








நடமாடும், வாழுமிட உரிமைகளில் தலையிடுவதன் மூலம் தென்னுப்பிரிக்க சட்டம் வெள்ளையரல்லாதவர்கள் சற்றும் கவர்ச்சியில்லாத வேலைகளை மேற்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கிறது என்று சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஓர் அறிக்கை கூறுகிறது. (மேலே) ஓர் ஆப்பிரிக்கத் தொழிலாளி வைரச் சுரங்கத்துக்கு வருகிறார்.

தேர்ந்த திறமை தேவைப்படும் வேலைக்கும் நிர்வாகப் பதவிகளுக்கும் வெள்ளையருக்குத்தான் இடமுண்டு (இடது புறம்) ஒரு வைரச் சுரங்கத்தில் ஆளெடுக்க பேட்டி நடக்கிறது.

ஒவ்வொரு மாலையும் (வலது புறம்) சுரங்கத் தொழிலாளர்கள் அன்று தாம் எடுத்த வைரங்களை ஒரு ஜன்னல் வழியே ஒப்படைக்கிறார்கள். வைரங்களை கடத்திச் சென்று விடாமல் தடுக்க தொழிலாளர்கள் பெரிதும் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். வேலை முடிந்ததும் தொழிலாளர்களை சோதனை செய்கிறார்கள். வலது கோடியிலுள்ளவர் சோதனை முடிந்து எக்ஸ்ரே எடுக்கப்பட விருக்கிறார். மேலும் வெள்ளையரல்லாத தொழிலாளர்கள் தங்கள் வேலைக் கால முழுவதும் சுரங்கப் பகுதிக்குள்ளேயே தான் வசிக்க வேண்டும்.







### இன ஒதுக்கல் கொள்கையால் கலாசாரத்துக்கு ஏற்பட்ட பாதகங்கள்

# தடை செய்யப்பட்ட உரையாடல்

— லூயி என்கோஸி

தென் ஆப்பிரிக்க சமுதாயத்தில் எப்பொழுதும் போலவே இன்றும் இணங்கி வாழ்வதற்கான நிர்ப்பந்த உணர்வுகள்தாம் மிக ஆழமாகப் பதிந்து கிடக்கின்றவை. இன ஒதுக்கல் கொள்கையைக் கடுமையாக எதிர்ப்பவர்கள் கூட இந்த உண்மையை அவ்வளவாகச் சுட்டிச் சொல்வதில்லை. ஆனால் அதை இங்கு சொல்லியாகவேண்டும். காரணம் அது முழு உண்மை மட்டுமல்ல அதற்கு ஆதரவான ருசுக்கள் இருக்கின்றன. இந்த உண்மையைக் கருத்திற்கொண்டு அலசிப்பார்த்தால்தான் 1949 முதல் தேசீயக் கட்சி இயற்றிய சட்டங்களின் உண்மையைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியும்.

கறுப்பர், வெள்ளையர் நலன்கள் ஒன்றுக்கொன்று முரணானவை என்ற ரீதியில் தென் ஆப்பிரிக்காவைப் பற்றிய கட்டுரைகளில் கூறப்படுவது ஒரு மோஸ்தராகி விடுகிறது. ஆனால் தம் போக்கில் விட்டு வைத்தால் வெவ்வேறு இனத்தவர் தம்மையும் அறியாமலேயே ஒருவரையொருவர் நெருங்கி வந்து ஏதாவது ஒரு வகையில் இணக்கமான வாழ்க்கையை நாடி வந்திருப்பார்கள் என்று புலனாகும்.

பொருளாதாரத் துறையில் இதற்கு தெளிவான ருசுக்கள் கிடைத்துள்ளன. அவ்வளவு எடுப்பாக இல்லாவிட்டாலும் சமூக உறவு முறைத் துறையிலும் அதே உணர்வு இருப்பதைக் காணலாம். எவ்வளவுதான் மறுதளித்து ஆழத்தோண்டிப் புதைத்து விட்டாலும் ஒன்று படுவதற்கான ஆர்வம் கிளர்ந்தெழுந்து தன்னிறைவு காண முயன்றுள்ளது.

சட்டத்தின் மூலமாகவும் அவசியமாயின் பலாத்காரத்தை உபயோகித்தும் எண்ணங்களைப் பிரித்து வைப்பதற்குச் செய்கின்ற முயற்சிகள் இந்த ஒற்றுமையுணர்வின் வலிமைக்குப் போதிய சான்றாகும். அது எவ்வளவு இயற்கையானது என்பதையும் புலப்படுத்தும். ஒன்று படுவதற்கான சுபாவம் இயற்கையாக அமைந்து ரகசியமாகச் செயல் படுவதன் காரணமாகத்தான் அதற்கு எதிரிடையான தடை மதில்களை எழுப்புவதில் அரசாங்கம் தன் சக்தியனைத்தையும் வீணாக்குகிறது. அரசாங்கத்தின் இந்த முயற்சி பலனளிப்பது அரிது என்பதுதான் அந் நாட்டின் கலாசார வாழ்க்கைக்கே தீங்கிழைக்கவும் செய்கிறது.

இன ஒதுக்கல் கொள்கையை அமுல் நடத்தும் வகையில் கறுப்பர்கள் சொல்லொணா இடர்பாடுகளுக்கு உள்ளாக நேரிடுகிறது. இதை இன ஒதுக்கல் கொள்கையாளரும் மறுக்கமுடியாது. இனப்பிரிவினை முழுமையாக அமுலாகின்ற நிலவரத்தில் எல்லா இனத்தவரும் உண்மையில் நன்றாக வாழ ஆன்மீக லௌகீக திருப்தி ஏற்படும். ஆனால் அது கை கூடுவதற்கு முந்திய இடைக் காலத்தில் சிரமங்களும் அநீதிகளும் தவிர்க்க முடியாதென அவர்கள் கூறுகிறார்கள்.

வெள்ளையர் பொருளாதாரச் சுரண்டலில் ஈடுபடும் வர்க்கத்தினர் என்றாலும் அவர்களுக்கு ஏற்படும் நஷ்டமோ மிக உண்மையானது, இயற்கைக்கு மாறானது, பித்துக்குளித்தனமானது என்று நியாய புத்தியுள்ளவர்கள் கருதுகின்ற கொள்கையை விடாப்பிடியாகக் கையாள்வதன் விளைவுதான் இந்த நிலை.

பண்பாட்டு வகையில் பார்த்தாலும் இதனால் வெள்ளையருக்குத்தான் அதிக நஷ்டம். தமது உணர்வுக்கு ஏற்ப வளர்ச்சி காண முடியாமல் அவர்கள் மட்டம் தட்டப்படுகின்றார்கள். சில கருத்துக்களை வெளியிடுவது அவர்களுக்கு மிக அவசியம் என்று தோன்றுகிறது. ஆனால் அப்படிச் செய்தால் வெள்ளையரின் மேலாதிக்கக் கொள்கையைக் குழி பறிப்பதாக மதிக்கப்பெறுமாகையால் அவர்கள் வாயடைத்துக் கிடக்கின்றனர்.

இதன் விளைவாகத் தமது மனத்தில் ஆழப் பதிந்துள்ள கனவுகளைக்கூட அவர்கள் அடக்கிவிட வேண்டியிருக்கிறது. இலக்கியம், இசை, சித்திரக் கலை, மதி நுட்பத்துடன் கூடிய உரையாடல் ஆகியவற்றின் சிறந்த உலக கலாசார படைப்புக்கள் அவர்களுக்குப் புறம்பாக இருக்கின்றன. அவை அரசாங்க அடிப்படைக்கு குழிபறிக்கக் கூடியவை என்ற காரணத்தாலும் விரும்பத்தகாத கனவுகளை ஊக்கிவிடக்கூடியவை என்ற காரணத்தாலும் மூடி மறைக்கப்படுகின்றன. வெளியுலகுடன் கலாசாரத் தொடர்பு இன ஒதுக்கல் கொள்கையின் விளைவாக இல்லாது போகிறது.


கலாசாரத்துறையில் உழைப்பவர்களில் பலர் வெள்ளையரல்லாதவர், அல்லது இன ஒதுக்கல் கோட்பாட்டை ஒத்துக் கொள்ளாத வெள்ளையர்களாக இருக்கின்றனர். எனவே தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர் சமுதாயமானது பிறருடன் தொடர்பற்று தனித்து நிற்கின்றது. உரிமையற்ற கறுப்பர்களது நிலை போன்றதுவே இதுவும். பிரபல சினிமாப்படங்களில் வெள்ளையரும் கறுப்பரும் அரவணைத்து நிற்கின்ற காட்சிகள் அவர்கள் பார்க்க இயலாதபடி தடைவிதிகள் இருக்கின்றன.

யுத்த பிற்கால சினிமாத்துறையில் மிகச் சிறந்த படைப்புகள் என்று கருதப்படுபவையும் சர்ச்சைக்குரிய நூல்களும் நாடகங்களும் தென் ஆப்பிரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ளன. இச் சூழ்நிலையில் தென்ஆப்பிரிக்காவுக்கு என்றே உரித்தான ஒரு பண்பாடு உருவாவது அரிது. அது நிச்சயமாக உலகியலுடன் ஒப்புறவு கொண்டதாக இருக்க முடியாது.

சுதேசிப் பண்பாடு வளர்ச்சியுறுவதை இன ஒதுக்கல் கொள்கை எவ்வாறு பாதிக்கிறது என்பதைச் சற்று விவரமாகப் பார்ப்போம். இது எனக்குத் தனி அக்கறையுள்ள இலக்கியத்துறை.

தென் ஆப்பிரிக்காவின் தேசீய வாழ்க்கையில் பொது சமுதாய உணர்வும், சேர்ந்து பழகி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும் இன ஒதுக்கல் கொள்கையின் கடுமையால் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் வெள்ளையர் கறுப்பர் ஆகிய எழுத்தாளர் எல்லோருமே மிகக் கடுமையான நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டுப் பணியாற்ற நேரிடுகிறது.

கறுப்பரான எழுத்தாளர் இன ஒதுக்கலைப் பற்றிய தமது கருத்தை உருவகப்படுத்துவதில் அவரது உணர்வுத் திறன் பெரிதும் வீணாகின்றது. அல்லது புரட்சிகரமான போராட்டத்தில் இடம் பெறுகின்ற காரணத்தாலும் அதே நிலை ஏற்படுகின்றது. பிறகு அவர் எங்கே சென்றாலும் அரசியலில் அலுப்புத்தட்டினாலும் 140 லட்சம் வெள்ளையரல்லாதாரின் சுதந்திர மற்ற நிலை பற்றிய சிந்தனையானது அவரது மனநிலை பெரிதும் விரிவு காணாதபடி பெருஞ்சுமையாக இருந்து வருகிறது. தனிப்பட்ட வேதனையின் விளைவாக, கிளர்ந்தெழும் அனுபவமாக இல்லாமல் மனம் போனவாறு உருவாகின்ற சுலபமானதோர் கலக உணர்ச்சி தன்னை உந்தித் தள்ளுவதாக எழுத்தாளர் உணருகின்ற சந்தர்ப்பங்கள் உண்டு. இத்தகைய உணர்வின் மூலம் உருவாகின்ற பாத்



**லூயி என்கோஸி,** தென்னாப்பிரிக்க எழுத்தாளரும், பத்திரிகையாளருமான இவர் 1936ல் டர்பனில் பிறந்தார். அங்கு கல்வி கற்று ஜுலு - ஆங்கிலப் பத்திரிகையான 'நேடால் கதிரவன்' தலையங்க எழுத்தாளரானார். பின்னர் 'டிரம்' பத்திரிகை, ஜோஹன்னஸ்பர்க்கிலுள்ள 'கோல்டன் சிடி போஸ்ட்' பத்திரிகை ஆகியவற்றின் ஆசிரியர் குழுவில் சேர்ந்தார். 1960ல் தென்னாப்பிரிக்க அரசாங்கத்தால் அவர் நாடு கடத்தப்பட்டார். 1966ல் அவருடைய கட்டுரைத் தொகுப்பு நீக்ரோ கலைகளுக்கான டாகர் உலக விழாவில் இரண்டாவது பரிசு பெற்றது. இப்போது லண்டனில் வசிக்கும் இவர் "புதிய ஆப்பிரிக்கன்" பத்திரிகையின் இலக்கியப் பகுதி ஆசிரியராக இருக்கிறார்.

திரங்களும் குணசித்திரங்களும் இன ஒதுக்கல் கொள்கை என்ற எல்லையை விட்டுப் பிறழாமல் இருக்கவேண்டுமென்ற உணர்வு மேலிடுகிறது. மனதைக் கல்லாக்குகின்ற ஒரு மனப்பான்மையை இது ஊக்குவிக்கக்கூடும் அல்லது படிப்பதற்கே அலுப்புத்தட்டும் படியாக அமைந்து விடும்.

தென் ஆப்பிரிக்கக் கறுப்பர்கள் பொருளாதார, ராஜீய வகையில் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகியிருந்த போதிலும் வாழ்க்கையைப்பற்றிய அவர்களது மனப்பான்மையில் அதிக பொறுப்புணர்ச்சி காணப்படுகிறது. தமது உண்மையான மனநிலைக்கும் வெளித் தோற்றத்துக்கும் இடையே ஒரு விதமான சமநிலையை உருவாக்கும் முயற்சியில் கனவுகளும் கற்பனைச் சித்திரங்களுமே வெள்ளை எழுத்தாளருக்குத் துணை புரிகின்றன. ஆனால் எல்லா மாய்மாலங்களும் அழிந்து படவேண்டியவையே என்ற உணர்வு கறுப்பர்களுக்கு சிறு பிராயத்திலேயே ஏற்பட்டு விடுகிறது.

பிரத்யட்ச உணர்வு இல்லாமல் பிரச்சினைகளைத் தட்டிக்கழித்துக் கற்பனை உலகில் வாழ்வோரின் மனநிலையை உளவியல் நன்கு புலப்படுத்துகிறது. . இவ்வகையில் எழுத்தாளருக்கும் மற்ற கலைஞர்களுக்குமுள்ள பொறுப்பு மிகமிக அதிகம். தாம் உண்மையில் கற்றறிந்தவைகளை மறந்துதான் பயனுள்ள எதையேனும் படைக்க அவர்களால் இயலும்.

உதாரணமாக வெள்ளையர்களாகிய தாங்களும் தங்களது மூதாதையரும் வீரதீரர்கள், அறத்தையொற்றிய ஞானம் அவர்களது ஏகபோகம், அறிவுத் துறையிலும் அவர்களே மேலோர் என்றெல்லாம் பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுத்ததை மறந்துதான் வெள்ளைக்கார எழுத்தாளர்கள் மதிப்புள்ள எதையும் உருவாக்க இயலும். எழுத்தாளர்களது இந்த அனுபவம் வெறும் கேலிக்கூத்துக்கு உரித்தானது என்று கருதினால் மட்டும் போதாது. பலவகைப்பட்ட வெளியுலகின் முழு அனுபவம் ஏற்படவேண்டுமாயின் அல்லது தம் நாட்டின் நிலவரத்துக்குப் பொருத்தமான எதையாவது சொல்ல வேண்டுமாயின் தம்மை இறுக்கி சிறைப்படுத்தியுள்ள இன ஒதுக்கல் கொள்கை என்ற கூண்டினின்று அவர்கள் வெளிவந்தாக வேண்டும்.

கறுப்பர்களான எழுத்தாளர் தமக்கு உகப்பான தார்மீக விஷயத்தைப் பொறுக்கி எடுத்து எழுதமுடியாத நிலை இருந்து வருகிறது. தம் மீது திணிக்கப்பட்ட முறையை எதிர்த்து காலந்தள்ளியாக வேண்டிய நிர்ப்பந்த நிலை அவர்களுக்கு இருந்து வருகிறது.

ஆப்பிரிக்க மரபுக்கு இசைவான நியதிகளை அடித்துக் கூறமுடியாத ஒரு நிலை இருந்து வருகிறது. இப்போதைய இன ஒதுக்கல் கொள்கையை ஊடுருவிச் சென்றுத் தமது ஆழ்ந்த அனுபவத்திலிருந்து கடைந்தெடுக்கும் விஷயங்களை அவர்களால் சொல்ல முடியாமல் இருந்தது. வெள்ளையரும் கறுப்பர்களும் முற்றிலும் மாறுபட்ட பிரகிருதிகள் என்ற தத்துவத்துக்கு எதிரிடையாக இருப்பதைத் தவிர வேறு சிந்தனை இருக்க முடியாமல் போகிறது. ஐரோப்பிய சிந்தனைச் செல்வங்களின் அம்சங்களை உணர்ந்தறிய முடியாது போகின்றது. இந் நிலவரத்தில் இன ஒதுக்கல் கொள்கை நியாயமானது, பிரத்யட்சத் தன்மை வாய்ந்தது என்று அவர்கள் முடிவு கட்டவேண்டி நேரிடுகிறது.

இந்நிலவரத்தில் ஐரோப்பியச் சிந்தனைச் செல்வத்தைத் தங்களால் செரித்துக் கொண்டு வெள்ளையரையே மிஞ்சி விடக் கூடிய திறன் தங்களுக்கு உண்டு என்பதை மெய்ப்பிக்க ஆப்பிரிக்க அறிவாளிகள் மிகமிகச் சிரமப்படுகின்றனர்.

புது நகர்ப்புற வாழ்க்கை விதிமுறைகளுக்கு உள்ளாக வேண்டியிருக்கும் சக ஆப்பிரிக்கர்களை எந்த மரபு வழி கலாசாரம் போஷித்து வந்திருக்கிறதோ அதையும் தமது சிந்தனைகளையும் ஆராய்ந்து பயன்படுத்த அவர்களால் இயலாமல் போகிறது. நகர்ப்புற ஆப்பிரிக்க இசைதான் ஆப்பிரிக்கக் கலைப் பண்பிற்கு சிறந்த உதாரணம் என்று நினைக்கும் படியாக அது செய்து விடுகிறது.

இசையின் வடிவம் இலக்கியத்தைப் போன்றதல்ல. எனவே இலக்கியத்திற்குள்ள நடைமுறைகள் இசைக்கு இல்லை. அதன் மூலம் தென் ஆப்பிரிக்க நிலவரத்தின் வேதனைகளை சுலபமாக வெளிப்படுத்த முடிகின்றது. தேச வாழ்வின் அடித்தளத்தில் என்ன நடைபெறுகின்றது என்பது இதைப் பிரகாசமாக எடுத்துக் காட்டுகின்றது.

நாட்டில் ஆப்பிரிக்கர் தான் எண்ணிக்கையில் அதிகமாகையால் இசைத் துறையில் பெரும்பாலும் அவர்கள் ஆதிக்கம் வகிக்கிறார்கள். இசை முறைகளில் ஒரு பல தரப்பட்ட இணைப்பு இருந்து வருகிறது. ஆப்பிரிக்க, ஐரோப்பிய இசை முறைகளை இணைத்து வழங்குவதற்கான சிறந்த சோதனைக்கூடமாக அந்நாடு திகழ்கிறது. அந்த அளவுக்கு கலாசார ஒருமைப்பாடு மனதை அள்ளும் வகையில் விரவி நிற்கின்றது. ஜனரஞ்சகமான இசையென்பது ஐரோப்பிய வகை இசையாக மட்டும் இருக்க இயலாது. தென் ஆப்பிரிக்க நகர்ப்புறங்களில் வழங்கும் இசை மேல் வகுப்பினரையே சார்ந்தது.

**வே**தனையும் கொடுமையும் கலந்த நெஞ்சையுருக்கும் நில்வரத்தை ஆப்பிரிக்கரின் இலக்கியப் படைப்புகளில் காணலாம். இசைத் துறையில் இது இன்னும் ஒருபடி அதிகமாக இருந்து வருகிறது. அடக்கி வைக்கப்பட்டிருக்கும் தென்னாட்டு மக்கள் மனதில் ஒரு தெம்புடன், திடசித்தத்துடன், போதிய நீக்குப் போக்குடன் தமது உணர்ச்சி உள்ளத்தைக் கொட்டுகிறார்கள். ஆனால் அத்தகைய புஷ்டியான கலைப்படைப்பில் உண்மையில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பு தென்ஆப்பிரிக்கருக்கு இல்லாமல் தடை செய்யப்பட்டுள்ளது.

பிரச்னையின் இந்த அம்சத்தைப் பற்றி ஒரு கட்டுரையில் விரிவாக எதையும் விவரிப்பதற்கில்லை. ஆனால் இப்போதைய கலாசாரச் சூழ்நிலையில் இருந்து வரும் கல்க்க நிலவரத்தைப் பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டும். அரசாங்கத்துக்கு எதிரிடையாக எழுதி விடுவோமோ என்ற பயம், அம்மாதிரி நடவாமல் தடுக்கின்ற கொடுமை ஆகியவை சுட்டிக்காட்ட வேண்டியவை. மொழியைக் கவனிக்காமல் கலாசாரத்தைப் பற்றி விவாதிக்க முடியாது. இத்துறையில் கடுமையான சிரமநிலை இருந்து வருகிறது. மொழிப் பிரச்சினையை சர்வாதிகார ஆட்சிகளின் நலனுக்காகத் திருத்திப் பயன் படுத்திக் கொள்கின்ற நிலவரத்தைக் கண்டிருக்கிறோம். அருவருப்பானதை, மிகப்பிடித்தமானது என்று அறிவிக்கும் படியான நிர்ப்பந்த நிலை இதன் மூலம் ஏற்படுகிறது. ஜார்ஜ் ஆர்வெல்லும், ஜெர்மன் இலக்கியத்தைப் பற்றி ஜார்ஜ் ஸ்டெய்னரும் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் இவ்வகையில் பயனுள்ளவை.

தமது அனுபவத்தினின்று எழுகின்ற ஆழ்ந்த உணர்ச்சிகளுக்கு அரசாங்க அங்கீகாரம் இல்லையென்றால் அவற்றை தென் ஆப்பிரிக்கரால் வெளிப்படுத்த முடியாத நிலை இருந்து வருகிறது. மனதிலொன்று வெளியிலொன்று என்ற வகையில் அவர்கள் தமது கருத்துக்களை வெளியிட வேண்டி நேருகிறது. இது கலாசார மலர்ச்சிக்கு முற்றிலும் எதிரிடையானது.

ஒழுக்கக்குறைவு என்பதற்கு தென் ஆப்பிரிக்கர் கொள்ளும் பொருள் என்ன என்று பார்ப்போம். கறுப்பர் வெள்ளையரிடை காதல் ஏற்படுவது இயற்கைக்கு மாறானது என்று அங்கு கருதுகிறார்கள். எனவே அத்தகைய உறவு முறையை ஒழுக்கக் கேடானது என்று சட்டம் செய்து தடுத்துள்ளனர். இதற்கும் ஒழுக்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்பது தென் ஆப்பிரிக்காவிற்கு வெளியே ஒப்புக் கொண்டுள்ள நிலை.

சர்வகலாசாலைக் கல்வியின் விஸ்தரிப்புக்கான சட்டம் என்பதன் மூலம் வெள்ளைக்காரரர் சர்வகலாசாலைகளில் கறுப்பர்கள் படிக்க முடியாதபடி செய்திருக்கிறார்கள். நகர்ப்புறங்களில் ஆப்பிரிக்கரது போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டத்துக்கு அனுமதிச் சீட்டு ஒழிப்புச் சட்டமென்று பெயர் தந்திருக்கிறார்கள்.

ஆப்பிரிக்கரது போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக என்று ''பாஸ்கள்'' வழங்கப்பட்டுள்ளன. அவற்றை அவர்கள் தம்முடன் எப்பொழுதும் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். மற்ற விவகாரங்களை விட இப் பிரச்னை மீது தான் அதிகமான கலகங்கள் தென் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்துள்ளன. 'பாஸ்' ஒழிப்பு என்பது தஸ்தாவேஜிகளின் இணைப்பு என்பதையும் பெயரளவில் தான் சேர்த்திருக்கிறார்கள். பாஸ்களைக் கொண்டு போய்த்தான் ஆக வேண்டும். இது மிகக் கேவலமான நிலை. மொழியின் பொருளை இவ்வாறெல்லாம் திரித்துப் பயன் படுத்துகின்ற காரணத்தால் தென் ஆப்பிரிக்கக் கலாசாரம் தேக்க நிலையில் இருந்து வருகிறது. புதுத் துறைகளில் தமது எழுத்து வன்மையைக் காட்ட விரும்புகிறவர்கள் சங்கேதங்களை உபயோகித்துக் கவிதா ரூபத்தில் சுற்றி வளைத்து தென் ஆப்பிரிக்க நிலைமையை விளக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிடில் வெள்ளையர்களான பிரசுரகர்த்தர்கள் அவைகளை வெளியிடமாட்டார்கள். இச்சூழ்நிலையில் ப்ரேய்ட்டன்பாக் போன்ற இளம் கலைஞரின் இலக்கியப் படைப்புக்களும் சித்திரங்களும் பொருள் படைத்தவை ஆகின்றன.



Photo © John Bulmer - Camera Press - Holmes Lebel

வெள்ளையர்கள் பிரதானமாகவுள்ள பிரதேசங்களில் விளையாட்டு அரங்குகளைப் பொதுவாக வெள்ளையர்கள் மட்டுமே பயன்படுத்தலாம். விதி விலக்காக தனி ஆசனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டால் பெரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வெள்ளையரல்லாதாருக்கு அனுமதி வழங்கப்படலாம். சிறிய நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை கலப்பு இனத்தவரையும் ஆசியரையும் வெள்ளையர் பாதிக்கப்படாத விதத்தில் அமைந்துள்ள மைதானங்களில் அனுமதிக்கப்படலாம். மேலே: ஒரு ரக்பி பந்தயத்தில் உற்சாக மிக்க ஆதரவாளர்.

### இன ஒதுக்கல் கொள்கையும் 'எல்லா கறுப்பர்களும்'

ஒரு வெள்ளையர் விளையாட்டுக் கோஷ்டி வெள்ளையரல்லாதார் கோஷ்டியுடன் போட்டியிட முடியாது. அரசாங்கத்தின் இன ஒதுக்கல் கொள்கை நாட்டுக்குள்ளேயும் வெளியிலுமுள்ள தென்னாப்பிரிக்க விளையாட்டுக் கோஷ்டிகளுக்கு மட்டுமன்றி, தென்னாப்பிரிக்காவுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு விளையாட்டுக் கோஷ்டிகளுக்கும் பிரயோகிக்கப்படுகிறது. நியூஜிலந்தின் 'எல்லா கறுப்பர்' ரக்பி விளையாட்டுக் கோஷ்டி 1967ல் தென்னாப்பிரிக்காவுக்கு விஜயம் செய்ய விருக்கிறது. நியூஜிலந்து தனது கோஷ்டியில் இரண்டு மோரிகளை சேர்த்துக்கொள்ள விருப்பம் தெரிவித்தது. ஆனால் தென்னாப்பிரிக்கப் பிரதமர் பகிரங்கமாக அறிவித்தார். "இதர மக்களுடைய வழக்கங்களை நாம் மதிப்பது போலவே நம் நாட்டுக்கு வரும் மற்ற நாட்டினரும் நம்முடையதை மதித்து நமது வழக்கங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்'' நியூஜிலந்து கோஷ்டி தென்னாப்பிரிக்காவுக்குப் போவதில்லை என்று முடிவு செய்தது.

இன ஒதுக்கல் கொள்கை பற்றிய யுனெஸ்கோ யாதாஸ்திலிருந்து.



## இன ஒதுக்கல் கொள்கையால் கலாசாரத்துக்கு ஏற்பட்ட பாதகங்கள்

# உள்ளக்கொதிப்பின் வித்துகள்

—டெனிஸ் புருட்டஸ்

இன ஒதுக்கல் கொள்கை பற்றி உலகம் வெகுவாக அறிந்து கொண்டிருக்கிறது. 14,000,000 தென் ஆப்பிரிக்கர்கட்கு, வெள்ளை நிறம் இல்லாதவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமல் மறுக்கும் கொடுமை வாய்ந்த ஓர் அரசியல் முறை தான் இந்தக் கொள்கை என்பதையும் உலகம் அறிந்துள்ளது. நிறம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு கருணையற்ற முறையில் மக்களைப் பிரித்து வைக்கின்ற ஒரு சமுதாய அமைப்பு முறைதான் இக் கொள்கை என்பதையும், அங்ஙனம் பிரிக்கப்பட்ட மக்கள் இப் பிரிவினைக் கோடுகளைத் தாண்ட முற்பட்டால், அவர்களைத் தண்டிக்கும் சூழ்நிலையையும் உருவாக்கி உள்ளது என்பதையும் உலகம் அறியும். என்றாலும் மக்களின் சமுதாய வாழ்க்கையையும் பண்பாட்டு வளர்ச்சியையும் இது எந்த அளவு பாதித்திருக்கிறது என்பதுபற்றிப் பலருக்கும் அதிகம் தெரியாது.

இன ஒதுக்கல் கொள்கையை நன்கு அறிந்துகொள்ள வேண்டுமேயானால், மக்களின் அன்றாட வாழ்க்கையையும் இச் சட்டத்தின் அடிப்படையில் அவர்களுடைய வாழ்க்கை எங்ஙனம் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்பதையும், சட்ட அடிப்படையிலும் சமுதாய மரபு அடிப்படையிலும் அறிவதுடன் இக் கட்டுப்பாடு எங்ஙனம் நடைமுறையில் அவதியளிக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

கருப்பு நிறம் உடையவர்களுக்கென்று மிகக் குறைவான பஸ்களே இருக்கின்ற காரணத்தால், பஸ்ஸுக்கு ஏறும் வரிசையில் பல மணி நேரங்கள் நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. வழியில் காணப்பெறும் நாடக அரங்கிலும், நீந்தும் குளத்திலும் உள்ளே நுழையலாம் என்ற எண்ணத்திற்கு இடம் கொடுக்காமல் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. மேலும், இக் கட்டுப்பாடுகள், மக்களின் சிந்தனையைக்கூடப் பாதிக்கின்ற அளவு செல்வதாலும், கருப்பர் வெள்ளையர் என்ற இருவரையுமே இவை கட்டுப்படுத்துவதாலும் தென்னாப்பிரிக்காவிலுள்ள அனைவருமே தாம் விரும்பிய

டெனிஸ் புருட்டஸ்: தென் ஆப்பிரிக்காவில் நுழைய முடியாதபடி வெளியேற்றப்பட்டு இப்பொழுது இங்கிலாந்தில் வசித்து வருகிறார். நல்ல விளையாட்டு வீரரான இவர் தென் ஆப்பிரிக்க விளையாட்டுக் கழகம், என்பதை நிறுவி அதன் செயலாளராகவும் இருந்துள்ளார். இவரே தென்னாப்பிரிக்க இன வேறுபாடற்ற ஒலிம்பிக் குழுவின் தலைவராகவும் இருந்துள்ளார். அனைத்து நாடுகளும் நிறத்துவேஷக் கொள்கையை எதிர்த்து நடத்திய ஆர்ப்பாட்டங்களைப் போல் இந்தக் குழுவும் ஆர்ப்பாட்டம் செய்து 1964ல் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களில் தென்னாப்பிரிக்கா கலந்து கொள்ளாமல் தடுக்கும் சூழ்நிலையை உருவாக்கியது. நிறவெறிக் கொள்கையை எதிர்த்துப் போராடியதால் பலமுறை கைது செய்யப்பட்டார் இவர். துணை மொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியராகப் பதினன்கு ஆண்டுகள் பணியாற்றிய இவர் 1961ல் ஆசிரியப் பதவி வகிக்கக் கூடாதென்று தடை செய்யப் பெற்றார். 1962ல் அவருடைய நூல்களை வெளியிடக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டது. 1964-65ல் போலீஸால் காயப்படுத்தப்பட்டு 28 மாதங்கள் கடுந் தண்டனை அடைந்தார். 43 ஆண்டுகள் நிரம்பிய இவருடைய 'சைரன்ஸ், நக்கிள்ஸ் அன்ட் பூட்ஸ்' என்ற கவிதைத் தொகுப்பு 1962ல் அகில ஆப்பிரிக்கப் போட்டியில வென்று 'ம்ப்ரி'ப் பரிசைப் பெற்றது.



Photo © Sunday Times

### இன ஒதுக்கல் கொள்கையால் கலாசாரத்துக்கு ஏற்பட்ட பாதகங்கள்

# சிதையும் உள்ளங்கள்

ரோனல்டு ஸீகல்

தைப் படிக்கக்கூட முடியாத நிலையில் உள்ளனர். காரணம் தம்முடைய இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரானக் கருத்துக்களைப் பரப்புகிறது என்று சில நூல்களைப்பற்றி அரசாங்கம் நம்புகிறது.

விளையாட்டுத் துறையில் மேம்பட்டுள்ள சிறந்த கிரிக்கெட் வீரர் 'பாஸில்தா வோலிவேரா', கால்பந்தாட்டத்தில் சிறந்த 'ஸ்டீவ் மக்கோன்' பளுத் தூக்குவதில் சிறந்த 'பிரஷ்ஷியஸ் மெக்கன்ஸி' போன்றவர்கள் வெள்ளையர் அல்லர் என்ற ஒரே காரணத்திற்காகத் தம் தாய்நாட்டின் பிரதிநிதிகளாக எங்கும் செல்ல முடியாமல் இருப்பதும் இக் கொள்கையின் பயனேயாகும். சிறந்த இசைக் கலைஞர்களும் நாடக கலைஞர்களும் ஆகிய 'மெரியம் மெக்கபா', 'லையனேல் மெகக்கனே' போன்றவர்கள் தங்கள் தோலின் நிறம் காரணமாக ஒரு சில அரங்கங்களில் ஒரு சில ரசிகர்கள் முன்னிலையில் தோன்றக்கூட முடியாத நிலையில் இருப்பதும் இந்தக் கொள்கையின் பயனேயாகும். கரு நிறம் உடையவர்கள் 'வெர்டி' என்பவர் எழுதிய 'லாடிரேவியாத்தா' என்ற நாடகத்தை நடிக்கலாம் என்றாலும் மற்றக் கருப்பர்கள் அரசாங்கத் தலைவரின் எதிரில் அதைச் சென்று பார்க்க முடியாது.

இந்தக் கட்டுப்பாடுகளுக்கு ஓர் அளவே இல்லை. இங்குக் காட்டப் பெற்றவை மிகச் சில உதாரணங்களே யாகும். இச் சிறுசிறு உதாரணங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு மக்கள் இனத்தையே பிரிவினை செய்வதாக அமைந்துவிடுகிறது. இப் பிரிவினை மனக்கசப்பையும் பகைமையையும் வளர்ப்பதாக உள்ளது. கருப்பர்களும் வெள்ளையர்களும் பார்வையாளராக உள்ள விளையாட்டு அரங்கங்களில்கூட அவர்கள் தத்தம் இனத்தவர்களையே ஊக்கிவிடுவதால் ஒருவிதக் கசப்பு வளருகின்றது. இதன் பயனாகப் பல்வேறு விளையாட்டு அரங்கங்களில் வெள்ளையர் மட்டுமே அனுமதிக்கப் படுகிறார்கள்.

மிகச் சிறிய நிகழ்ச்சிகள் கூட இன ஒதுக்கல் கொள்கையின் விளைவு என்ன என்பதை அறிவுறுத்துகின்றன. ஒரு முறை 'லியர் அரசன்' என்ற நாடகம் அரங்கத்தில் நடிக்கப் பெற்றது. என்னுடைய உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அது பாடமாக அமைந்து இருந்ததால், அவர்களை அழைத்துக்கொண்டு நான் சென்றபொழுது அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டார்கள். நான் செய்கின்ற ஆராய்ச்சியின் நிமித்தம் ஆப்பிரிக்கானர் போடும் ஒரு நாடகத்தைப் பார்க்கச் சென்றபொழுது தவறுதலாக எனக்கு முதலில் நுழைவுச் சீட்டுத் தந்துவிட்டுப் பிறகு நான் இன்னார் என்று தெரிந்தவுடன் டிக்கெட்டையும் திரும்பப் பெற்றுக்கொண்டு என்னை உள்ளே நுழையவும் அனுமதிக்க மறுத்துவிட்டார்கள். பூங்காவிலுள்ள விளையாட்டு இடங்களில் குழந்தைகள் விளையாடுவதற்காக உள்ள ஏற்றம், ஊஞ்சல் முதலியவற்றில் இருந்து இளம் குழந்தைகளை வெருட்டி அடிக்கின்றதையும் கண்ணால் பார்த்திருக்கிறேன். அக் குழந்தைகள் செய்த ஒரே குற்றம் அவர்கள் கருப்பாக இருப்பதுதான். வெள்ளையர்களும் கருப்பர்களும் இன்றும்கூட ஒன்றாகச் சென்று வழிபடக்கூடிய ஒருசில மாதாகோவில்களில் கருப்பர்கள் வெள்ளையர்களுக்குப் பின்னர்தான் மண்டியிட வேண்டும். ஆசீர்வாதத்தைப் பெறுவதற்குக்கூட வெள்ளையர்களுக்கு அப்புறம்தான் செல்லவேண்டும்.

இந்த நாட்டில் வெள்ளையரும் கருப்பரும் ஒன்றாகக் கூடிச் சதுரங்கம் ஆடுவது கூடச் சட்ட விரோதமாகும். சதுரங்கத்தில் இந்த நிறவெறி இருந்தும் கூட அகில உலகச் சதுரங்க சம்மேளனத்தில் தென் ஆப்பிரிக்கா இன்னும் ஓர் உறுப்பாக இருந்து வருகிறது. கருப்பர்களோடு கலந்து கால்பந்து ஆட முயன்ற ஒருசில வெள்ளையர்கள் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

வெள்ளையர்களும் கருப்பர்களும் தனித்தனிப் பிராந்தியங்களில் வசிக்கின்றார்கள் ஆதலால், கருப்பர்களுக்கு வீடுகள் தேர்ந்தெடுப்பது என்பது கடினமில்லை. கருப்பர்களின் வீடுகள் நகராட்சியின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ்க் கட்டப்பட்டு, கோழிக்கூண்டு வீடுகளாகவும் தகரத்தால் மூடப்பட்ட குடிசைகளாகவும் இருப்பதைக் காணலாம்.

இப்படிப்பட்டக் கேவலமான தடைகள் நிறைந்துள்ள ஒரு சமுதாயத்தில் தடைகளே இல்லாததுபோல் பாவனை செய்து கொண்டு வாழ்வது நல்லது தான். ஆனால், இதனுடைய பயன் என்னவென்றால், வெள்ளை தென் ஆப்பிரிக்கர்களிடையே வாழும் எழுத்தாளர்களும் கவிஞர்களும் சமுதாய நிலையை உள்ளவாறு பிரதிபலிக்கும் இலக்கியப் படைப்புகளைத் தோற்றுவிக்க முடியாத நிலையை அடைந்துவிட்டார்கள். சமுதாயத்தின் இந்நிலையைக் காண மறுக்கும் கண்மூடித்தனம் எத்துணைத் தூரம் ஆழமாகச் சென்றுள்ளது என்றால், பல்லாண்டுகளாகத் தென் ஆப்பிரிக்காவில் உண்மையான தகுதியுள்ள எத்தகைய ஒரு நூலும் தோற்றுவிக்கப்படவில்லை.

வெறுப்பும் துயரமும் மனத்தாங்கலும் நிறைந்துள்ள கருப்பு எழுத்தாளர்களிடையேயாவது உயிர்த் துடிப்புடைய இலக்கியம் தோன்றக் கூடுமென்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. ஆனால், அவர்களைப் பொறுத்தமட்டில் இன ஒதுக்கல் கொள்கை வேறு விதமான பிரச்சினையை உண்டாக்கி உள்ளது. உள்ளதை உள்ளவாறே எழுதினால், அந்நூல் தடைக்குள்ளாகும். எனவே 'அலெக்ஸ் லா குமா' போன்ற சக்தி வாய்ந்த எழுத்தாளர்கள் தடை உத்தரவுகளினால் வாய் மூடப்பட்டனர். 'ஆல்பிரெட் ஹட்சின்சன்', 'புளோக் மோடிசேன்' போன்ற எழுத்தாளர்கள் சிறைவாசத்திற்கு அஞ்சி நாட்டை விட்டே ஓடிவிட்டனர். மேலும் சிலர் இன்னும் கொடுரமான அவலங்களை அனுபவித்தனர். 'நாட் நாகாஸா' என்பவர் இந் நாட்டை விட்டே ஓடிவிட வேண்டும்; மீளக்கூடாது என்ற உத்தரவில் கையெழுத்துப் போடும்படி வற்புறுத்தப்பட்டபோது நியூயார்க்கில் தற்கொலை செய்து கொண்டார்.

வெள்ளை எழுத்தாளர்கள் கூட (ஆன்ரே பிரிங் போன்றவர்) இன ஒதுக்கல் கொள்கையை எதிர்த்துப் பேசினாலும், பேசுவது போல் காணப்பெற்றாலும் துன்பத்திற்கு உள்ளாயினர். அவர்களுடைய நூல்கள் தடை செய்யப் பெற்றதுடன் இன ஒதுக்கல் கொள்கையை ஆதரிக்கும் ஆட்சியாளர்கள் முரட்டுத்தனமாக இந் நூல்களைக் கண்டித்தனர்.

( தொடர்ச்சி 35ம் பக்கம் )



Photo © Jonathan Cape Ltd., London

**ரோனல்டு ஸீகல்:** புத்தக ஆசிரியரும் பத்திரிகை எழுத்தாளருமாகிய ரோனல்டு ஸீகல், 1932ம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவில் பிறந்தார். கேப்டவுன் சர்வ கலாசாலையில் பட்டம் பெற்ற பிறகு, கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலும் பட்டம் பெற்றார்; தென் ஆப்பிரிக்க மாணவர்கள் இயக்கத்தில் பெரும் பங்கு வகித்தார். ஐக்கிய அமெரிக்காவில் சில காலம் தங்கியிருந்தார். அங்கு வர்ஜீனியா சர்வ கலாசாலையில் பட்டதாரிகளுக்குக் கிடைக்கக் கூடிய ஊதியத் திட்டத்தின் அடிப்படையில் உதவி பெற்றார். பிறகு தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று "ஆப்பிரிக்கா - தெற்கு" என்ற காலாண்டுக்கு ஒரு முறை பிரசுரிக்கும் ஒரு வெளியீட்டைத் துவக்கினார். இது அகில உலகத்திலும் இன ஒதுக்கலைக் கண்டிக்கும் ஒரு முக்கியக் கருவியாக புகழ் பெற்றது. ஷார்ப்வில்லியில் நடந்த துப்பாக்கிப் பிரயோக நிகழ்ச்சிக்கு ஒன்பது நாட்களுக்குப் பிறகு, கைதாகாமல் தென் ஆப்பிரிக்காவிலிருந்து தப்பி ஓடினார். இங்கிலாந்தில் குடியேறி, நாடு கடத்தப்பட்ட நிலையில், "ஆப்பிரிக்கா - தெற்கு" என்ற வெளியீட்டினை 1961ம் ஆண்டு வரை நடத்தினார். அவ்வாண்டில் பெங்குவின் புத்தகக் கம்பெனியாரின் ஆப்பிரிக்க நூலகத்திற்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் 1963ம் ஆண்டில் "நாடு கடத்தப்பட்ட நிலையில்" என்று தன்னுடைய சுய சரிதையை வெளியிட்டார். அதற்கு அடுத்த ஆண்டில் லண்டன் நகரில், தென் ஆப்பிரிக்காவிற்குப் பொருளாதார ரீதியில் தடுப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக அகில உலக மகாநாட்டினைக் கூட்டினார். இவர் சமீபத்தில் எழுதிய புத்தகம் "இனப் போர்" என்பதாகும்.

தென் ஆப்பிரிக்காவிலுள்ள பெரும்பான்மையான வெள்ளையர்கள் தங்கள் அழிவைத் தாங்களே தேடிக் கொள்வது இரங்குதற்குரியதும் திகைப் பூட்டுவதும் ஆகும். இன ஒதுக்கல் திட்டத்திற்குப் பலியான சில வெள்ளையர்களும் கருப்பு நிறத்தவர்களும் இத்திட்டத்திற்கு எதிராகப் போராடுவதையே மனிதத்தன்மையின் முடிந்த பொருள் என்று கருதுகிறார்கள். அதுவே தங்கள் வீரத்தையும் விசுவாசத்தையும் அன்பையும் வெளிக்காட்டும் என்று நினைக்கின்றனர்.

இன ஒதுக்கல் திட்டம் பலருக்கு அழிவையே தேடித் தந்துள்ளது. இதற்குப் பலியானவர்களுள் ஒரு சிலர் அரசியல் நடவடிக்கைகளைக் கவனிக்கும் வேவுகாரர்களின் கொடுமையைத் தாங்காது தங்களது சகாக்களைக் காட்டிக் கொடுத்ததன் மூலம் தங்களையே காட்டிக் கொடுத்துள்ளனர். வேறு சிலர் போலீசுக்குத் தகவல் கொடுக்கும் உளவாளிகளாகச் செயல்படுகின்றனர். மற்றும் சிலர் நிர்வாக அமைப்பில் அமைதியாகப் பணியாற்றும் பொறுப்பேற்று தங்களுக்கு அதிகாரத்தின் மூலம் பாதுகாப்பைத் தேடிக் கொண்டு தங்கள் இழிந்த நிலையைப் பொருட்படுத்தாமல் வாழ்கின்றனர். இதைத் தவிர தங்களது நிலையைப் பற்றி எடுத்துரைக்கும் வகையின்றி எதிர்க்கவும் சக்தியற்று எண்ணற்றவர்கள் இருக்கின்றனர். இவர்கள் தங்களது இழிநிலையைக் கண்டு வெட்கி, மனங்குமுறித் தங்களுக்குத் தாங்களே துன்பத்தை விளைவித்துக் கொள்கின்றனர். இவ்வாறு எதிர்ப்பின்றி எதிரிக்கு இணங்கும் இயல்புடையவர்கள், பகைவனுக்கு உடந்தையாக ஒத்துழைப்பவர்கள், காட்டிக் கொடுப்பவர்கள் ஆகியோர் வேதனைக்குள்ளானவர்கள் என்று சொல்லாம். இவர்கள் தங்களது வேதனையை உணரக் கூடியவர்களாக இருப்பதனால், தங்களது இழிநிலை அவர்களுக்கு மன நலிவை ஏற்படுத்துகின்றது.

பிறரை வேதனைக்கு உள்ளாக்குகின்றவர்கள் தங்களது செயலைக் குறித்து வேண்டுமென்றே கவலைப்படுவதில்லை. தென் ஆப்பிரிக்க வெள்ளையர்கள் மத்தியில், எதிர்ப்பவர்கள் விரைவில் சர்தாரண மனிதர்களாகி விடுவார்கள். சாதாரண மானவர்கள் புறக்கணிக்கப் படுவார்கள்

வெள்ளையரது சிந்தனை நலிவுற்றிருப்பதை எங்கும் வெளிப்படையாக உணர முடிகிறது. எதிர்ப்புக்கொள்கை பரப்பும் கருவிகளெல்லாம் அடக்கியொடுக்கப்பட்டுள்ளன, அல்லது அவை தலைமறைவாகத் தப்பிப் பிழைத்துச் செயல் படுகின்றன. பிரச்சினைகளை மேலெழுந்த வாரியாக விமரிசித்தாலும் ஒரு காலத்தில் யாருக்கும் கீழ்ப்படியாத வகையில் இயங்கி வந்த ஆங்கில செய்தித்தாள்கள், இன்று வெள்ளை ஆட்சியின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நடக்கின்றன.

தென் ஆப்பிரிக்காவின் வானொலி நிலையம் கம்யூனிஸ்டுகளின் நாட்டிற்கு உள்ளேயும், வெளியிலும் கம்யூனிஸ்டு தீமை என்ற பெயரால் உண்மைக்குப் புறம்பான நிகழ்ச்சிகளை அத்துமீறிய வகையில் ஒலி பெருக்குகின்றன. வெறுக்கத்தக்க இந்த நிகழ்ச்சிகளை பல ஆண்டுகளாகப் புண்பட்டு, நொந்த உள்ளங்களே திடுக்கிடாமல் கேட்க முடியும். தென் ஆப்பிரிக்காவில் டெலி



Photo © Ian Berry - Magnum

காமன்வெல்திலிருந்து விலகிய இரண்டு மாதங்களுக்குப் பிறகு 1961 மே 31ந் தேதி தென்னாப் பிரிக்கா குடியரசாகப் பிரகடனப் படுத்தப் பட்டபோது எடுக்கப்பட்ட படம் - வயதான ஆப்பிரிக் கானர் தம்பதி. இன ஒதுக்கல் கொள்கை குறித்து இதர காமன்வெல்த் நாடுகள் குறை கூறியதற்கு நாட்டின் எதிர் விளைவு இவ்வாறு இருந்தது.

விஷன் கிடையாது. வெள்ளையர்களின் பாதுகாப்பிற்காக வெளி நாட்டிலிருந்து சில நிகழ்ச்சிகளை இறக்குமதி செய்வதைத் தவிர்க்க டெலிவிஷன் கருவியை வேண்டாமென்று முடிவு செய்து விட்டனர். தங்களது நாகரீகம் பிழைக்க உணர்வுத்திறனோடு இத்தகைய முடிவு எடுத்திருப்பது மகத்தான தியாகமாகும்.

படக் காட்சிகளைக் கடுமையாகத் தணிக்கை செய்கின்றனர். இனப் பாகுபாடுகளைக் கவனியாது பாரபட்சமற்ற நிலையைப் பிரதிபலிக்கும் படங்களைத் தடை செய்கின்றனர். அல்லது பொருத்தமற்ற வகையில் சில பகுதிகளை வெட்டி விடுகின்றனர்.

ஜோஹன்னஸ்பர்க்கிலும் கேப்டவுனிலும் உள்ள ஆங்கில பல்கலைக் கழகங்கள் இன ஒதுக்கல் திட்டத்திற்கு அப்பாற்பட்டவைகளாக நீண்ட காலமாக இயங்கி வருகின்றன. அறிவு ஆற்றலுக்கும் எதிர்ப்புக்கும் உறைவிடமாக இவை விளங்கின. வெள்ளையரல்லாதவர்கள் இத்தகைய பொதுவான பல்கலைக் கழகத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு இன அடிப்படையில் அவர்களுக்கு என்று ஒதுக்கி உள்ள பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஆப்பிரிக்க மக்களுக்கும் இன அடிப்படையில் தனியான நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிறுவனங்களின் ஆசிரியர்களைக் கம்யூனிஸ்டுகள் என்ற பெயரால் அரசாங்கம் தலையிட்டு வெளியேற்றுகின்றது. கருத்து வேறுபாடு உடையவர்களை மிரட்டி அச்சுறுத்துகின்றனர். அமைதியைக் குலைக்கும் மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள மாணவர்களையும் ஒளிவு மறைவின்றிப் பேசக் கூடிய தலைவர்களையும் பிரத்யேகமான அடக்கு முறைக்கு உள்ளாக்குகின்றனர்.

பொது புத்தகக் கடைகள், நூலகங்கள், தனியார் நடத்தும் புத்தகக் கடைகள் இவைகளில் தடை விதிக்கப்பட்ட சிறு புத்தகங்கள், செய்தித்தாள்கள் விற்பனைக்கு அனுமதிக்காமல் நீக்கப்பட்டு விடுகின்றன. வெளி நாட்டில் பிரசுரித்ததாகவோ அல்லது ஒரு காலத்தில் தென் ஆப்பிரிக்காவில் சட்ட ரீதியாக வெளியிடப்பட்ட நூல்களாகவும் இவைகள் இருக்கலாம். இவ்வாறு தடை விதிக்கப்பட்ட புத்தகங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது.

தென் ஆப்பிரிக்க அரசு தங்களது எதிர்ப்பாளர்களில் பயங்கரமானவர்களைக் கூட்டத்திற்கு வராமல் தடை விதிக்கின்றனர். அத்துடன் நின்றுவிடுவதில்லை. அவர்களது அறிக்கைகள் நாட்டிலுள்ள எந்த செய்தித்தாளிலும் வராது. தடைகள் விதிக்கப்படுகின்றன.

வெள்ளையர் அல்லாதவர்களைவிட வெள்ளை நிறத்தவர்கள் மத்தியில்தான் அதிக அச்சம் நிலவுகின்றது என்பதுதான் உண்மை. வெள்ளையரல்லாதவர்கள் வெள்ளையர்களைக்கண்டு பயப்படுகின்றனர். வெள்ளையர்களோ அல்லாதவர்களைக்கண்டு அச்சமுறுவதோடு தங்களுக்குள்ளேயே பீதி அடைந்துள்ளனர். ஒழுக்க மின்மையைத் தடை செய்வதின் பெயரால் சட்டம் ஒன்றைப் பிறப்பித்து வெள்ளையர்களும் வெள்ளையரல்லாதவர்களும் கலப்புத் திருமணம் செய்துகொள்வதைத் தடுத்து அதை மீறுகின்றவர்களுக்கு சிறை தண்டனையும் ஏற்பாடாகியுள்ளது. இவ்விரு இனத்தவரிடையே ஏற்படக்கூடிய உறவினைப் பயங்கரமான





Photo © Emil Schultess - Rapho

***அவசியமான அனுமதி இருந்தாலன்றி இரவு 11 மணிக்கும் காலை 5 மணிக்குமிடையே "வெள்ளை" நகர்ப்புறங்களில் ஆப்பிரிக்கர் நுழைவதை கட்டுப்படுத்தும் நிரந்தரத் தடைச் சட்டம் உள்ளது. மேலே ஜோர்ஹன்னஸ்பர்க்கில் ஒரு வீதி.***

சமூகக் குற்றமென்றும் வெள்ளையர்கள் நினைக்கின்றனர். இந்தச் சட்டத்தை மீறுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றது. பொறுப்புள்ள வெள்ளையர்களான டச்சு நாட்டு சீர்திருத்த கிறிஸ்துவக் கோயில்களின் பாதிரிகளும் போலீஸ்காரர்களும் இந்தச் சட்டத்தை மீறிய குற்றவாளிகளாக நீதிமன்றத்திற்கு முன்னால் பெரும் படையாகத் திரண்டு வரும் பொழுது திகைப்பு ஏற்படுகின்றது.

வெள்ளையர்கள் என்று யாரைக் குறிப்பிடுவது? முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு முதல் முதலாகக் குடியேறிய மக்களின் ஒரு சில குடும்பத்தவரே கலப்பற்ற தூய்மையான வெள்ளை இனத்தவர்கள் என்று கூறிக் கொள்ளலாம். மக்கள் தொகை பதிவு மசோதாவின் கீழ் தென் ஆப்பிரிக்காவில் அனைவரும் கட்டாய இனப் பாகுபாட்டின் அடிப்படையில் அடையாளச் சீட்டுகள் பெறுகின்றார்கள். இத்தகைய ஏற்பாட்டினால் அநேகருக்கு என்றுமே இல்லாத முறையில் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று உள்துறை அமைச்சர் 1958ல் உறுதியாக அறிவித்தார். அதிகார பூர்வமான இத்தகைய தீர்ப்பின் மூலம் அச்சம் நீங்கி விடுவதில்லை. அதற்குப் பதிலாக மேலும் வலுவடைகிறது.

அச்சத்தைத் தவிர்க்க மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும் அச்சத்தை அதிகமாக வளர்ப்பதாகவே இருக்கிறது. தங்களது கோட்பாட்டு நெறியிலிருந்து வழுவாது பார்லிமெண்டரி அரசியல் அமைப்பில் இயங்கும் எதிர்க் கட்சியைபோன்று இயங்கும் இயல்புடைய தென் ஆப்பிரிக்க வெள்ளையர்கள், போலீஸ் உளவுகாரர்கள் தங்களை கவனிப்பதாக இவர்கள் கற்பனை செய்து கொண்டு, தொலைபேசியில் அரசியல் ஏதும் பேசுவதில்லை. சொந்த கடிதங்களில் அரசாங்கத்தைப் பற்றிய விமர்சனம் எதையும் அனுமதிப்பதில்லை.

எதைப் பற்றியும் சிந்திக்க மறுப்பதே அச்சப்பாதையிலிருந்து தப்பிக்கொள்ள வழி என்று இவர்கள் எண்ணுகிறார்கள். சிந்திக்க முற்பட்டால் இன அடக்கு முறை அட்டூழியத்தினால் ஏற்படும் சிக்கல்களை புரிந்து கொள்ளுவதாகும், மேலும் இத்தகையத் திட்டம் முற்போக்கு அடைந்துள்ள உலகத்தில் நீடித்திருக்க முடியாது என்பதை சிந்தனை செய்யும் மனம் உணர முடியும்.

இந்நிலையில், எஞ்சி இருப்பது அச்சமும் இனவெறி ஆதிக்கப் பசியுமேயாகும். இவை ஒன்றையொன்று பயங்கரமாக திருப்தியற்ற முறையில் விழுங்கிக் கொண்டிருக்கின்றன.

## இன ஒதுக்கல் கொள்கை பண்பாட்டை எவ்வாறு பாதிக்கிறது?

# தளைப்பட்ட ஆன்மா

— பிரேய்ட்டன் பிரேய்ட்டன்பாக்

"நாங்கள் திணறித் தவித்தது போல் கிடந்த அந்த நிலையை எப்படி வர்ணிப்பேன்! கொள்ளைநோயில் சிக்கியதோர் நிலை அது. மருட்டும் பேராபத்துக்கும், நாடு கடத்தப்பெற்ற சூழ்நிலைக்கும் ஆளாகி வாழ்ந்தோம்."
(ஆல்பர்ட் காமஸ்)

பொதுவாக ஒப்பும் சில கோட்பாடுகளும், முக்கியமான ஆதரிசங்களும் எங்கும் உண்டு. தென் ஆப்பிரிக்காவைப் பொறுத்தவரை இவற்றை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியே ஆக வேண்டும். இந்தக் கோட்பாடுகளை அந்த நாட்டினர் தற்போது பலவகையில் மாற்றிச் சிதைத்துத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதால் இப்படி வலியுறுத்துவது மிக அவசியமாகும். உலகம் முழுவதும் இந்தக் கோட்பாடுகளுக்கும் ஆதரிசங்களுக்கும் பொதுவாக ஒப்பக்கூடிய பொருளில்தான் தங்கள் சட்டவிதிகளும், செயல் முறைகளும் அமைந்திருக்கின்றன என்பதுபோல் அங்குள்ள வெள்ளையர் சமூகம் போலி நியாயம் பேசுவதை அம்பலப்படுத்தியே ஆகவேண்டும். கல்வி, சட்டமுறை, சட்டவிதிகள், அரசியல், இனக் கொள்கை, உழைக்கும் உரிமை, தொழிற் சங்கங்கள், தனியாரும் பொதுத்துறையினரும் நடத்தும் வியாபாரம், பயணம், தனிப்பட்டவர்கள் சுதந்தரமாகப் பழகுதல், இப்படி மக்கள் ஈடுபடும் ஒவ்வோர் அலுவலிலும், இடைவிடாமல் விருப்பு வெறுப்பின்றி ஆராயும் நோக்கு வேண்டும். இன்னும் பண்பாடு என்பதையும் கவனிக்கவேண்டும். இந்தப் பண்பாடு அமைந்து காணும் விதத்தை மட்டுமின்றி, ஒன்றை ஆக்கும் முயற்சியிலும், பிறரை மகிழ்விப்பதிலும், தான் மகிழ்வதிலும், சிந்தனை செய்வதிலும், சிரிப்பதிலும், அழுவதிலுங்கூடத் தனி மனிதனுக்கு உரிமையும் சுதந்திரமும் உண்டு என்பதையும் கவனித்தாக வேண்டும்.




Photo © Jobst Grapour

**பிரேய்ட்டன் பிரேய்ட்டன்பாக்** என்பவர் ஆப்பிரிகானர் இனத்தைச் சேர்ந்த எழுத்தாளர்; கவிஞர்; ஓவியர். தென்னாப்பிரிக்காவில் இவர் 1939ல் பிறந்தார். கேப்டவுன் பல்கலைக் கழகத்தில் படித்தார். 1960ல் தென்னாப்பிரிக்காவை விட்டுப் புறப்பட்டு உலகம் முழுவதும் சுற்றினார். இப்போது பாரிஸ் நகரில் ஓர் ஓவியராக இருந்து வருகிறார். இவருடைய ஓவியங்களின் கண்காட்சிகள் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் வைக்கப்பெற்றன. ஆப்பிரிகான்ஸ் (டச்சு மொழியின் சிதைவு) மொழியில் எழுதி வருகிறார்; பல கவிதைத் தொகுதிகள், கட்டுரைத் தொகுதிகளின் ஆசிரியர் இவர்; 'கடாஸ்ட்ரோஃபிஸ்' என்ற தலைப்பில் வசனத் துணுக்குகள் கொண்ட ஒரு தொகுதியும் இவர் எழுதியதே.

என்னைப் பொறுத்தவரை, ஒரு நாட்டின் கனவுகளையும், நம்பிக்கைகளையும், அச்சங்களையும், கற்பனைகளையும், விருப்பங்களையும் புலப்படுத்துவதுதான் பண்பாடு. இவற்றை உருவாக்கி வெளியிடும் தனிமனிதனோ, தனிப்பட்டவர்கள் குழுவினரோ, ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களாய்ப் பொதுவான பாரம்பரியத்தால் கிட்டிய பண்புச் செல்வம் உள்ளவர்களாய், ஒருவரோடு ஒருவர் ஒத்து, நிகழ்காலத்தை நாடி, எதிர்காலத்தை உருவாக்குபவர்களாக இருந்தால் அந்த அளவுக்கு அந்தப் பண்பாடு தேசீயப் பண்பாடு ஆகும். ஒரு நாட்டினர் தம்மையும் தம் நாட்டைச் சேர்ந்தவர்களையும் உள்ளபடி உணரும் வழிவகையே பண்பாடு. அது சிலருக்கே உரிய தனிப்பட்ட உரிமையாக இருக்கக்கூடாது. காட்சியாகவும் செயலாகவும் அமையும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகளின் வாயிலாகத் தங்குதடையின்றி இந்தப் பண்பாடு வெளியாகவேண்டும். இந்தக் கலை வெளியீடுகளை யாரும் தடையின்றி அனுபவிக்கவேண்டும். இந்த உரிமையைப் பற்றிய பிரச்சினையே எழக்கூடாது.

குழுவாகக் குடிபுகுந்த வெள்ளையர், வாழ்க்கைவழி ஒன்றை வகுத்து நாட்டினர்மேல் சுமத்தியிருக்கிறார்கள். இதனால் பண்பாட்டுக்கலைகள் குறுகி வெறும் நாடோடிக் கலையாகச் சுருங்கியது. அதாவது, நாடோடிக் கலையிலிருந்து பண்பாட்டுக் கலையாக வளர்வதற்குத் தடை ஏற்பட்டுவிட்டது. இன ஒதுக்கல் கொள்கை ஒரு குழு அல்லது இனத்திற்கும் மற்றொன்றிற்குமுள்ள வேற்றுமையை வலியுறுத்தி ஆதரிக்கிறது. இதனால் விளைவது என்ன? இயல்பான சொந்தப் படைப்புக்கும் அகில உலகத்துக்கும் அல்லது நாடு முழுவதற்கும் பயன்படுவனவற்றுக்கும் மாறாகச் சாமான்யமானவற்றையும் குறிப்பிட்ட இடத்துக்கே பயன்படுவனவற்றையும் பெரிதுபடுத்துகிறார்கள். சிற்பம் ஓவியம் என்பவற்றைப் புறக்கணித்துச் சாதாரணக் கைத்தொழில்களையும், தபால் கார்டுகளையும் கொண்டாடுகிறார்கள். உயர்வகை இசைப்பாணிகளைக் கண்டறிந்து கேட்டு மகிழ்வதற்கு மாறாக வெறும் 'தம்பட்டம்' அடித்தலைப் புகழ்கிறார்கள். ஆக்கமுறையில் அமையும் எழுத்துக்கு மாறாக மட்டரகமான பத்திரிகைத் தொழிலை வானளாவப் புகழ்கிறார்கள்.

இன ஒதுக்கல் கொள்கை எவ்வகையில் பண்பாட்டை அழிக்கிறது? அங்கே ஏற்பட்டுள்ள சட்டவிதிகளைப் பற்றிப் பேசி ஒன்றும் ஆகப்போவதில்லை; அந்தச் சட்டங்கள் இரண்டு இனத்தார் சேர்ந்து கூடும் கூட்டத்துக்குத் தடை விதிக்கின்றன; அளவுக்கு மீறிய கடுமை வாய்ந்த சட்ட விதியை எதிர்ப்பதற்கு இது ஓர் அடையாளமாகும்; (அல்லது உண்மையிலேயே) சரியான எதிர்ப்பாகும். ஏன்? பண்பாடு என்ற வகையிலும், மனிதனுக்குள்ள மதிப்பு என்ற வகையிலும் எதையேனும் செய்ய எண்ணுவதற்கு முதன் முதலில் இந்த இன ஒதுக்கலை முற்றும் ஒழித்துக் கட்டவேண்டும். விட்டுக் கொடுத்து எப்படியாவது சரிக்கட்டிக் கொண்டு போய்விடலாம் என்பது இன்றைய நிலையை ஆதரிப்பதாகவே முடியும்.

அதிகாரப் பதவியிலுள்ள வெள்ளை இனத்தார் உண்டாக்கிய இன ஒதுக்கல் சட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்த இந்தக்கொள்கைதான், தென் ஆப்பிரிக்க மக்கள் எல்லாருக்கும், ஏன், வெள்ளையரானவருக்கே கூடப் பண்பாட்டையும் மனிதனுக்குரிய மதிப்பையும் வழங்க மறுக்கிறது.

இந்தக் கொள்கை ''கிறிஸ்துவத் தேசீயம்'' அல்லது ''கால்வின் கண்ட கிறிஸ்துவ''த்தின் அடிப்படையில் தோன்றிய குழு மனப்பான்மையாகும். இதன்மூலம் ஒரு குழு தான் உருவாக்கிக் கொண்ட அமைப்பின்படி தன்னையே நிலை நிறுத்திக்கொள்ளப் பார்க்கிறது. அதன்பொருட்டு எல்லா அதிகாரங்களையும் தானே கைக்கொண்டு, மற்றக் குழுவைச் சேர்ந்தவர்களுக்கு ''உங்கள் பண்பாடு, அரசியல், பொருளாதாரம் இவை வளர, இன்ன இன்னபடி நீங்கள் நடந்தொழுகவேண்டும்'' என்று கட்டளையிடுகிறது.

கறுப்பு, பழுப்பு, மஞ்சள் இனத்தைச் சேர்ந்த மக்களின் பண்பாட்டு முயற்சிகளை இந்த இன ஒதுக்கல் கொள்கை அடக்கி ஒடுக்குகிறது; ஆனால் ஒழுக்க முறை, மனிதப்பண்பு, மனிதனுக்குரிய மதிப்பு இவற்றை மறுக்கும் இந்தச் செயலால் வெள்ளையனுடைய ஆக்க முயற்சிகளையே அழிக்க வழிகோலுகிறார்கள்.

# கலாசார, தேசிய சீர்குலைவுப் போக்கு

இந்த இன ஒதுக்கல் சட்டவிதிகள் பண்பாடு வளர்வதைத் தடுத்தும் உள்ளதற்கே ஊறு விளைத்தும் வருவது பற்றி பொதுப்படையாகக் காட்ட வேண்டுமென்பதே, இத்தகைய அழிவு தன்னழிவுமாகும், என்னை நானே அழித்துக் கொள்வதாக முடியும் என்ற முறையில் விளக்கவேண்டுமென்பதே— என் நோக்கமாகும். அரசியல், பொருளாதாரம், பண்பாடு இவை காரணமாகவும், அப்படியே இன அடிப்படையிலும் தென் ஆப்பிரிக்கத் தேசிய சமுதாயம் ஒன்று ஏற்படுவதைத் தடுக்கும் முயற்சியாகவே இந்த இன ஒதுக்கல் கொள்கை அமைந்திருக்கிறது. மக்கள் ஒருவரை ஒருவர் நம்பி வாழ்ந்தும், ஓர் இனம் பிற இனத்தோடு கலந்து கலப்பினம் தோன்றியும் வரும் நிலையில் உலகில் அப்படி ஏற்படுவதுதான் இயல்பு. பண்பாடும் பண்பாட்டை விளக்கும் அறிஞர்களும் பலவகை மக்களினத்தையும் இணைக்கத் துணையாக இருந்திருப்பார்கள். ஆனால் இப்போதோ ஓர் இனத்தைச் சேர்ந்த மக்கள் மற்றுமோர் இனத்தாருடன் கலந்து பழகி இனஞ் செழிக்கும் என்று நம்புவது வீண் என்ற நிலையே ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே எழுத்தாளர்கள், ஓவியர்கள், இசைக் கலைஞர்கள் இப்படி வெவ்வேறு குழுவினரிடையே இலேசான தொடர்பையும் வரவர இங்கே குலைத்து வருகிறார்கள். சுருங்கிச் சிதறி உதிர்ந்துபோகிற ஒரு பொதுவான போக்கின் அம்சமே இது.

வருகிற பார்லிமெண்டுக் கூட்டத்தின் போது ஒரு புதிய சட்டம் கொண்டுவரப் போகிறார்கள்; ஓர் இனத்தார் மற்றோர் இனத்தாரின் அரசியல் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற தடை மசோதா தான் அது.

இப்படிப் புதிய தடைச் சட்டங்கள் பிறப்பிக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை என்றுதான் தோன்றுகிறது. சமீப ஆண்டுகளில் அரசியல் கொள்கையில் மாறுபட்டிருந்ததால் ஏற்கனவே 1800 பேருக்கு மேல் விசாரணையின்றித் தண்டிக்கப் பெற்றிருக்கிறார்கள். வீட்டிலேயே சிறைப்பட்டுக் கிடப்பவர்களின் தொகை 70க்கு மேல் இருக்கும். மேலும் 600 பேருக்குத் தடையுத்தரவு போட்டுக் கட்டுப்பாடும் விதித்திருக்கிறார்கள். இவர்களைத் தவிர 40 பேர் தொலைவான இடங்களில் நாடு கடத்தப் பெற்றிருக்கிறார்கள். 90 நாள், 180 நாள் என இப்படிச் சிறைவாசம் பெற்றவர்களின் தொகை 2000. அரசாங்கக் கெஜட் ஒவ்வொரு முறை வெளியாகும் போதும் இன்ன இன்ன ஆசிரியர்கள் இயற்றிய நூல்களைத் தென் ஆப்பிரிக்காவில் அநுமதிப்பதில்லை என்ற விவரத்தையே காண்கிறோம்.

பண்பாடு என்றால் சமுதாயக் கருத்துக்களையும் அதிலுள்ள உயர்ந்த பொருள்களையும் ஓர் எழுத்தாளனோ, ஓவியனோ, இசைக் கலைஞனோ வெளிப்படுத்தித்தான் ஆகவேண்டும்; அரசியல் சுதந்திரத்தை நாடி, மனிதனுக்குரிய மதிப்பைத் தருவதற்காகவும், நீதியைக் கோரியும் இப்படிக் கிளர்ச்சி செய்ய அந்தந்தத் துறைகளைப் பயன்படுத்தவேண்டும். மனிதன் தான் மற்ற மனிதர்களிடையே வாழ்கிறான். அவன்தான் தன் கனவை மற்ற மக்களுக்கும் அவர்களுக்குப் புரியும் வகையில் தெரிவிக்கிறான்; மற்றவர்கள் அதை எப்படி ஏற்பார்களோ என்றுதான் உண்மையிலே அவன் அஞ்சுகிறான். தன்னுடைய நூலில் எந்த அளவுக்கு உபதேசமோ பிரசாரமோ இருக்க



தென்னாப்பிரிக்க அரசாங்கத்தின் கொள்கை, குழுவினரின் பழைய மரபுகளுக்கு மீண்டும் வலியூட்டுவது தான்; அதாவது, நாடு முழுவதும் பரவி நிற்கும் தேசியத்துக்கு மாறாகக் குழுவினரின் தேசியத்தை வளர்ப்பதே.

Photo © Paul Almasy, Paris




Photo © Paul Almasy, Paris

ஆப்பிரிக்கச் சுதேசிச் சுரங்கத் தொழிலாளர்களும் குறிப்பிட்ட சில மேற்பார்வை அலுவல்களைக் கவனிக்கலாம் என்ற முறையில் 1964ல் இன ஒதுக்கல் விதிகளைத் தளர்த்தி வைத்தார்கள். 1965ல் 'இதனால் தீங்கு விளையக்கூடும்' என்று கருதி இந்த முயற்சியை நிறுத்தி விட்டார்கள். இருந்தாலும் சர்வதேசத் தொழிலாளர் நிறுவனத்தின் அறிக்கை, "இன்னும் தென்னாப்பிரிக்காவில் திறன் பெற்ற தொழிலாளர் மிகக் குறைவாக இருக்கும் நிலையே நீடிக்கிறது" என்று வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளது. அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தித் திட்ட அறிக்கை "1969ல் 47000 வெள்ளைத் தொழிலாளர் தேவையாக இருக்க, 240,000 வெள்ளையரல்லாத தொழிலாளர் வேலையின்றியிருக்கும் நிலை நேரும்" என்று கூறுகிறது.

வேண்டுமென்பதையும் எந்த வடிவில் இருக்கவேண்டும் என்பதையும் தீர்மானிப்பது எழுதுபவனைப் பொறுத்தது.

தென் ஆப்பிரிக்காவில் ஏற்கனவே பண்பாட்டுத் துறையில் முடிவான சீரழவு கண்டுவிட்டது. இன்று கேப்டவுன் நகர மன்றக்கூடம் வெள்ளையரின் ஏகபோக உரிமையாகிவிட்டது. இந்நிலையில் அங்கு வாழும் வெள்ளையரல்லாத மக்கள் இனி அங்கே நடக்கும் இசை நிகழ்ச்சி போன்றவற்றுக்கு வர இயலாதென்றால், இசையும் சீர்குலைய வேண்டியதுதான். நம் ஓவியர்கள், ஒரு சாராருக்கே உரியனவென்று கருதப்பெறும் கிராமந்தரக் காட்சி வகைகளையும், 'பண்டு' (சுதேசி) கலைப் பாணிகளையுமே கடைப்பிடித்தாக வேண்டும் என்று ஒதுக்கி வைத்துவிட்டால், நம் ஓவியங்கள் சுவரில் அமைந்த வெறுங் கோலமாகவே ஆகிவிடும். பலவகை இனத்தினரும் கொண்ட குழுவினர் நாடகங்களை நடித்துக்காட்ட இயலாவிட்டால், நாடகமேடையிலும் கலையார்வம் குன்றிவிடும். வெள்ளையரல்லாத எழுத்தாளருக்கு அதிருஷ்டம் நல்லபடியாக இருந்தால், அவர் நாட்டைவிட்டு வேறெங்கேனும் போய் மனக் கசப்புடனுவது வாழலாம். வெள்ளையரான எழுத்தாளர் தொடர்ந்து எழுதிவரவேண்டுமென்றால், தம் மனிதப் பண்பை இக்கொள்கைக்கு ஏற்றபடி மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

"இதுதான் இப்போதுள்ள சிக்கல். தென் ஆப்பிரிக்காவில் பெரும்பாலான வெள்ளையர்கள் இந்த விஷயத்தில் கண்ணை மூடிக்கொண்டு விட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இங்கே வெள்ளையரைத் தவிர வேறு மக்களினமே இருப்பதாக அவர்களுக்குப் படவில்லை. மொத்தத்தில் 'மற்றவர்கள் சுதேசிகள் தாமே' என்ற முறையில் கவனிக்கிறார்களே தவிர, 'இந்த மற்றவர்களையும் அரவணைத்துக்கொண்டு போகவேண்டும்' என்று கருதுவதில்லை."—நாட்நகாஸா.

இப்படி ஒதுக்கல் கொள்கை அமுலில் இருக்கும் வரையில்—மக்களுள் வெவ்வேறு இனத்தாருக்கிடையே பரஸ்பர திகிலும் வெறுப்பும் இருக்குமட்டும்—தென் ஆப்பிரிக்காவோ அதிலுள்ள பல்வேறு மனித இனமோ உயிரும் உணர்வுங் கொண்ட ஒரு பண்பாட்டை உருவாக்கவே முடியாது.

# தென்னுப்பிரிக்காவில் வீணுக்கப்பட்ட மனிதசக்தி

**1965-ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தார் இன ஒதுக்கல் கொள்கை, தொழிலாளர்களைப் பாதிப்பதால் நேர்ந்த விளைவுகளைப் பரிசீலனை செய்து வருகிறுர்கள். 1966-ஆம் ஆண்டுக்குரிய பரிசீலனையின் சுருக்கம் இது. தென்னுப்பிரிக்காவில் இன வேற்றுமை பாராட்டிவருவதால் பொருளாதாரத் துறையில் எவ்வித விளைவுகள் நேர்ந்திருக்கின்றன என்று இந்த அறிக்கையில் நுணுக ஆராய்ந்திருக்கிறுர்கள். இன ஒதுக்கல் கொள்கை, மேலும் மேலும் தென்னுப்பிரிக்காவுக்கு மிகவும் தேவையான திறனும் ஆற்றலும் வாய்ந்த மனித சக்தி அல்லது உழைக்கக்கூடிய ஆட்கள் வருவதைச் செயற்கை முறையில் தடுத்து நிற்கிறது; நாடு பின்னும் வளம் பெற்று ஓங்குவது இதனுல் தடையுறுமே என்றுகூட அவ்வரசாங்கம் கருதாமல் இப்படிக் கட்டுத்திட்டப்படுத்தி வைத்திருக்கிறது.**

கனிவளம் மிகுதியாகக் கொண்டது தென் ஆப்பிரிக்கா. பல தலைமுறைகளாக உலகிலேயே தங்க உற்பத்தியில் இந்நாடு சிறந்து விளங்கிவருவதோடு, தொடர்ந்து அவ்வுற்பத்தி மேன்மேலும் பெருகியும் வருகிறது. இன்னும் வைரம் குரோம், கல்நார் இவற்றின் உற்பத்தியில் உலகிலே இரண்டாவதாக இந்நாடு விளங்குகிறது. இவை தவிர, யுரேனியம், இரும்பு, நிலக்கரி ஆகியனவும் இங்கே ஏராளமாகக் கிடைக்கின்றன. தாமிரம், சுண்ணும்புக்கல், மங்கனீசு உற்பத்தியும் மிகுதி. உள்நாட்டுத் தேவைக்கும் வெளிநாட்டு ஏற்றுமதிக் கென்றும், பலவகைப் பொருள்களை இங்கே உற்பத்தி செய்து வருகிறுர்கள்.

கடந்த இருபது ஆண்டுகளாகப் பொருள் உற்பத்தி இங்கு வெகு விரைவாக முன்னேறியிருக்கிறது. பொருளாதார அடிப்படையில் பார்த்தால் இந்த உற்பத்திதான் மிகுதியாக உள்ளது, அதாவது, நாட்டின் மொத்த உற்பத்தியில் இது கால் பங்காகும். இக்காலத்துக்குரிய துறைகளில் மற்ற ஆப்பிரிக்க நாடுகளைவிடத் தென் ஆப்பிரிக்காதான் ஏராளமான ஆப்பிரிக்க மக்களைத் தொழிலில் பயன்படுத்தி வருகிறது.

இந்த வளர்ச்சிகள் காரணமாகத் தென் ஆப்பிரிக்க உழைப்பாளர் ஆற்றலும் அதை அங்கே பயன்படுத்திக் கொள்ளும் விதமும் கண்கூடாகப் பாதிக்கப் பெற்றிருக்கின்றன. அதாவது, இன ஒதுக்கல் கொள்கையின் குறிப்பிட்ட நோக்கங்களுக்கும், அடிப்படைக் கோட்பாடுகளுக்குமே பெருத்த அறைகூவலாக இவை ஓங்கி வருகின்றன. இவ்வாறுக, குறைந்தபட்சம் ஆப்பிரிக்க மக்களும் ஐரோப்பியரும் அவரவர் வாழும் பிரதேசங்களில் தனித்தனியேனும் வளர்ச்சி பெறுவதற்கு மாறுக, இத்தகைய பொருளாதார வளர்ச்சியினுல் வெள்ளையர் வாழும் பகுதிகளில் ஏராளமான ஆப்பிரிக்க மக்கள் வந்து கொண்டே இருக்கிறுர்கள். புதுவித உறவு முறைக்கு இது வழி கோலியிருக்கிறது. வெள்ளையரின் பொருளாதாரத் துறையில் ஆப்பிரிக்கத் தொழிலாளர் தம் கூலியை நம்பியே வாழும் நிலை பெருக, அதே சமயம் அப்பொருளாதாரத்துக்கு இன்றியமையாதவர்களாகவும் அவர்கள் இருக்கிறுர்கள்.

அறிவினுல் உழைக்கும் மனிதசக்தி ஆற்றல் வரவர மிகுதியாகத் தேவையாக இருக்கும் நிலையில், அங்கே அதற்கேற்றபடி வெள்ளைத் தொழிலாளர்கள் போதாததால், தொழில் துறையில் இந்த வெள்ளையரல்லாத இனமக்களும் முன்னேறும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. சட்டப்படி நிறவேற்றுமையை அடிப்படையாகக் கொண்ட தடைவிதிகளின்படி மேற்படி வெள்ளையரல்லாத இம் மக்கள் அவ்வுயர்நிலை எய்த முடியாது என்றுலும், இவர்கள் அப்படி முன்னேறும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆற்றலுள்ள உழைப்பாளிகளின் தொகை பற்றுமல் இருக்கும் இந்த நிலையில் 'வேறிடத்திலிருந்து கூலியாட்களைத் தருவிக்கும் தொழில்முறை' விதியும் நிறவேற்றுமைத் தடைவிதியும் பொருளாதார அடிப்படையில் வீண் செலவுக்குக் காரணமாகின்றன என்பதையே இது வலியுறுத்துகிறது. இதனுல் நேரும் விளைவு, உற்பத்திக்கு அநுகூலமாக உழைக்கக்கூடிய ஆப்பிரிக்க (சுதேசி)த் தொழிலாளர்களின் தொகை மட்டுப்படுவதோடு, எப்போதும் ஸ்திரமில்லாத ஒரு நிலைமை நீடிப்பதற்கும், குறைவான அளவு உற்பத்திக்குமே இது வழிகோலும்.

தென் ஆப்பிரிக்கப் பொருளாதாரத்தில் வரவரப் பணவீக்கம் ஏற்பட்டுவிட்டது. அது காரணமாக ஏற்பட்டுள்ள நிர்ப்பந்தத்தினுல் இன்று இந்த மக்களின் தொழிலாற்றலைப் பகுத்தறிவுக் கொத்த முறையில் பயன்படுத்தியாக வேண்டிய அவசரத் தேவை நேர்ந்திருக்கிறது. ஆப்பிரிக்க மக்கள், தக்க பயிற்சி பெறுதற்குரிய வாய்ப்புக்களை நன்கு வளர்த்தாலன்றி—அதோடு பொருந்தும் வகையில் ஆப்பிரிக்க கல்வி முறையை வகுத்தாலன்றி—இன ஒதுக்கல் கொள்கையினுல் உழைப்பாளிகளின் திறன்வகை மிகவும் மோசமாகப் பாதிக்கத்தான் பெறும், தென் ஆப்பிரிக்காவின் தொழில் வளர்ச்சிக்கே இது பெருத்த இடையூருகவும் முடியும்.

வெள்ளையரின் பொருளாதாரத்தில், ஆப்பிரிக்க உழைப்பாளிகளின் ஆற்றல் ஏதோ வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் சரக்கு என்பது போன்ற கருததே நிலவி வருகிறது. பாகுபடுத்தாத உழைப்பாளிகளின் கும்பல் என்ற முறையில் சாதாரண மனித உரிமைகளையும் இழந்தவர்களாக ஆப்பிரிக்கத் தொழிலாளர்கள் இருக்கிறுர்கள். —தமக்குப் பிடித்தமான வேலையை நாடுவதற்கும், நிலையாகத் தங்குவதற்கு இடமும், வேலையும் உண்டு என்ற பத்திரமான நிலைமையை எதிர்பார்ப்பதற்கும், உள்ளார்ந்த ஆற்றல்கள் வளர்வதற்கும் தாமும் முக்கியப் பங்கு கொண்டுள்ள பொருளாதாரத்தில் ஒன்று சொல்வதற்கும் உரிமையின்றிக் கிடக்கிறுர்கள்.

இதனுல்தான் 'வேறிடத்திலிருந்து கூலியாட்களைத் தருவிக்கும் தொழில் முறை' விதியையும், குடிபுகுவதைக் கட்டுப்படுத்தும் முறையையும், நிறவேற்றுமைத் தடையையும் ஆப்பிரிக்க மக்களுக்குத் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமையை மறுக்கும் கொள்கையையும் அரசாங்கம் கடைப் பிடித்துவருகிறது.

புதிய வாய்ப்புக்களும் பொருள் வசதிகளில் அபிவிருத்தியும் வெள்ளையரல்லாத மக்களுக்குக் கிட்டியிருப்பது தென் ஆப்பிரிக்காவின் வளர்ச்சியை எடுத்துக் காட்டினுலும், அதேசமயம் ஆப்பிரிக்கத் தொழிலாளர்களுக்கு இந்த வெள்ளையர் ஆதிக்கம் ஓங்கியுள்ள பொருளாதாரத்தில் ஒதுக்கப்பெற்ற அந்தஸ்து, கூலிவேலை செய்பவனுக்குள்ளதாகத்தான் இருக்கிறது.

'இன ஒதுக்கல்' காரணமாக ஏற்பட்டுள்ள மனக்கசப்பு இங்கே காணும் அடக்கு முறையிலிருந்தே தெளிவாகிறது. 'இன ஒதுக்கல்' சட்டவிதிகளைப் பெருக்கிக்கொண்டே சமூக—பொருளாதாரத் துறைகளில் அவற்றை அமல் நடத்தி வருவதால்தான் இந்த அடக்கு முறை தேவைப்படுகிறது.

இத்தகைய உள்நாட்டு சிக்கல்களோடு சர்வதேச ரீதியிலும் தென் ஆப்பிரிக்காவின் நிலையை ஒப்பிடும்போது, தன் தான் தோன்றிப் போக்கினுல் அது ஒதுக்கப் பெற்றுக் கிடக்கிறது; உலகில் மற்ற நாடுகள் அதற்கு விரோதமாக இருக்கின்றன. உலக நாடுகளின் கண்டனம் தீவிரமாக இருத்தலால் சர்வதேசத் தொழிலாளர் நிறுவனத்திலிருந்து மட்டுமன்றி மற்ற வகையிலும் தென் ஆப்பிரிக்கா விலகியே நிற்கிறது. ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனமாகிய 'யுனெஸ்கோ'விலிருந்சு

---

தென்னுப்பிரிக்க குடியரசின் இன ஒதுக்கல் கொள்கை செயல்படும் விதம் பற்றி டைரக்டர் ஜெனரலுடைய இரண்டாவது விசேஷ அறிக்கை. சர்வதேச தொழிலாளர் அலுவலகம், ஜெனிவா *1966*. விலை 50 சென்ட். 3 ஷி 6 பெ.

ஆப்பிரிக்கச் சுதேசிச் சுரங்கத் தொழிலாளர்களும் குறிப்பிட்ட சில மேற்பார்வை அலுவல்களைக் கவனிக்கலாம் என்ற முறையில் 1964ல் இன ஒதுக்கல் விதிகளைத் தளர்த்தி வைத்தார்கள். 1965ல் ‘இதனால் தீங்கு விளையக்கூடும்’ என்று கருதி இந்த முயற்சியை நிறுத்தி விட்டார்கள். இருந்தாலும் சர்வதேசத் தொழிலாளர் நிறுவனத்தின் அறிக்கை, ‘‘இன்னும் தென்னாப்பிரிக்காவில் திறன் பெற்ற தொழிலாளர் மிகக் குறைவாக இருக்கும் நிலையே நீடிக்கிறது’’ என்று வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளது. அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தித் திட்ட அறிக்கை ‘‘1969ல் 47000 வெள்ளைத் தொழிலாளர் தேவையாக இருக்க, 240,000 வெள்ளையரல்லாத தொழிலாளர் வேலையின்றியிருக்கும் நிலை நேரும்’’ என்று கூறுகிறது.




Photo © Emile Schultess - Rapho

1955லும் ஐ. நா. உணவு விவசாய நிறுவனமான ‘எப்ஏஓ’விலிருந்து 1964லும் விலகிக் கொண்டுவிட்டது; ஆப்பிரிக்காவுக்கென அமைந்த ஐ. நா. பொருளாதாரக் குழுவிலிருந்து அது விலக்கப் பெற்றுள்ளது.

ஐ. நா.வில் தென் ஆப்பிரிக்காவின் இனவேற்றுமைக் கொள்கையையும், அது காரணமாக ஏற்பட்டுள்ள அடக்கு முறைகளையும் பற்றி விசேஷக் கமிட்டி ஒன்று ஆராய்ந்து வருகிறது. உலக நாடுகளனைத்தும் சேர்ந்து, ‘‘இப்படி உலகம் முழுவதற்குமே ஆபத்தை விளைக்கக்கூடிய கொள்கையைத் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் கைவிட்டேயாக வேண்டும்’’ என்று வலியுறுத்தி வருகின்றன.

தென் ஆப்பிரிக்கா செல்வவளம் கொழித்து, பலவகையில் அபிவிருத்தி அடைந்துள்ள நாடாகையால், ஆப்பிரிக்காக் கண்டத்தின் வளர்ச்சிக்கு உதவுவதில் பெரும் பங்கு கொள்ள முடியும்; ஆப்பிரிக்க நாடுகளில் நடைபெறும் பல வியாபாரங்களில் முதல் போடுதல், தொழில் நுணுக்கப் பயிற்சியில் துணைபுரிதல் இப்படியெல்லாம் அது உதவலாம்.

அங்கே இப்போது வெள்ளையருக்குச் சாதகமாக நடைபெறுகிறது ஒருவகைக் கல்விமுறை; இதை எழுத்தறிவு பரவுவதற்குப் பயன்படுத்தக்கூடிய கல்விமுறையாகக் கொண்டு உதவலாமே! முன்னேற்றம் அடைந்துள்ள தொழில் நுணுக்க அறிவைப் பிற நாடுகளுக்கும் நல்கலாமே! நோய்களைப் போக்கும் பெரு முயற்சியில் பங்கு கொள்ளலாமே! ஆனல் இத்தகைய நிகழ்ச்சிகள் சரிவர நேரக்கூடியபடி நிலைமை இல்லை; தென் ஆப்பிரிக்கா இப்போதைய இன வேறுபாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் வரையில் அது சாத்தியமில்லை.

# இன ஒதுக்கல் கொள்கை பற்றிய யுனெஸ்கோ யாதாஸ்திலிருந்து

## இன ஒதுக்கல் கொள்கையும் உரிமைகளும்

1964ம் வருடத்திய பன்டு சட்ட திருத்த மசோதா விவாதத்தின்போது திரு கிரேலிங் என்ற தேசியக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் சொன்னர்: ''வெள்ளையர் பகுதியில் பன்டுக்களின் உரிமைகள் என்ற ஒன்று கிடையாது. அவர்களுக்குள்ள ஒரே உரிமை சில கடமைகளை யாற்றுவதின் மூலம் கிடைப்பதுதான். அவர் செய்யும் வேலை இங்கு தங்குவதற்கு அனுமதி தருகிறது. ஒரு பன்டு இங்கு தங்குவதற்கு அனுமதிப்பதைத் தீர்மானிக்க வேண்டிய தொழிலாளர் பீரோ அதிகாரிகள் அந்த பன்டு தொழிலாளி என்ற முறையில் தன் கடமையைச் செய்திருக்கிறரா என்பதை முதலில் கவனிக்கவேண்டும்; ஐக்கியக் கட்சி உறுப்பினர்கள் அவர்களுக்கு இருப்பதாகத் தேடிக் கண்டு பிடித்துக் கூறும் உரிமை இருக்கிறதா என்று பார்ப்பதல்ல''.

## இன ஒதுக்கல் கொள்கையும் செய்திகளும்

தென்னுப்பிரிக்க அரசாங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று சர்வதேசத் தகவல்களை தன் பொதுவான கொள்கைக்கும் குறிப்பாக இன ஒதுக்கல் கொள்கைக்கும் பொருந்துமாறு திரித்துக் கூறுவதாகும். இந்தக் கண்ணேட்டத்தில் 'விரும்பத் தகாதது' என்று கருதப்படும் அயல்நாட்டுத் தகவல்கள் நாட்டுக்குள் எட்டாமல் தடுக்க இயன்றதெல்லாம் செய்யப்படுகிறது.

## இன ஒதுக்கல் கொள்கையும் சினிமாவும்

ஆப்பிரிக்கர்களுக்கான படங்கள் கடும் தணிக்கைக் குட்பட்டவை. பெரும்பாலான நாடுகளில் ஏதோ ஒரு விதமான தணிக்கை முறை உள்ளது. ஆனல் தென் ஆப்பிரிக்காவில் இது ''தனித்தனி வளர்ச்சி''க்கான கருவியாகப் பயன்படுகிறது. தணிக்கைக் குழு ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது வகுப்பினர் முன்பு படங்கள் காட்டுவதைத் தடுக்கலாம். ஒரு படம் வெள்ளையரல்லாத பகுதியில் காட்டப்பட்டாலும் 4லிருந்து 16 வயதுக்குட்பட்டவர்களும் ஆப்பிரிக்கர்களும் அனுமதிக்கப்படக் கூடாது என்று பல சந்தர்ப்பங்களில் தீர்மானித்திருக்கிறது. வெள்ளையரல்லாதார், வெள்ளையரை விடத் தாழ்ந்தவர்கள் என்பதைக் காட்டாத எந்தப் படத்தையும் தடை செய்யும் போக்கு நிலவுகிறது.

## இன ஒதுக்கல் கொள்கையும் எழுத்தும்

தென்னுப்பிரிக்காவிலுள்ள எழுத்தாளர்கள் நிலை பற்றி நாடு கடத்தப் பட்டுள்ள ஆப்பிரிக்க எழுத்தாளரான இஸக்கியல் ம்பாலேலே இவ்வாறு கூறுகிறர்: ''ஜீவனுள்ள படைப்புக்கு எதுவும் மிஞ்சாத அளவில் நமது ஆற்றல் இந்தப் போராட்டத்தில் செலவழிந்து விடுகிறது. ஆக்கப் படைப்புக்கு தூண்டுகோலாக இது ஏன் இருக்கக் கூடாது என்று கேட்கலாம். அது ஸ்தம்பித்துக்கொண்டு வருவதாக நான் எண்ணுகிறேன்... இரண்டு கட்டுப்பாடுகளில் இருக்கிறேம். இரு வெவ்வேறன போக்குகள், இந்த வகையான சமுதாயத்தில் உண்மையிலேயே உருவான கலை கிடைக்காது. நாம் ஒன்றுக இணையும் வரை மகத்தான ஒரு வெள்ளையர் நவீனமோ அல்லது மகத்தான ஒரு கறுப்பர் நவீனமோ நமக்குக் கிடைக்காது என்றெண்ணுகிறேன். ஒரு வெள்ளையர் தன்னை ஒரு ஆப்பிரிக்க நாட்டினர்—ஐரோப்பியரல்ல என்பதை உணரக் கற்றுக் கொண்டவுடனேயே அவர் ஒரு ஆப்பிரிக்க நவீனம் அல்லது கவிதையை எழுதத் தொடங்கிவிடுவார்.''

## இன ஒதுக்கல் கொள்கையும் விளையாட்டும்

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் தென்னுப்பிரிக்கா முழுவதற்கும் பிரதிநிதித்துவம் வகிப்பதாக கலப்பு இனக் கோஷ்டிகளை எந்த சந்தர்ப்பத்திலும் அங்கீகரிக்கக் கூடாது என்று உள்துறை அமைச்சர் 1963ல் தென் ஆப்பிரிக்க ஒலிம்பிக் மற்றும் தேசிய விளையாட்டுச் சங்கத்துக்கு நினைவுறுத்தினர் 1964ம் வருடத்திய டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தென்னுப்பிரிக்கா பங்கு கொள்ள முடியவில்லை. எல்லோரும் வெள்ளையர்களான தென்னுப்பிரிக்க டேபிள் டென்னிஸ் சங்கத்தை தென்னுப்பிரிக்காவின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தத் தகுதியுள்ள அமைப்பாக அங்கீகரிக்க சர்வதேச டேபிள் டென்னிஸ் சங்கம் மறுத்துவிட்டது.

## இன ஒதுக்கல் கொள்கையும் நூலகங்களும்

டர்பனில் 11 முனிசிபல் நூலகங்களும் வெள்ளையருக்கான ஒரு அரிய நூல் நிலையமும் நிறத்தவருக்கு ஒன்றும் ஆப்பிரிக்கர்களுக்கு ஒரு கிளை நூலகமும் உள்ளன. ஆரஞ்ச ஃப்ரீ ஸ்டேட்டில் ''வெள்ளையர்க்கு மட்டும்'' ஒரு இலவச நூலகம் உள்ளது. ஆப்பிரிக்கர்களுக்கு அது போல் எதுவும் இல்லை. மேலும் புத்தகத் தேவை ஆப்பிரிக்கருடைய சமுக, பொருளாதார சூழ்நிலையால் தீர்மானிக்கப்படுகிறது. புத்தகமே இல்லாத வீட்டில் தான் அவன் பெரும்பாலும் வளர்கிறன். புத்தகங்களுக்குச் செலவிட அவனிடம் பணம் கிடையாது. படிப்பதில் விருப்பம் ஏற்படுவதற்கும் வாய்ப்பு மிகக் குறைவு. பள்ளி நூலகங்களைப் பொறுத்தவரையில் வெள்ளையரல்லாதவருக்கான பொது நூலகங்களில் போதிய நூல்கள் இல்லாதது பள்ளி நூலகங்களில் நல்ல நூல்கள் இல்லாததை ஈடு செய்வதாக இல்லை.

## இன ஒதுக்கல் கொள்கையும் சமூகக் கலைகளும்

சமூக விஞ்ஞானத் துறை வேலைகள் இன ஒதுக்கல் கொள்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. 'பன்டுக்களுக்கு ஒதுக்கப்பட்ட' இடத்தில் ஆராய்ச்சி நடத்த அனுமதி பெற வேண்டும். இந்த அனுமதியைக் காரணம் காட்டாமல் எந்தச் சமயத்திலும் மறுத்து விடலாம். ஸ்தலத்தில் வேலை செய்பவர்களுக்கு தாங்கள் எப்போதும் போலீஸால் கண்காணிக்கப்பட்டு வருவதாக உணர்வு இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட இடத்தில் வேலை செய்யக் கிடைத்துள்ள அனுமதி எந்த நிமிஷத்திலும் ரத்தாகிவிடலாம் என்ற பயமும், வெளி நாட்டினருக்கு தென்னுப்பிரிக்காவில் இருக்க அனுமதி ரத்து செய்யப்படலாம் என்ற அச்சமும் இருந்து கொண்டேயிருக்கிறது. இதை விடப் பெரிய விஷயம் யாரைப்பற்றி ஆராயப்படுகிறதோ அந்த மக்கள் காட்டும் எதிர்ப்பும் சந்தேகமும் ஆகும். வெளிப்படையான எதிர்ப்பு இல்லாத இடத்திலும் கூட மக்கள் பேச முன்வர மாட்டார்கள். ஏனெனில் வெள்ளையர் ஒவ்வொருவரையும் உள்ளூர் அதிகாரியாகவோ போலீஸ் உளவாளியாகவோ கருதும் போக்கு நிலவுகிறது.

## இன ஒதுக்கல் கொள்கையும் கல்வியும்

1965ல் ஆப்பிரிக்க ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் வெள்ளை ஆசிரியர்களுடையதில் பாதிக்கும் குறைவாகும்—ஆண்களுக்கு 41.9%ம் பெண்களுக்கு 37.9%ம். 1965ல் வெள்ளை ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டதால் இந்த வேறுபாடு மேலும் அதிகமாயிற்று. கல்வியில் தனித்தனி வளர்ச்சி சிறந்த இன உணர்வுகளை வளர்ப்பதாக உரிமை பாராட்டுவது சாத்தியமேயல்ல. கல்வியமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகளே சுமுகமான இன உறவுகளைப் பாதித்துவிடும்.

## இன ஒதுக்கல் கொள்கையும் கலாசாலைகளும்

தனித்தனி வளர்ச்சிக் கொள்கையை உயர் கல்விக்கு விஸ்தரித்தது சர்வகலாசாலைகளில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. 1961ல் கேப்டவுன் சர்வகலாசாலையைவிட்டு 25 ஆசிரியர்கள் போய் விட்டனர். நேடால் 35 பேரை இழந்து விட்டது. விட்வாடர்ஸ் ராண்ட். சர்வகலாசாலையில் எட்டு பேராசிரியர்கள் பதவியும் 18 விரிவுரையாளர்கள் பதவியும் காலியாக உள்ளன என்று கூறப்பட்டது. வெளியேறிச் சென்ற விஞ்ஞானிகளில் சிலர் நாட்டின் அறிவுத் துறையில் பெரும் பங்கு வகித்தவர்கள்.

## இன ஒதுக்கல் கொள்கையும் கடற்கரையும்

இனப் பிரிவினை கடற்கரைக்கும் விஸ்தரிக்கப் பட்டுள்ளது. 1965ல் திட்ட அமைச்சர், முனிசிபல் பிரதேசத்திலுள்ள கடற்கரைகள் பல்வேறு இன மக்களுக்கெனத் தனித்தனியே ஒதுக்கப்பட வேண்டும் என்று அறிவித்தார். பல ஆண்டுகளாக வெள்ளையரல்லாதார் பயன்படுத்தி வரும் கடற்கரைகள், ஆனல் வெள்ளையர் குடியிருப்புக்கு எதிரே அமைந்துள்ளவை இனிமேல் வெள்ளையரால் மட்டுமே பயன் படுத்தப்படும்.

# இன ஒதுக்கல் கொள்கையும் திருச் சபையும்

தென் ஆப்பிரிக்கர்களில் 72%ம் தென் ஆப்பிரிக்க வெள்ளையர்களில் 94%ம் கிறிஸ்தவர்கள். தென் ஆப்பிரிக்காவிலுள்ள டச்சு சீர்திருத்தப்பட்ட சர்ச்சுகள் இன உறவுகளைக் கொள்கை ரீதியாக அணுகும் முறை, சீர்திருத்தப்பட்ட டச்சு சர்ச் ''இன்று உலகில் சமத்துவம் ஐக்கியம் பற்றிப் பொதுவாக நிலவும் கோஷத்துடன் நிபந்தனையின்றி தன்னைச் சேர்த்துக் கொள்ள முடியாது—பாவத்தினால் சீர்குலைந்துள்ள உலகத்தில் கிறிஸ்து இல்லாமல் மனிதர்கள் அடைய முயலும் மாற்று ஐக்கியமும் சகோதரத்வமும் ஆகும் அது'' என்பது தான். மனிதர்களுடைய ஐக்கியம் ஏற்கனவே கிறிஸ்துவிடம் உள்ளது. அது அசாதாரணமான ஐக்கியமாகும்—தென் ஆப்பிரிக்காவிலும் உலகில் இதர பகுதிகளில் போலவே கிறிஸ்துவிடம் நிலவும் ஐக்கியத்தை சரிவர உணராததற்கான காரணங்களில் ஒன்று இன வேறுபாடும், இனப் போராட்டங்களும் ஆகும்.

ஆப்பிரிக்கர்கள் குறித்து சர்ச்சினுடைய கொள்கையை விவரிக்க1950ல் சீர்திருத்தப்பட்ட டச்சு சர்ச்சுகளின் மாநாடு புளூம்ஃபான்டேனில் நடைபெற்றது. கடவுள் கருணையுடன் விதித்தபடி அவரவர்க்குரிய முடிவுக்குத் தெளிவான, விரைவான வழியில் ஒவ்வொரு பிரிவு மக்களையும் இட்டுச் செல்ல முயலும் வழி இன ஒதுக்கல் கொள்கை என்று தெளிவு படுத்தப்பட்டது. ஒரு பிரிவு மற்றொன்றுக்கு நிரந்தரமாக அடங்கியிருப்பதைத் தவிர்க்கக் கூடிய ஒரே வழி முழுவதுமாகப் பிரித்து வைப்பதுதான். இயற்கையில் ஒதுங்கிய இடங்கள் உண்மையான ''பன்டு தாயகங்க''ளாக மாற்றப்படவேண்டும். வளர்ச்சிக்கும் சுயாட்சிக்கும் ஐரோப்பிய தொழில் அமைப்பில் அவர்கள் இடத்தில் ஆப்பிரிக்கர் இடம் பெறுவதற்கும் பூரண வாய்ப்பு இருக்க வேண்டும்.

1960 மார்ச்சில் ஷார்ப்வில்லியிலும் லங்காவிலும் நடைபெற்ற கலவரங்களுக்குப் பிறகு நெடுர்டூட்ஸே ஜெரிஃபார்மீர்டே கெர்க்கைச் சேர்ந்த முக்கியமான ஒன்பது குருமார்கள் ஒரு அறிக்கை வெளியிட்டனர். அதில் ''உண்மைக்கு மாறாக, திரித்துக் கூறப்படும் தகவல்களால் தொடர்ந்து நமது நாட்டையும் மக்களையும் சர்ச்சையும் களங்கப்படுத்துவதை'' ஆட்சேபித்துள்ளனர். தென் ஆப்பிரிக்காவைக் கண்டிப்பது கிறிஸ்தவர்க்குரிய பொறுப்பிலிருந்து எப்போதும் எழுவது இல்லை; ஆனால் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர் அல்லாதாருக்கு ஆதரவாக, சுயநிர்ணய உரிமை என்ற கொள்கைக் கோஷத்துக்காக கிழக்கு நாடுகளை அதிகாரம் செய்ய மேனாடுகள் பாடுபடுவதன் அறிகுறிகளை அது காட்டுகிறது என்கிறது அறிக்கை.

''நெடுர்டூட்ஸே ஜெரிஃபார்மீர்டே கெர்க் தெளிவாக கூறியுள்ளது... மனித கவுரவத்தைப் பாதிக்காமல் நியாயமான கண்ணியமான வழிகளில் செய்யப்பட்டால் சுதந்திரமான, தெள்ளத் தெளிவான வளர்ச்சியை அது அங்கீகரிக்க முடியும். இந்தக் கொள்கை, குறிப்பாக அதன் ஆரம்பக் கட்டத்தில் ஓரளவு குழப்பத்தையும் கஷ்டங்களையும் ஏற்படுத்தவே செய்யும் என்பதையும் சர்ச் ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த அறிக்கையை வெளியிட்ட ஒன்பது குருமார்கள் பின்னர் இன ஒதுக்கல் கொள்கையின் தத்துவத்தை ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் ஆப்பிரிக்கர்களுடைய கூலி முறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றும் வெள்ளையரல்லாதார், வெள்ளையரால் மேலும் கண்ணியமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்றும் ''பொறுப்புள்ள, சட்டத்துக்கு அடங்கி நடக்கும்'' வெள்ளையரல்லாதார் ''அவர்களுடைய சிறந்த நலனைப்பற்றிக் கவலைப்படாத கிளர்ச்சிக்காரர்களுடைய வாக்குறுதிகளால் தவறான வழியில் செல்லக் கூடாது'' என்றும் கூறியுள்ளனர்.

1960 டிசம்பரில் கேப் டவுனிலுள்ள ஆங்ளிகன் ஆர்ச் பிஷப்புடைய முன் முயற்சியின் விளைவாக சர்ச்சுகளின் உலக கவுன்சில் தனது உறுப்பினர்களான எட்டு சர்ச்சுகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்த ஆறு பேர் கொண்ட தூது கோஷ்டியை அனுப்பியது. விட்வாடர்ஸ்ராண்ட் சர்வ கலாசாலை கட்டிடத்தில் கூடிப் பேசினர். ஐந்து சர்ச்சுகள் சர்வ இனத் தூது கோஷ்டிகளை அனுப்பின.

கோட்டஸ்லோ ஆலோசனை அறிக்கை எனப்படும் அவர்களது அறிக்கை, நியாயமற்ற பாகுபாட்டை நிராகரிப்பதில் ஒன்றுபட்டிருந்த போதிலும் இன ஒதுக்கல் கொள்கையின் அடிப்படை அம்சங்களில் முற்றிலும் மாறான கருத்துக்களைக் கொண்டுள்ளனர் என்று கூறியது.

ஏசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்ட யாரையும் நிறம் அல்லது இன அடிப்படையில் எந்த சர்ச்சிலிருந்தும் விலக்கக் கூடாது; நகர்ப் புறங்களிலும், இனப்பாகுபாடு உள்ள நகர்களிலும் வெள்ளையரல்லாதார் வழிபடுவதற்குப் போதிய வசதிகள் செய்து தர வேண்டும்; சர்க்காருக்கும் வெள்ளையரல்லாதாரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர்களுக்குமிடையே மேலும் பயனுள்ள முறையில் கலந்து பேசுவது நடைபெற வேண்டும். குறிப்பிட்ட சில சட்ட, சமூக, பண்பாட்டு அம்சங்கள் கலப்பு மணம் செய்வது சரியல்ல என்று செய்த போதிலும் அவற்றைத் தடுக்க வேதாகம அடிப்படையில் ஆதாரம் எதுவும் இல்லை.

இடம் பெயர்ந்து செல்லும் தொழிலாளர், ஆப்பிரிக்கர் குடும்ப வாழ்வில் சீர்குலைவு தோன்றும் விளைவை ஏற்படுத்துகின்றனர் என்பது சுட்டிக் காட்டப்பட்டது. வெள்ளையரல்லாதாரில் மிகப் பெரும்பான்மையினர் நல்ல விதமாக வாழ்வதற்குக் குறைந்த பட்சத் தேவையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தரத்துக்கும் மிகக் கீழான கூலியையே பெறுகின்றனர். வேலையை ஒதுக்கும் முறைக்குப் பதிலாக மேலும் சமத்வமுள்ள வேலை முறை கையாளப்பட வேண்டும். ஒருவர் குடியேறி வசிக்கும் இடத்தில் நிலம் வைத்துக் கொள்ள உரிமையும் நாட்டின் அரசாங்கத்தில் பங்கு கொள்ளும் உரிமையும் வயது வந்த எல்லா மனிதர்களுடையவும் கவுரவத்தின் ஒரு பகுதியாகும்.

கேப்பிலும் டிரான்ஸ்வாலிலும் உள்ள நெடுர் டூட்ஸே ஜெரிஃபார்மீர்டே கெர்க் சேர்ந்தாற்போல் மற்றொரு அறிக்கையை வெளியிட்டன. வேறுபாடு காட்டும் கொள்கையைக் கிறிஸ்தவக் கண்ணோட்டத்திலிருந்து ஆதரிக்க முடியுமென்று கூறி இன உறவுப் பிரச்சினைகளுக்கு உள்ள நடைமுறை சாத்தியமான ஒரே பரிகாரத்தைக் கூறியது. ஆப்பிரிக்காவின் நெடுர்டூட்ஸே ஹெர்வார்ம்டி கெர்க் மறுநாள் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் அவர்கள் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தாங்கள் ஆதரிக்க முடியாது என்று கூறி, இனப் பிரிவினையில் தங்களுக்குள்ள நம்பிக்கையை மீண்டும் வற்புறுத்தியிருந்தனர். அந்த வழியில்தான் கிறிஸ்தவ மத லட்சியங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய முடியும் என்று அவர்கள் நம்பினர்.

கோட்டஸ்லோ அறிக்கைக்கு எதிர்ப்பு தொடர்ந்து அதிகமாயிற்று. 1961 மார்ச்சில் நெடுர்டூட்ஸே ஜெரிஃபார்மீர்டே கெர்க் திருச்சபை கூடி உலக சர்ச் கவுன்ஸிலிலிருந்து விலகுவதென தீர்மானித்தது. இதற்கு ஆதரவாக 487 ஓட்டுகளும் எதிர்ப்பாக 13 ஓட்டுகளும் இருந்தன.

டிரான்வால் நெடுர்டூட்ஸே ஜெரிஃபார்மீர்டே கெர்க்கின் திருச்சபை1961 ஏப்ரலில் கூடி, கோட்டஸ்லோ தீர்மானங்கள் சர்ச்சின் கொள்கைக்கு மாறாக இருப்பதாலும், அரசாங்கத்துக்கு தர்ம சங்கடமான நிலையை ஏற்படுத்துவதாக இருப்பதாலும் உலக சர்ச் கவுன்சிலிலிருந்து விலகத் தீர்மானித்தது. அக்டோபரில் கேப் நெடுர்டூட்ஸே ஜெரிஃபார்மீர்டே கெர்க் திருச்சபை, கோட்டஸ்லோ அறிக்கையை நிராகரிப்பதென பெரும்பான்மையாகத் தீர்மானித்தது.

---

(1) தெ. ஆ. மாகாண சர்ச்; நெடுர்டூட்ஸே ஜெரிஃபார்மிர்டே கெர்க்—டிரான்ஸ்வால், மெதாடிஸ்ட், பிரஸ்பிட்டீரியன், காங்ரிகேஷனல் யூனியன், பன்டு பிரஸ்பிட்டீரியன், கேப் நெடுர் டூட்ஸே ஜெரிஃபார்மிர்டே கெர்க், ஆப்பிரிக்காவின் நெடுர் டூட்ஸே ஹெர்வார்ம்டே கெர்க்.

சீர்திருத்தப்பட்ட டச்சு சர்ச்சுகளின் தனிப்பட்ட உறுப்பினர்கள் தென்னாப்பிரிக்கரது இனவெறிப் போக்கைத் தொடர்ந்து மறுத்து வந்தனர். 1960 நவம்பரில் முன்னணியிலுள்ள பதினோரு மதவாதிகள் ஒரு புத்தகத்தை வெளியிட்டனர். தென்னாப்பிரிக்காவின் இனக் கொள்கையில் ஒரு புதிய கண்ணோட்டம் ஏற்பட வேண்டும் என்று அவர்கள் கூறியிருந்தனர்.

மத விரோதமான கருத்துக்களைக் கூறியதற்காகப் புத்தக ஆசிரியர்களில் ஒருவரான பேராசிரியர் கிஸ்ஸர் மீது 1961 டிசம்பரில் ஹெர்வார்ம்டி கெர்க் திருச்சபை முன்பு விசாரணை நடைபெற்றது. அவர் மீது கூறப்பட்ட மூன்று குற்றச் சாட்டுகளில் அவரை ஒன்றில் குற்றவாளியாகக் கண்டார்கள். அதை எதிர்த்து அவர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர விரும்பினார். ஆனால் வெளியிலேயே ஓர் உடன்பாடு (1963ல்) ஏற்பட்டு விட்டது. மீண்டும் அவர் சர்ச் குருமார் பதவியில் அமர்த்தப்பட்டார்.

1963 ஆகஸ்டில் தென் ஆப்பிரிக்காவின் கிறிஸ்தவக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. எல்லா இனங்களுக்கும் எல்லாப் பிரிவுகளுக்கும் இடம் கொடுப்பதாக அது இருந்தது. இக்கழகத்தின் இயக்குநர் பேயர்ஸ் நௌடம் என்பவர். நெடுர் டூட்ஸே கெர்க்கின் தெற்கு டிரான்ஸ்வால் திருச்சபைக்குத் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். கோட்டஸ்லோ தீர்மானத்தை ஆதரித்த இவர் சர்ச் மாத சஞ்சிகை ஒன்றின் ஆசிரியராகவு மிருந்தார்.

சீர்திருத்தப்பட்ட டச்சு சர்ச்சின் சில பகுதிகளிலிருந்து கிறிஸ்தவக் கழகம் தாக்குதலுக்காளாயிற்று. உதாரணமாக ஸ்டெல்லன்பாஷைச் சேர்ந்த பேராசிரியர் வெர் ஹோஃப் கிறிஸ்தவக் கழக உறுப்பினர்கள் முடிவு செய்ததில் தவறு இழைத்து விட்டதாகவும் ''பூர் கெர்க்''கை விட ஆப்பிரிக்க மக்களுடைய பிரச்சினைகளையும் அபிலாஷைகளையும் கழகம் நன்கு புரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றுவதாகவும் கருதினார்.

இன ஒதுக்கல் கொள்கை கிறிஸ்தவ சமயத்துக்கு உடன் பாடுடையதுதான் என்பதைத் தென்னாப்பிரிக்காவிலுள்ள பல பிரிவினர் மறுத்தனர். 1947,48ல் நடைபெற்ற மெதாடிஸ்ட் பிரிவு மாநாடு ஒவ்வொரு மனிதருக்கும் அடிப்படை மனித உரிமைகள் பெற உரிமையுண்டு என்று தெளிவாகக் கூறியது. 1952ல் மாநாடு இன ஒதுக்கல் கொள்கையை நிராகரித்தது. அது நடைமுறை சாத்தியமில்லாதது. தென்னாப்பிரிக்காவிலுள்ள எல்லாப் பிரிவு மக்களுடைய நலனுக்கும் எதிரானது. உன்னதக் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்குப் பொருந்தாதது என்று கூறியது.

**1960**-ல் இன உறவுகளில் கல்விக்கான ஒரு திட்டத்தை மாநாடு வகுத்தது. பல இனங்களின் ஆராய்வுக் குழுக்கள், குருமார்களிடையே கருத்துப் பரிமாற்றம், பல்வேறு சர்ச் ஸ்தாபனங்களும் பரஸ்பரம் விஜயம் செய்வது ஆகியவை அடங்கியதாகும் இது.

1961ல் மாநாடு தன்னுடைய அதிகார பூர்வமான தஸ்தாவேஜிகளிலும் சட்டங்களிலும் இனம் பற்றிக் குறிப்பிடுவதை அகற்றுவது என்று தீர்மானித்தது. 1963ல் மாநாடு சேத் மோகிடிமி என்ற ஆப்பிரிக்கரைத் தன் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

தென்னாப்பிரிக்க மாகாணத்தின் 1950ம் ஆண்டு திருச்சபை இன உறவுகள் சம்பந்தமாகப் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

''இன அடிப்படையில் மட்டும் மனிதர்களிடையே வேறுபாடு கற்பிப்பது கிறிஸ்தவ மதத்தின் கோட்பாடுகளுக்குப் பொருந்தாததாகும் என்று மாநாடு நம்புகிறது. சமீபத்தில் செய்யப்பட்ட சட்டத்தின் விளைவு உரிமைகள், சலுகைகள், வாய்ப்புகளில் ஏற்றத் தாழ்வுகள் நிலவும் சமூக வகுப்புகளாக மக்களைப் பிரிப்பதாக இருக்குமென்று நம்புகிறோம். ஐரோப்பியரல்லாதார் நிரந்தரமாகத் தாழ்ந்த நிலைக்கு ஒதுக்கப் படுவார்கள். இந்தக் காரணத்தினால் ஒரு கிறிஸ்தவ சமூகத்தின் சிறந்த அம்சமாக இருக்க வேண்டிய மனித மதிப்புக்குப் பொருந்தாதது என்று இச் சட்டத்தைக் கண்டிக்கிறது.''

ஆங்கிளிகன் சர்ச்சைச் சேர்ந்த பலர் தென்னாப்பிரிக்க அரசாங்கத்தின் கொள்கையை எதிர்த்து தனித்தனியே அறிக்கை விட்டனர். சோபியா நகரத்தை அழித்ததை டிரெவர் ஹடில்ஸ்டன் குறிப்பாக ஆட்சேபித்தார். புனிதர் ஆம்ப்ரோஸ் ரீவ்ஸ் அரசாங்கக் கொள்கையை வெளிப்படையாக எதிர்த்தார். அவர் 1960 செப்டம்பரில் நாடு கடத்தப் பட்டார். நிறவெறியை எதிர்த்து நடந்த அமைதியான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்காக புனிதர் மைக்கேல் ஸ்காட் சிறையிலடைக்கப்பட்டார். தென் மேற்கு ஆப்பிரிக்காவின் நிலைமையை எடுத்துச் சொல்ல ஐ.நா.வுக்கு சென்ற அவரை மீண்டும் தென்னாப்பிரிக்காவுக்குள் அனுமதிக்கவில்லை.

1963ல் தென்னாப்பிரிக்காவிலுள்ள பல ஆங்கிளிகன் சர்ச் குருமார்கள் இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டித்து கருத்து வெளியிட்டனர். 1963ல் வெளிநாட்டு விவகார அமைச்சர் தேசியக் கட்சிக் கூட்டத்தில் இவ்வாறு கூறியதாகச் சொல்லப்பட்டது. தென்னாப்பிரிக்காவின் அரசியல் பிரச்சினைகளில் தலையிடுவது தங்கள் சர்ச்சுகளுடைய நலனுக்கு உகந்ததல்ல என்பதை குருமார்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய நேரம் வந்து விட்டது. 1963ல் கூடிய குருமார்களின் திருச்சபை இந்த அறிக்கையை வெளியிட்டது. ''புளூம்ஃபான்டேன் திருச்சபையில் கூடியுள்ள தென்னாப்பிரிக்க மாகாண சர்ச்சின் குருமார்களுக்கு இந்தச் சூழ்நிலையில் இதனைக் கூறுவது அவசியமாகத் தோன்றுகிறது. எந்த ஒரு நாட்டினுடைய சமூக, அரசியல் அல்லது பொருளாதார வாழ்வுக்கும் தவறானது, தீமை பயப்பது என்று சர்ச் கருதுகிற எதையும் பகிரங்கமாகவும் அச்சமின்றியும் கண்டிக்க வேண்டும் என்ற ஏகமனதான கருத்தை வலியுறுத்துகிறோம். அரசாங்கத்துக்குப் பணிந்து போவதா அல்லது கடவுளுக்குப் பணிந்து போவதா என்ற போராட்டம் எழும்போது கடவுளுக்குத்தான் நாம் கீழ்ப்படியவேண்டும்.''

1952, 57, 60, 62ல் தென்னாப்பிரிக்காவின் கத்தோலிக்க் குருமார்கள் நாட்டிலுள்ள நிலைமை பற்றி கூட்டாகக் கடிதங்கள் எழுதினர். 1957ல் ''இன ஒதுக்கல் கொள்கை பற்றிய அறிக்கை'' என்ற கடிதம் அதனைக் கண்டித்து மேலும் கூறியது: ''படிப்படியான மாறுதல் இருக்க வேண்டும்... ஆனால் மாறுதல் வரத்தான் வேண்டும். இல்லா விட்டால் நமது நாட்டின் எதிர்காலம் அழிவுக்கு இடம் தருவதாக இருக்கும்... இன வேறுபாடின்றி எவரும் பூரண உரிமைகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகச் செய்வதற்கான நியாயமான அறிவுக்குப் பொருந்தும் கொள்கையை இதற்கென வகுக்க வேண்டும்.''

இன ஒதுக்கல் கொள்கை வந்த பிறகு தென்னாப்பிரிக்காவில் இரு பெரிய மத விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

தென்னாப்பிரிக்க மாகாண சர்ச் குருமார்கள் நிலையில் புலப்படும் முதலாவது விவாதம் பழமையானது. தன்னால் சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு தீமையானது என்று கருதும் சட்டங்களை இயற்றும் அரசாங்கத்துக்கு ஒரு கிறிஸ்தவப் பிரஜை எந்த அளவுக்கு கீழ்ப்படிவது என்பது பற்றியும் இச் சட்டங்களைக் கண்டிக்க அதன் தலைவர்களுக்குள்ள உரிமை பற்றியும் கூறுவது.

இரண்டாவது வாதம் இந்த நூற்றாண்டுக் குரியது. கிறிஸ்தவர்களான தலைவர்களைக் கொண்ட நாட்டில் இன ஒதுக்கல் கொள்கையின் மூலம் அது தொடங்கப்பட்டுள்ளது. இன சமத்வம் என்பதற்கு என்ன அர்த்தம் கொடுப்பது, எல்லா கிறிஸ்தவர்களுடையவும் சகோதரத்வம் என்ற கொள்கை பல இனங்களைக் கொண்ட சர்ச்சுகளுக்கு இடமளிக்கிறதா இல்லையா என்பது பற்றியதாகும்.

தென்னாப்பிரிக்காவுக்குள் சீர்திருத்தப்பட்ட டச்சு சர்ச்சுகளுக்கிடையிலும் ஆங்கிலம் பேசும் சர்ச்சுகளுக் கிடையிலும் தான் முக்கியமாக இந்த வேறுபாடு. இவர்களுக் கிடையிலும் கூட விவாதம் தொடர்ந்து நடக்கிறது. டச்சு சர்ச்சைச் சேர்ந்த கிஸ்ஸரும், நாடும் மற்றவர்களும் ஆங்கில சர்ச்சைச் சேர்ந்தவர்களைப் போன்ற மதக் கருத்துக்களையே கொண்டிருந்தனர். திருச்சபை கூறும் கருத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற கட்டளை உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நிலை இருந்தது. ஆங்கில சர்ச்சுகளுக் கிடையிலும் கூட ஆப்பிரிக்கர்களுக்கு பிரிந்து வாழும் கொள்கையை போதித்த சில மதத் தலைவர்கள் இருந்தனர்.

இந்த விவாதம் தென்னாப்பிரிக்காவுக்குள் மட்டும் அடங்கியிருக்கவில்லை. 1950லும் 1960லும் உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்களிடையே நடந்து வந்த விவாதத்தின் ஒரு பகுதியாகவே அது இருந்தது. ஆயினும் 1965க்குள் பல இனங்களுக்கும் இடம் தருவதாக சர்ச் இருக்க வேண்டும் என்ற கருத்து தென்னாப்பிரிக்காவுக்கு வெளியிலுள்ள பெரும்பாலான சர்ச்சுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இன சமத்வம் என்பதற்குப் பல இனங்கள் என்ற அர்த்தம் ஏற்பட்டது. இன வேற்றுமைக்கு எதிரானது இது. தென்னாப்பிரிக்காவிலுள்ள டச்சு சர்ச்சுகள் வர வரத் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றன. அவர்களில் சில பிரிவினர் உலக சர்ச் கவுன்ஸிலிலிருந்து விலகியதால் மட்டுமல்ல. ஆனால் இனப் பிரச்சினை சம்பந்தமான அவர்களுடைய மதக் கருத்துக்களால்.

( 24ம் பக்கத் தொடர்ச்சி )

எழுத்தாளர்கள் எழுத முடியாமல் இருப்பதும் மக்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளாமல் இருப்பதும் ஆகிய இவையெல்லாம், இத் தீமை எத்துணை ஆழம் சென்றிருக்கிறது, என்பதை எடுத்துக் காட்டுகின்றன. கருத்துப் பரிமாற்றம் என்ற ஒன்றே இல்லாமல் போய்விட்டது. இத்தகைய ஒரு தீமை, சட்ட பூர்வமாக, வேண்டுமென்றே செய்யப்பட்டது என்பதை வெளி உலகம் அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. இக் கொடுமை ஆராய்ந்து வகுக்கப்பட்ட ஒன்றாகும்.

இன ஒதுக்கல் கொள்கையின் அடிப்படையில் சமுதாயத்தைப் பிரிக்க வேண்டுமென்றும், நீண்ட காலம் இது இப்படியே நிலை பெற்றிருக்க வேண்டுமென்றும் நினைக்கின்றவர்கள், சமுதாயத்தின் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாறிக்கொள்வதைத் தடை செய்ய வேண்டுமென்றே நினைக்கின்றார்கள். கருப்பர்களும் வெள்ளையர்களும் தொடர்பு துண்டிக்கப்பட்டு ஒருவரையொருவர் அறிந்துகொள்ளாமல் செய்யப்பட வேண்டும்; இதுதான் நிறவெறிக் கொள்கையின் உண்மையானப் பொருள். தென் ஆப்பிரிக்கச் சமுதாயத்தில் ஆழமான காயத்தை உண்டாக்குவது இதுதான்.

உண்மையான நஷ்டம் எது எனில் அன்றாட மனித உறவுக்குள் ஏற்படும் கொடுமையேயாகும். இரு திறத்தாரும் கலந்து ஏறுகின்ற பஸ்களில் வெள்ளைக் குழந்தைகள் வெள்ளையர் அல்லாதவர்கள் பக்கத்தில் உட்காருவதைவிட நின்று கொண்டே போகலாம் என்று நினைத்து நிற்கின்றார்கள். ஒரு மனிதன் மற்றொரு மனிதனை முற்றிலும் ஒதுக்கித் தள்ளுகின்ற இச் சூழ்நிலை சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டப் பிரிவினையைக் காட்டிலும் கொடூரமானதாக உள்ளது. இத்தகைய ஓர் ஒதுக்கல் நிலையில் இருந்து, மனித சமுதாயம் முழுவதும் ஒன்று என்று நினைக்கின்ற நினைவே அற்றுப் போகும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஒரு மனிதன் அடையும் துன்பத்தை, அவனை மனிதன் என்று கருதாத காரணத்தால், மற்றொரு மனிதன் அறிந்து கொள்ளாமலே விட்டுவிடுகிறான்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் வளர்கின்ற குழந்தைகள் கருப்பர்கள் சிலரைச் சுட்டுத் தள்ளுவதுபோல் கற்பனை செய்து கொள்வது இயல்பாக நடைபெறக் கூடியதே. அதேபோல் கருப்புக் குழந்தைகள் இதுவரை தாம் அனுபவித்த கொடுமைகளுக்குப் பழி வாங்கும் முறையில் வெள்ளையர்களைச் சித்திரவதை செய்வதாக நினைத்துக்கொள்வதும் இயல்பேயாகும்.

இன்றையத் தென் ஆப்பிரிக்காவில் தோற்றுவிக்கப்பட்டுள்ள சூழ்நிலை இதுவேயாகும். மனக் கோட்டங்கள் உண்மையாகவே உள்ளன. இம்சை முறையில் குழப்பங்கள் தோன்றுவதும் எந்த நேரத்திலும் எதிர்பார்க்கப்படுவதாகவே உள்ளது. அரசியல்வாதிகள் ஏதோ ஒரு சிலர் கூறுகின்ற கூற்றுக்கள் என்று இவற்றை நினைத்து விடக்கூடாது. அரசியலின் அடிப்படையில் தோன்றிய பயன் என்றும் ஒதுக்கிவிடக் கூடாது. மக்களினிடையேயுள்ள உறவுகள் இதுவரை மிக மோசமான நிலையை அடைந்துவிட்டது என்பதும், அது மீண்டும் நல்ல நிலையை அடைய முடியாதபடி இன ஒதுக்கல் சட்டங்கள் தடுக்கின்றன என்பதும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுதல், புரிந்துகொள்ளுதல், நட்புப் புரிதல் ஆகியவை இயலாத காரியம் என்பதும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

சமுதாயத்தைப் பொறுத்தமட்டில் இன ஒதுக்கல் கொள்கை விளைவித்த பயன் இதுவாகும். எங்கும் நிறைந்துள்ள அதன் வெறித் தாண்டவம் இதுவே யாகும். அது ஏதாவதொன்றைத் தோற்றி வளர்க்கின்றது என்றால், பகைமையைத்தான் வளர்க்கின்றது. அதன் பயனாக விளைவது மன மாச்சரியமும் குருதி சிந்தும் போராட்டமுமே யாகும்.

## நம்மைப் பற்றி....

இந்தப் பத்திரிகை தமிழ் மொழியில் முதன் முறையாக வெளி வருகிறது. இதுவரை யுனெஸ்கோவினால் ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், ஜெர்மன், அராபிக், அமெரிக்கன், ஜப்பானிஸ், இத்தாலிய மொழிகளில் ஒன்பது பதிப்புக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆங்கிலத்தில் ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞானம், கலாசார ஸ்தாபனம் என்ற பெயரிலுள்ள முதல் எழுத்துக்களைக் கொண்டு இது யுனெஸ்கோ எனப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சங்கத்தின் கலாசார அமைப்புக்களில் இது ஒன்று. ஐக்கிய நாடுகள் சங்கம் பற்றி எல்லோருக்கும் தெரியும். அநேகமாக உலகிலுள்ள எல்லா நாடுகளுடையவும் அரசியல் ஸ்தாபனம் அது. இரண்டாவது உலகப் போரின் முடிவில் உலகில் அமைதியை நிலை நாட்டவும் சர்வதேச தகராறுகளை சமாதான முறைகளில் தீர்த்து வைக்கவும் ஏற்படுத்தப்பட்டது. ஐ.நா. சங்கம் அரசியலமைப்பாக இருப்பதாலும் நாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருப்பது இயல்பாதலாலும் அவ்வப்போது ஐ.நா சங்கம் எடுத்துக் கொள்ளும் அல்லது மேற் கொள்ளாமல் இருக்கும் நடவடிக்கைகள் குறித்து கருத்து வேறுபாடுகள் இருக்கவே செய்யும். ஆனால் இம் முயற்சியின் பெரிதும் பயனுள்ள விளைவு அரசியல் தொடர்பில்லாத ஸ்தாபனங்கள் பலவற்றை ஏற்படுத்தியதாகும். இவற்றுள் நன்கறிந்த சில அமைப்புக்கள் யுனெஸ்கோ, உலக சுகாதார ஸ்தாபனம், யுனிஸெஃப் போன்றவையாகும். இவற்றின் நோக்கங்கள் குறித்து கருத்து வேறுபாடுகள் இல்லை. உலகின் எந்த ஒரு மூலையிலும் இருக்கக் கூடிய பசியையும் பிணியையும் அறியாமையையும், இன்னல்களையும் பின் தங்கிய நிலையையும் உலகம் முழுவதற்கும் அக்கறையுள்ள பிரச்னையாக கருதும் நிலையில் நாம் இருப்பது மகத்தானதுதான். உதவியும் ஆறுதலும் அளிப்பதற்கும் துன்பங்களைப் போக்குவதற்கும் உயர்நிலைக்கு வர உதவி தேவைப்படுவோருக்கு கைகொடுப்பதற்கும் உலகம் ஓர் பெருங் குடும்பமாக கருதப்படுகிறது.

ஐ. நா. வின் ஆதரவில் இயங்கும் அரசியல் தொடர்பு இல்லாத அமைப்பான யுனெஸ்கோ கல்வி, விஞ்ஞானம் கலாசாரத் துறைகளில் உலகுக்கு பணியாற்றுவதில் அக்கறை கொண்டிருக்கிறது. பல திட்டங்களில் இந்தியாவுக்கு அது உதவியிருக்கிறது. அதன் சமீப திட்டங்களில் ஒன்று ஸ்ரீரங்கம் ரங்கநாதஸ்வாமி ஆலயத்தைப் புதுப்பித்துப் பாதுகாக்க உதவுவதாகும். தன் பணியின் ஓரங்கமாக 'கூரியர்' என்ற பெயரில் ஒரு சஞ்சிகையை அது வெளியிட்டு வருகிறது. 'கூரியர்' என்ற சொல்லுக்கு செய்தி எடுத்துச் செல்லுபவன் என்று பொருள்.

பயனுள்ள இந்தப் பத்திரிகை இந்திய மொழிகள் சிலவற்றிலும் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று கருதப்பட்டது. நமது மாணவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு விஷயங்களையும் அறிந்து கொள்ள வாய்ப்பு இருக்க வேண்டுமல்லவா? இதற்கிணங்க யுனெஸ்கோவும் அதனுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசிய கமிஷனும் தமிழ், இந்தி, ஆகிய இரு மொழிகளில் இதனை வெளிக் கொணரும் திட்டத்திற்கு உதவ முன் வந்தன. தமிழ் மொழி பதிப்பைப் பொறுத்த வரையில் தமிழக அரசும் இதன் மதிப்பை உணர்ந்து நிதியுதவி செய்ய முன் வந்துள்ளது. இதனை வெளிக் கொணரும் பொறுப்பை தென் மொழிகள் புத்தக டிரஸ்டிடம் ஒப்படைப்பது என்றும் அவர்கள் முடிவு செய்தனர்.

தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் லாப நோக்கமின்றி கடந்த பனிரெண்டாண்டுகளாக சேவை புரிந்து வருகிறது. அதன் நிர்வாக் குழுவில் தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களின் பெரும்பாலான துணை வேந்தர்கள் உள்ளனர். பயனுள்ள நூல்களை நான்கு தென் மொழிகளிலும் நியாயமான விலையில் வெளியிடுவது இதன் நோக்கமாகும். இது வரை தமிழில் 174 நூல்கள் உட்பட 536 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. தென் மொழிகளில் ஏதாவதொன்றை மட்டுமே அறிந்தவர்களுக்கு உலக அறிவை வழங்குவதே இந் நூல்களின் நோக்கமாகும். கூரியர் சஞ்சிகையை தமிழில் வெளியிடுவதும் அதன் பொது லட்சியத்துக்கு இணைந்த ஒன்றாக இருப்பதால் டிரஸ்ட் மகிழ்ச்சியுடன் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

இந்த சஞ்சிகையின் ஆண்டுச் சந்தா பதினோரு இதழ்களுக்கு ரூ. 10.50-ம், கல்வி ஸ்தாபனங்களுக்கு ரூ. 9-50ம், ஆகும். தனிப் பிரதி விலை ரூ. ஒன்று. பொது மக்களும் பொது நூலகப் பொறுப்பாளர்களும் இதற்கு ஆதரவு அளிப்பார்கள் என்று நம்புகிறோம். பள்ளி, கல்லூரி நிர்வாகிகள் இந்த சஞ்சிகை தங்கள் மாணவர்களுக்கு கிடைக்கும்படி செய்து உலகப் பேரறிஞர்கள் வழங்கும் பயனுள்ள அறிவுச் செல்வம் அவர்களுக்குக் கிட்டும்படி செய்தால் மகத்தான சேவை செய்தவர்களாவார்கள்.

பிரதிகள் உங்களுக்கு முறையாக உரிய காலத்தில் கிடைக்க சந்தாத் தொகையை அனுப்பிப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

**தென் மொழிகள் புத்தக டிரஸ்ட், 441, பூந்தமல்லி ஹைரோடு சென்னை - 10**

Edited and published by S. Govindarajulu for the Southern Languages Book Trust, 441, Poonamallee High Road, Madras-10 and printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-26.

